Vol.1, Issue 8 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

ஜனவரி 2019

Rotary



ROTARY SERVICE PROJECTS

# VIDEO CONTEST

2018-19



Calling all **Rotary clubs in Zones 4,5 & 6A** to participate in this contest and win exciting cash prizes.

Club Presidents/Secretaries can submit one video (not more than **three minutes)** of the club's service projects implemented in the year, under The **Rotary Foundation's Six Areas of Focus:**

- **Peace and conflict prevention/ resolution**
- **Disease prevention and treatment**
- **Water and sanitation**
- **Maternal and child health**
- **Basic education and literacy**
- **Economic and community development**

**The contest will be judged by an esteemed panel convened by RID C Basker.**

The **top 3 entries** (from each of the **RI Zones of 4, 5 & 6A** India) will win the following cash awards:

**1st Prize: INR 100,000**

**2nd Prize: INR 50,000**

**3rd Prize: INR 25,000**

Rotary

The last date of submission of videos is **May 31, 2019.**

Video entries may be sent to **rotaryprojectsvideo@gmail.com** or mailed to **Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai - 600 008, Tamil Nadu.**

Alternatively, clubs can upload the video on **YouTube** and share the URL link to the above mail id.

**Please include the following too:**
Club Name and District, Contact Person and Email Id/Phone number, Name of the Video/Project and the URL Link.

Only Hi-res videos will be accepted. Videos can be in the format: **MOV, MP4 (MPEG4), AVI, WMV, FLV, MKV, VOB.**

# உள்ளே


**12** **தாராள மனம் படைத்தவர்களுக்குப் பாராட்டு விருந்து**
மும்பைக்கு RIPE மார்க் மலோனி மற்றும் கேயின் வருகையை கௌரவிக்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட TRF விருந்தில், தந்தை மற்றும் மகன் - நிக் மற்றும் மனோஜ் இஸ்ரானி - AKS உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர்.

**16** **இந்தியா ரோட்டராக்ட் அமைப்பு வசீகரிக்கிறது: மார்க் மலோனி**
RIPE மார்க் மலோனி சூரத் ரோட்டராக்டர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பிரத்தியேக கலந்துரையாடல் நிகழ்ச்சியில் ரோட்டராக்ட்டை முன்னெடுத்திச் செல்வதைப் பற்றி தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

**20** **குழந்தைகளுக்கு புதுவாழ்வு தரும் சென்னை தெற்கு ரோட்டரி**
RC மெட்ராஸ் சவுத் - கேரிங் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் என்ற திட்டத்தின் மூலம் குழந்தைகளின் வாழ்வைக் காப்பாற்றுகிறது.

**32** **மகளீரால் ஜொலித்தது நாசிக்**
D 3030 ரோட்டரியில் இருக்கும் பெண்களுக்காக ஒரு பிரத்தியேக மாநாட்டை நடத்தியது.

**46** **குப்பைகளை எறியாதீர்கள், விதைப் பந்துகளை எறியுங்கள்**
RC மாபுகா, விதைப்பந்து திட்டத்தின் வாயிலாகக் கோவாவை பசுமை பூமியாக மாற்ற முயற்சிக்கிறார்கள்.

**50** **சங்கத்திற்கு விருது பெற்று தந்த கூமர் நடனம்**
RC ஜோத்பூர் சன்ஸ்கர் ராஜஸ்தானின் பாரம்பரிய நடனத்திற்குப் புத்துணர்வு அளிக்கிறார்கள்.

**52** **வண்ணமயமான கொலம்பியா**
கண்களை கவரும் கரீபியன் கடற்கரைகள், சுவாரஸ்யமான இயற்கை காட்சிகள், ருசியான காபி மற்றும் சாக்லெட்டுகளுக்கு இந்த தெற்கு அமெரிக்க நாட்டைச் சுற்றிப்பாருங்கள்.

**62** **ஒடிசி அசைவில் ஒரு கவிதை**
ஒடிசாவின் இந்த அழகான நடனத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.




















**அட்டை:** மார்க் மலோனி மற்றும் கேய் சூரத்தில் தின்கா-சிக்கா என்னும் அநாதை ஆசிரமத்தில்.

**படம்:** ஜெயஸ்ரீ

# மடல்கள்

## சில விமர்சனங்கள், சில கருத்துக்கள்

*ஒரு ரொட்டேரியன் என்ற வகையில், களையெடுப்பதன் நன்மைகள் என்ற தலைப்பிட்டு டிசம்பர் மாத இதழில் வந்திருந்த தலையங்கம் மனதைப் புண்படுத்துவதாக இருந்தது... ஒவ்வொரு மாதமும் RI தலைவர், TRF ட்ரஸ்டீ சேர் ஆகியோரிடமிருந்து ஊக்கச் செய்திகளைப் பெறுவோம், அவர்கள் ஒருபோதும் சாதகமற்ற கண்ணோட்டங்களை வழங்கமாட்டார்கள். ஆனால், பெருவாரியான எண்ணிக்கையில் வலம்வரும் ஒரு பிராந்திய ரோட்டரி பத்திரிக்கையின் ஆசிரியர் களையெடுப்பது பற்றிப் பேசுவது, நாமே குடியிருக்கும் கண்ணாடி வீட்டின் மீது கற்களை வீசுவது போல் இருக்கிறது. சாதாரண ரொட்டேரியன்கள் கலந்துகொள்ளாத ஒரு சந்திப்பின் போது ரோட்டரியில் உள்ள நல்லது, கெட்டது பற்றி விவாதிக்கப்பட்டது. அந்நிகழ்வு ஒரு செய்தியாக பத்திரிக்கையிலும் வெளியாகியிருந்தது. ஆனால் நீங்களே கருப்பு ஆடுகள், வடுக்கள், குறைபாடுகள் போன்ற சொற்களைப் பிரயோகித்து தலையங்கம் எழுதியிருப்பது கவலைக்குரிய ஒன்று.*

*ரோட்டரி நியூஸ் சாதக எண்ணம் கொண்ட செய்திகளைப் பரப்ப வேண்டும். களையெடுப்பதற்கு RI-யில் தன்னியல்பான திருத்த நடவடிக்கைகள் இருக்கிறது. அதுவே பிரச்சனைகளை கவனித்துக் கொள்ளும். உங்கள் தலையங்கம் பற்றி பல ரொட்டேரியன்கள் என்னிடம் வருத்தம் தெரிவித்தனர், எனவே தான் இந்தக் கடிதத்தை எழுத வேண்டியதாயிற்று. இத்தகு சாதகமற்ற போக்கிலான தலையங்கங்கள் இனி தயவுசெய்து வேண்டாம்.*

*சம்பத் குமார், RC கோயம்புத்தூர் எலைட் — D 3201*

*தலையங்கம், ரொட்டேரியன்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் குறிப்பிடும் போது, தோட்டக் கலையில் தேறிய ஒருவர்/விவசாயி களையெடுப்பதன் நன்மைகள் குறித்து நன்கு அறிந்திருப்பார் என்று சரியாகச் சுட்டிக்காட்டுகிறது. செந்நாரைகளின் கூட்டத்தில் ஒரேயொரு பறவை மட்டும் வேறு திசையில் திரும்புகிற புகைப்படமும் அதுச ார்ந்த கதையையும் ஒட்டி RI பிரசிடென்ட் அளித்துள்ள செய்தி அர்த்தமுள்ளதாகவும், கவனிக்கத்தக்க ஒன்றாகவும் இருக்கிறது.*

*RIPN சுஷில் குப்தாவுடன் நேர்காணல் சுவாரஸ்யமாக இருக்கிறது. "நீங்கள் எதைச் செய்தாலும் முழுமனதோடு செய்யுங்கள், அதை அதன் இறுதி இலக்கு வரை எடுத்துச் செல்லுங்கள், நீங்கள் ஒரேயொரு திட்டப்பணியை மட்டுமே செய்யலாம், ஆனால் அதைச் செம்மையாகச் செய்யுங்கள்" என்று அவர் இறுதியாகக் கூறுவது உண்மையிலேயே எம்மைச் சிந்திக்க வைக்கிறது. இதழாசிரியர் தன் சிறப்புக் கட்டுரையில் கூறியுள்ள படி, ரவி சங்கரின் எளிமையும் சாந்தமும் போற்றத்தக்கது.*

*சில DGகளின் வேண்டுகோளுக்கு இணங்க ரோட்டரி நியூஸ் தமிழிலும் வெளிவருவது மகிழ்ச்சியளிக்கிறது. எனினும் இது எல்லா பிராந்திய மொழிகளுக்கும் பொருந்துமா, குறிப்பாக நாங்கள் வாசிக்க விரும்பும் மலையாளத்திலும் வெளிவருமா?*

*M T பிலிப், RC திருவனந்தபுரம் சபர்பன் — D 3211*

*RI தலைவர் ரோட்டரியின் குறைகள் பற்றிப் பேசலாம், ஆனால் அதையே திரும்பத் திரும்பச் சொன்னால், ரோட்டரியின் அந்தஸ்து கெட்டுவிடும்.*

*அறிவுடை நம்பி, RC கோயம்புத்தூர் மான்செஸ்டர் — D 3201*

*ரஷீதா பகத் எழுதிய ஒளிவுமறைவின்றி பேசலாமே என்ற கட்டுரையை பார்த்ததில் மகிழ்ச்சி. அது ரோட்டரியின் நல்லது, கெட்டது என இரு அம்சங்களிலும் கவனம் செலுத்துகிறது. ரோட்டரி சங்கங்களே ரோட்டராக்டர் களுக்கு அந்நியத் தன்மை ஏற்படுத்துகின்றன என்ற தலைவர் பேரியின் கருத்தை நானும் ஆதரிக்கிறேன்.*

*RC கோயம்புத்தூர் மெட்ரோபாலிஸ், தீக்காயத்தில் பிழைத் தவர்களுக்காக நடத்திய நெருப்புக்குப் பிறகு நம்பிக்கை என்ற திட்டம் உண்மையிலேயே ரோட்டரியின் அற்புதமான பணி.*

*நவீன் R கார்க், RC சுனம் — D 3090*

*நான் ஏழாண்டுகள் ஒரு ரொட்டேரியனாக இருக்கிறேன், ஆனால் நான் பெரிதாக எதையும் செய்யவில்லை: ரவி சங்கர் என்ற நேர்காணலைப் படித்தபோது தான் முதல் முறையாக உந்தப்பட்டு உணர்ச்சிவசப்பட்டேன். அவர் ஓர் உண்மையான கர்ம யோகி, சமூகத்துக்குச் சேவையாற்றுவதே அவரது இலட்சியம் என்பதை அந்தக் கலந்துரையாடலிலிருந்து நான் கிரகித்துக் கொண்டேன். 'படித்த கோமாளிகள்' பற்றிய அவருடைய கருத்துக்கள் ஒரு மறுக்கமுடியாத உண்மை மற்றும் எதார்த்தம். பெரும்பாலானவர்கள் பெயருக்கும் புகழுக்காகவுமே ரோட்டரி தளங்களைப் பயன்படுத்தும் நிலையில், 'வெளிவேச ரொட்டேரியன்கள்' என்ற சொல் கூட ஒரு மென்மையான விமர்சனமே. இந்த நேர்காணலை எல்லா ரொட்டேரியன்கள் மற்றும் ரோட்டராக்டர்களுக்கும் திரும்பத் திரும்பப் புகட்டுவது அவசியம். மிக உன்னதமான ரொட்டேரியன் ரவி மற்றும் குடும்பத்தினருக்கு நல்வாழ்த்துக்கள். ரோட்டரி இத்தகைய மேலும் பல உத்தமர்களை உருவாக்கும் என்று நம்புகிறேன்.*

*Dr முரளிதர், RC கோலார் தங்கவயல் — D 3190*

## சிறந்த இதழ், சுவாரஸ்யமான கட்டுரை

RI தலைவர் ரஸ்ஸின், ரொட்டேரியன்களை செந்நாரை போன்று மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளும் வேளையில், உறுப்பினர்களின் எண்ணிக்கை 12 லட்சத்தில் நிற்பது பற்றி கவலை தெரிவித்துள்ளார்.

விலகிச் சென்ற உறுப்பினர்களை மீட்க வேண்டும் என்பது என் ஆலோசனை. TRFக்கு ரூ.100 கோடி நன்கொடை வழங்கிய D ரவிசங்கர் மற்றும் பவோலாவிற்கு பாராட்டுக்கள். பலரிடம் செல்வம் உள்ளது, ஆனால் அதை வழங்கத் தெம்பு இல்லை.

PDG அஸ்வினிகர் — D 3260

# மடல்கள்

## தமிழில் ரோட்டரி நியூஸை வரவேற்கிறோம்

தமிழில் ரோட்டரி நியூஸை பெற்ற போது அதிர்ச்சியாக இருந்தது. ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் ரொட்டேரியன்களின் கனவு நனவாகிவிட்டது. சகாப்தங்களாக நாமெல்லாம் பேசிவந்த ஒன்றை நீங்கள் சாதித்துவிட்டீர்கள். இந்தத் தமிழ்ப் பதிப்பு, ரோட்டரியை மேலும் விரிவான வட்டத்துக்கு எடுத்துச் செல்லும். வாழ்த்துக்கள்.

சண்முக சுந்தரம் D
RC திருச்சங்கோடு — D 2982

எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட தமிழ் பதிப்பு, ஆங்கில இதழ் போன்றே சுவாரஸ்யமாக உள்ளது; அதேயளவுக்கு நல்ல வடிவமைப்பு, அச்சு, செய்தியடக்கம் மற்றும் புகைப்படங்களைக் கொண்டுள்ளது. தமிழில் மொழியாக்கம் பிரம்மாதம்.

பாலித்தீனை கைவிட்டு காகித உறைகளைப் பயன் படுத்தத் தொடங்கியதற்கு, வாழ்த்துக்கள்.

R ஸ்ரீனிவாசன்
RC மதுரை மிட் டவுன் — D 3000

ரோட்டரி நியூஸை தமிழில் வெளியிட்டதற்கு நன்றி. இது ரோட்டரிக்கும் எங்கள் சங்கங்களுக்கும் ஒரு பெருமைக்குரிய தருணம்.

R P சிவக்குமார்
RC நாகூர் —D 2981

ரோட்டரி நியூஸில் நான் பக்கங் களைப் புரட்டி மட்டுமே பார்ப்பேன், எனக்கு ஆங்கிலம் வாசிக்கத் தெரியாது. இந்த மாதம், பத்திரிக்கை தமிழில் வந்தபோது குதூகலம் அடைந்தேன். இப்போதுதான் முதல் முறையாக, ரொட்டேரியன்கள் நாடு முழுக்க ஆற்றும் சிறந்த பணிகளைப் பற்றி நான் வாசிக்கிறேன். என் தாய்மொழியில் இதழை வெளியிட்டதற்கு நன்றி.

D சண்முகம்
RC பன்ருட்டி — D 2981

## அதிர்ச்சி

எனக்கு டிசம்பர் இதழ் தமிழில் வந்துள்ளது. இது கவர்னர்களின் முடிவு என்று என்னிடம் சொன்னார்கள். உண்மையிலேயே அதிர்ச்சி தரும் தகவல். கவர்னரின் முடிவுப்படி நீங்கள் செயல்படுவதாக இருந்தால், தயவு செய்து கவர்னரிடமிருந்தே இதழ் சந்தாவை வசூலித்துக் கொள்ளுங்கள், சங்கத்திடமும், உறுப்பினர்களிடமும் கேட்காதீர்கள்.

நீலகிரி போன்றதொரு பகுதியில், உறுப்பினர்கள் பல்வேறு கலாச்சாரப் பின்னணி கொண்டவர்கள், எனவே உறுப்பினர்களின் ஒப்புதலின்றி அவர்களது சார்பாக DGகள் முடிவெடுப்பது சரியன்று. தயவுசெய்து சங்க தலைவர்களை கலந்த பிறகு திருத்த நடவடிக்கை எடுக்கவும். பல உறுப்பினர்கள், எப்படி மீண்டும் ஆங்கிலத்துக்கு மாறுவது என்று தெரியாமல் தவிக்கலாம். தயவுசெய்து சென்ற இதழையும், வருங்காலத்தில் அனைத்து இதழ்களையும் ஆங்கிலத்திலேயே எனக்கு அனுப்புங்கள்.

R செந்தில் குமார்
RC ஊட்டி டவுன் — D 3202

## சுற்றுச்சூழலுக்கு இணக்கமான காகித உறை

சுற்றுச்சூழலுக்கு இணக்கமான காகித உறையில் வந்ததைக் கண்டபோது அருமையாக இருந்தது. பாலித்தீனை கைவிட்டு காகித உறைக்கு மாறியதற்கு எமது வாழ்த்துக்கள்.

விக்ரம் சங்காணி
RC ராஜ்கோட் — D 3060

கேரளாவில் ரோட்டரியின் நெற்பயிர் திட்டம் வெள்ளச் சீற்றத்திலிருந்து தப்பியது என்ற கட்டுரை சுவாரஸ்யமாக இருந்தது. கேரளாவை புனரமைப்போம் என்ற ஜெய்ஸ்ரீயின் செய்தியறிக்கை ரொம்ப அருமை. ரவி சங்கரை தன் எதார்த்த நிலைக்காக பாராட்டுவோம் என்று TRF RID C பாஸ்கர் எழுதிய செய்தி உத்வேகமூட்டியது.

டேனியல் சிட்டிலப்பள்ளி
RC கள்ளூர் — D 3201

## MAT கேபராஸ் பாராட்டு

RIP மேட் கேபராஸ், இந்தியாவில் ரோட்டரியின் எழுச்சியைக் கண்டு பூரித்துவிட்டார். ரவி சங்கரும், பவோலாவும் TRFக்கு வழங்கிய அளப்பெரிய நன்கொடைக்கு நன்றிதெரிவித்துப் பாராட்டினார். மேலும், இந்தியாவில் ரோட்டரி செய்யும் அரும்பணிகள் குறித்து உண்மையான சித்தரிப்பை வழங்க உதவும் ரோட்டரியின் இந்தியத் தலைமைக்கும், அவர்களின் இதழியல் திறமைகளுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அருண் குமார்
RC பரிபாடா — D 3262

84 வயதாகிறது. ரொட்டேரியன் ரவி சங்கர் நமது ஃபவுன்டேஷனுக்கு ரூ.100 கோடி நன்கொடை அளித்த பிறகும், தான் பாராட்டுக்குரிய வகையில் பெரிதாக எதுவும் செய்யவில்லை என்று சொல்வதை வாசித்த போது மனம் நெகிழ்ந்தேன். அவர் வழங்கவேண்டும் என்று நினைத்து வழங்கிவிட்டார், அவ்வளவுதான். உலகம் முழுவதும் உள்ள ரொட்டேரியன்கள் அவருக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

குழந்தைத் துஷ்ப்பிரயோகம் பற்றி பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஓர் அருமையான திட்டப்பணி RC பாண்டிச்சேரி பீச் டவுன், D 2981 சங்கத்தால் நடத்தப்பட்டது. மேலும், ஸ்மார்ட்போனுக்கு அடிமையாவது பற்றியும், எப்படி மகிழ்ச்சியான குழந்தையை வளர்த்து ஆளாக்குவது என்பது பற்றியும் அதில் அலசப்பட்டது. சங்கத்தினருக்கு வாழ்த்துக்கள்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் மலைக்கோட்டை — D 3000

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்.* rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | S Piraiyon |
| RI Dist 2982 | DG | Nirmal Prakash A |
| RI Dist 3000 | DG | RVN Kannan |
| RI Dist 3011 | DG | Vinay Bhatia |
| RI Dist 3012 | DG | Subhash Jain |
| RI Dist 3020 | DG | Guddati Viswanadh |
| RI Dist 3030 | DG | Rajiv Sharma |
| RI Dist 3040 | DG | Gustad Anklesaria |
| RI Dist 3053 | DG | Priyesh Bhandari |
| RI Dist 3054 | DG | Neeraj Sogani |
| RI Dist 3060 | DG | Pinky Patel |
| RI Dist 3070 | DG | Barjesh Singhal |
| RI Dist 3080 | DG | Praveen Chander Goyal |
| RI Dist 3090 | DG | Dr Vishwa Bandhu Dixit |
| RI Dist 3100 | DG | Deepak Jain |
| RI Dist 3110 | DG | Arun Kumar Jain |
| RI Dist 3120 | DG | Stuti Agrawal |
| RI Dist 3131 | DG | Dr Shailesh Palekar |
| RI Dist 3132 | DG | Vishnu S Mondhe |
| RI Dist 3141 | DG | Shashi Sharma |
| RI Dist 3142 | DG | Dr Ashes Ganguly |
| RI Dist 3150 | DG | Ramesh Vangala |
| RI Dist 3160 | DG | Konidala Muni Girish |
| RI Dist 3170 | DG | Ravikiran Janradan Kulkarni |
| RI Dist 3181 | DG | Rohinath P |
| RI Dist 3182 | DG | Abhinandan A Shetty |
| RI Dist 3190 | DG | Suresh Hari S |
| RI Dist 3201 | DG | A Venkatachalapathy |
| RI Dist 3202 | DG | Dr E K Ummer |
| RI Dist 3211 | DG | E K Luke |
| RI Dist 3212 | DG | K Raja Gopalan |
| RI Dist 3231 | DG | C R Chandra Bob |
| RI Dist 3232 | DG | Babu Peram |
| RI Dist 3240 | DG | Dr Sayantan Gupta |
| RI Dist 3250 | DG | Kumar Prasad Sinha |
| RI Dist 3261 | DG | Nikhilesh M Trivedi |
| RI Dist 3262 | DG | Bhabani Prasad Chowdhury |
| RI Dist 3291 | DG | Mukul Sinha |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |
| TRF Trustee | Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RIDE | Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RIDE | Kamal Sanghvi | RI Dist 3250 |

### Executive Committee Members (2018–19)

| | |
|---|---|
| DG Rajiv Sharma<br>Chair – Governors Council | RI Dist 3030 |
| DG Pinky Patel<br>Secretary – Governors Council | RI Dist 3060 |
| DG Subhash Jain<br>Secretary – Executive Committee | RI Dist 3012 |
| DG A Venkatachalapathy<br>Treasurer – Executive Committee | RI Dist 3201 |
| DG Shashi Sharma<br>Member – Advisory Committee | RI Dist 3141 |



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org



Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# நலிந்த விவசாயிகளுக்கு உதவி தேவை

மாறுதல் ஒன்றே மாறாதது என்று சொல்வார்கள். அதுதான் நம் வாழ்க்கைச் சக்கரத்தையும் இயக்குகிறது. அண்மையில் ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் மூன்று மாநிலங்களில் ஆட்சியில் இருந்த கட்சி அகற்றப்பட்டது.

இதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய மூன்று மாநிலங்களிலும் விவசாயப் பிரச்சினை பரவலாக இருந்ததும், அவசர நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு உதவாவிட்டால், வேளாண் பிரச்சினை அதிகரிக்கும் நிலை இருந்ததும் காரணம்.

இவற்றுக்குச் சிகரமாக நாசிக்கைச் சேர்ந்த ஒரு விவசாயி விளைவித்த 750 கிலோ வெங்காயத்துக்கு வெறும் ரூ.1,064 மட்டுமே கிடைத்தது. வெறுப்பு, விரக்தி காரணமாக அந்தப் பணத்தை பிரதம மந்திரியின் நிவாரண நிதிக்கு அளித்தார் என்ற செய்தி வெளியானது.

உலகம் முழுதும் உள்ள ரோட்டரியினருக்கு சுற்றுச்சூழலைப் பசுமையாக்குவது முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாகும். மனிதர்களின் பேராசை காரணமாக அளவுக்கு அதிகமாகக் கட்டடம் கட்டுவதற்காகவும் இதர காரணங்களுக்காகவும் மரங்கள் வெட்டப்படுவது குறித்து கவலைப்படுகின்றனர்.

இதன் காரணமாக பசுமையாக்கும் முயற்சியில் பல்வேறு சங்கங்கள் மரக்கன்றுகளை விநியோகிக்கிறார்கள்.ரோட்டரி விநியோகித்த மரக்கன்றுகளில் வீட்டுத் தோட்டங்களுக்குரிய காய்கறிகள், முருங்கை ஆகியவற்றுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.


வீட்டுத் தோட்டத்தை வைத்திருப்போர் பீன்ஸ், தக்காளி போன்ற எளிமையாக விளைவிக்கக் கூடிய காய்கறிகளுக்கும் விலை அதிகமான உரம், எரு உள்பட இடுபொருட்களைப் போடவேண்டிய கஷ்டம் இருக்கும், அலுத்துப் போவார்கள். அப்படிச் செய்யும்போதுதான் 750 கிலோ வெங்காயத்தை விளைவிக்க விவசாயிகள் படும் கஷ்டம் தெரியும். அப்படி செலவு செய்து கஷ்டப்பட்டு உற்பத்தியாகும் வெங்காயம் ஒரு கிலோ ரூ.1 என்று விலை போகும்போது விவசாயி நலிந்து போவது புரியும். இந்த நிலை நமக்கு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. நமது விவசாயிகள் உற்பத்தி செய்யும் உணவுக்கு ஏற்ற விலையைத்தான் நாம் தருகிறோமா?

இன்று காலையில் தி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் நான் உணவுப் பண்டங்களின் விலை உற்பத்தியாயளரின் கையைக் கடிக்கும் (How food prices lost their bite) என்ற கட்டுரையைப் படித்தேன். சிறந்த வேளாண்மை செய்தியாளர் ஹரீஷ் தாமேதரன் எழுதியுள்ளார்.

அதில், 2016ம் ஆண்டு செப்டம்பர் முதல் 2018 நவம்பர் வரையிலான காலத்தில் நுகர்வோர் உணவுக்கான பண வீக்கம் பொதுவான பணவீக்கத்தை விட மோசமாக இருப்பதைப் பதிவு செய்துள்ளார். அந்த 27 மாதங்களில் 2017 மே, ஜூன், ஜூலை மற்றும் 2018 அக்டோபர், நவம்பர் ஆகிய 5 மாதங்களில் அதிகாரபூர்வமான ஆண்டு நுகர்வோர் உணவு விலைக் குறியீடு (Official Consumer Food Price Index) சரிந்துள்ளது. அதன்படி காய்கறிகள், பருப்பு வகைகள், சர்க்கரை, முட்டை ஆகியவற்றை நுகர்வோர் குறைந்த விலை கொடுத்து வாங்குகிறார்கள். அதே சமயம் வெங்காயம் ஒரு கிலோ ரூ.80 முதல் ரூ.100 வரை விற்கப்படுகிறது. தக்காளி ரூ.80, துவரம்பருப்பு ரூ.200 என விலை எகிறிவிட்டது.

அதே சமயம் விவசாயிகளுக்கான உணவு விலை குறியீடு (Food Price Index) எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைக் கவனிக்கத் தவறிவிட்டோம். இந்த நிலையில் விவசாயிகளின் குழந்தைகள் விவசாயத்துக்குச் செல்லாமல் படித்துவிட்டு அரசு உத்தியோகத்தில் சேர விரும்புவதில் வியப்பில்லை. விவசாயிகள் விவசாயத் தொழிலைக் கைவிட்டுவிட்டால், என்ன விளைவு ஏற்படும் என்று யோசித்துப் பாருங்கள். நமக்காக கடுமையாக உழைக்கும் விவசாயிகளுக்கு இந்திய மக்களாகிய நாம் நிறைய கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு உரிய வருவாய் கிடைப்பதை உறுதி செய்யவேண்டும். எனவே, உணவுப் பொருட்களுக்குச் சிறிது கூடுதலான விலையை அளிப்போம்.

ரஷீதா பகத்



# பன்முகத்தன்மை ரோட்டரியின் வலிமை

BE THE INSPIRATION

அன்பு சக ரோட்டேரியன்களே,

தொழில் சேவை என்பது இதுதான் என்று வகுத்துக் கூறிவிட இயலாது. ஆனால், தொழில் சேவை குறித்து விளக்குவது எளிது. எளிமையாகச் சொன்னால், ரோட்டரி எங்கெல்லாம் இருக்கிறதோ நமது ரோட்டரி பணியாளர்கள் வாழ்கிறார்களோ அதுதான் தொழில் சேவை. ரோட்டரியின் கொள்கைகளுடன் தொண்டு செய்கிறோமோ அதுதான் தொழில்.

நான் வெளிநாட்டில் சுகாதாரப் பணிகளில் பல ஆண்டுகளாக ஈடுபட்டேன். பணி நிறைவுபெற்று, பஹாமாஸுக்குத் திரும்பியபோதுதான் என் நாட்டுக்கு மக்கள் நலப் பணிகளின் தேவை குறித்து அறிந்தேன். பழைய முறை மருத்துவ வசதிகள்தான் இருந்தன. போதுமானதாகவும் இல்லை. சிகிச்சை பெற வெளிநாடு செல்ல இயலாதவர்களுக்கு அளிக்க வேண்டிய வசதிகளும் தேவைகளும் இல்லை.

அமெரிக்காவில் எனக்குப் போதிய அனுபவம் கிடைத்திருக்காவிட்டால், எனது நாட்டின் சுகாதார நிலைமையை மாற்றியிருக்க முடியாது. எனது சேவையை ஒரு நல்ல காரியத்துக் காகவும் பஹாமாஸ் மக்களின் நல்வாழ்வுக்காக வும் பயன்படுத்த முடியும் என்பது எனக்குத் தெரிந்தது.

ரோட்டரி இயக்கம் எனது வாழ்க்கைப் பயணத்தின் ஓர் அங்கமாகி விட்டது. கூட்டு முயற்சிக்கு எல்லையே இல்லை என்று பால் ஹாரிஸ் கூறியதே ரோட்டரியின் அடிப்படை மந்திரம் எனக் கண்டறிந்தேன். அது என் பணியில் நிஜமாகவே இருந்தது. பஹாமாஸ் நாட்டில் மக்கள் நல்வாழ்வுப் பணிக்கு நான் ஒருவன் மட்டும் தன்னந் தனி ஆளாக எதையும் செய்ய முடியவில்லை. பல ஆண்டுகளாகப் பணியில் உள்ள மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஆகியோருடன் இணைந்து மாற்றத்தை நிகழ்த்த முடிந்தது. எனது குறிக்கோள் அனைவரும் பகிர்ந்துகொண்ட குறிக்கோள் ஆகும். அதுவே நிஜமாகிவிட்டது.

ஒவ்வொரு தொழிலுக்குரிய கண்ணியத்தையும், மருத்துவ உதவி கோரி வரும் ஒவ்வொரு அழைப்பையும் மதிக்க வேண்டும் என்று ரோட்டரி வலியுறுத்துகிறது.

ரோட்டரி நிறுவனர்கள் மருத்துவர் களோ, அமைதியின் காவலர்களோ அல்ல. வழக்கறிஞர், சுரங்கப் பொறியாளர், நிலக்கரி வியாபாரி, அச்சக உரிமையாளர் ஆகிய நால்வர் தான். இப்படி வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டோர் தான் ரோட்டரிக்குப் பலம் அளித்தனர். அந்த பன்முகத் தன்மைதான் நமது வகைப்பாட்டு நடைமுறையில் பிரதி பலிக்கிறது. ரோட்டரி சங்கத்தில் உள்ள பலதரப்பட்ட தொழில்வல்லுநர்கள் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தொண்டு புரிய வேண்டும் என்ற இலக்குக்கு காரணமாக இருப்பது அதுதான்.

பால் ஹாரிஸ், ஒவ்வொரு ரோட்டரி அமைப்பினரும் தான் சார்ந்த தொழிலுக்கும் ரோட்டரியின் கோட்பாட்டுக்கும் பாலமாக இருக்கிறார் என்கிறார். அது இப்போதும் உண்மை. நாம் ரோட்டரி சங்கக் கூட்டங்களில் வாரம் ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோதான் செலவிடுகிறோம். பெரும்பாலானோர் நமது நேரத்தை நாம் சார்ந்த பணிகளில்தான் ஈடுபடுத்துகிறோம். அந்த கால அவகாசத் தையும் ரோட்டரி தொண்டு புரிய நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்தலாம். அது நம்முடன் பணியாற்றுவோருக்கும் சமுதாயத்திற்கும் ஒரு தூண்டுகோலாக அமையும்.



பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# நான்கு வழியும் நன்கு பின்பற்றுவோம்

ரோட்டரி என்ற அமைப்பில் இணைந்துள்ள நாம் தனித்தனியாக வித்தியாசமான வர்களாக இருக்கலாம். எனினும், இந்த சமுதாயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற பொது நோக்கம் கொண்டவர்கள் நாம். அதைப் போல் ரொட்டேரியன்கள் என்ற முறையில் பொதுவான நெறிகளுக்கு உட்பட்டவர்கள். சில தொழிலதிபர்களும் விளையாட்டு வீரர்களும் நெறிகளைக் கடைப்பிடித்த நிகழ்வுகள், சொன்னதைச் செய்தது ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டு எழுதுகிறேன்.

இந்தியாவின் கிழக்கு மாநிலத்தில் ஒரு தொழிற்சாலை நிர்வாகம் தனது ஆலையில் ரத்த தான வங்கியை அமைத்துள்ளது. அங்கு ஒரு தொழிலாளி ஒரு புட்டி ரத்தத்தைத் தானமாக அளித்தால், அவருக்கு ஒரு நாள் விடுப்பு அளிக்கப்படும். அத்துடன், ரத்த தானம் செய்து 7 நாட்களில் மேலும் ஒரு நாளை அவர் விடுப்பாக எடுத்துக் கொள்ளலாம். இதனால், தொழிலாளர்கள் தங்களது விடுமுறை நாட்களுடன் சேர்த்து ஈட்டு விடுப்பை (Compensatory off) எடுத்துக் கொள்ளத் தொடங்கினர். இதன் விளைவாக ஆலையில் தொழிலாளர் பணியாற்றும் நேரம் குறைந்து போனது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் தலைவரிடம், உங்களது கோட்பாட்டினால், அவர்கள் விடுப்பு அதிகம் எடுத்து, வேலை நேரம் பாதிக்கப்படுகிறதே. அவர்கள் கொடுத்த ரத்தம் 24 மணி நேரத்தில் உடலில் சுரந்துவிடும் என்பதும் உங்களுக்குத் தெரியும். பின், ரத்தம் அளித்த 7 நாட்களுக்குள் அவர்களுக்கு மீண்டும் ஒரு விடுப்பு ஏன்? என்று கேட்கப்பட்டது. அவர் புன்னகையுடன், சிலர் மட்டும்தான் இப்படி விரும்பி ரத்தம் தானம் செய்கிறார்கள். இவர்கள் விடுப்பு எடுப்பதால் வேலை நேரம் பாதிக்கப்படுகிறது என்று கூறுகிறீர்களே. ரத்தத்தைப் பெறும் மனிதரின் வேலை நேரம் காக்கப்படுகிறதே, அதைக் கவனிக்கவில்லையா? இப்படி நல்லது நடக்கும் என்பதற்காக 16 மணி பணி நேரம் வேலை பாதிக்கப்பட்டால், அதற்குத் தயார் என்றார். அவரது கூற்று பலருக்கு உத்வேகம் அளிக்கிறது.

லாபத்தையே பார்க்காமல், மக்களின் நலன் மீது கவனம் செலுத்துவது புத்திசாலித்தனமான முதலீடாகும். செயலில் நெறிகள் இல்லாவிட்டால் உண்மையான விளையாட்டு வீரர் அல்ல என்பதற்கு ஓர் உதாரணம்.

இந்தியாவுக்கும் மேற்கிந்திய தீவுகளுக்கும் இடையில் 1966-67ம் ஆண்டுகளில் மும்பையில் நடந்த டெஸ்ட் மாட்சில் இந்திய விக்கெட் கீப்பர் குந்தரன் 9வது ஆட்டக்காரராக இறங்கினார். வேகப் பந்து வீச்சாளர் ஹால், வீரர்கள் சார்லி கிரிஃபித், லான்ஸ் கிப்ஸ், அணித் தலைவர் கேரி சோபர்ஸ் ஆகியோரைக் களத்தில் எதிர்கொண்டு, 79 ரன்களைக் குவித்தார். ஆரம்பத்தில், அவர் ஒற்றை இலக்க ரன் மட்டும் எடுத்து, கிப்ஸ் பந்து வீச்சில் கேரி சோபர்ஸிடம் கேட்ச் கொடுத்தார். அது அவுட் என்று நினைத்தனர். ஆனால், உலகின் சிறந்த ஆல்ரவுண்ட் வீரர் சர் கேரி சோபர்ஸ் நேர்மையையும் கண்ணியத்தையும் கடைப்பிடித்தார். அது தவறாகப் பிடிக்கப்பட்ட கேட்ச். குந்தரன் அவுட் ஆகவில்லை என்று அவர் அறிவித்தார். நினைத்துப் பாருங்கள், அப்போதெல்லாம் டி.வி. கிடையாது. “ஸ்லோ மோஷன்” அசைவில் காட்சியைக் காணும் வசதியில்லை. இருந்தாலும் சோபர்ஸ் நேர்மையாக நடந்துகொண்டார்.

அப்போது, அவரிடம், நடுவர் அவுட் கொடுத்துவிட்டாரே, பின் ஏன் அதை ரத்து செய்தீர்கள்? என்று கேட்டபோது, சோபர்ஸ், நான் சத்தியத்தின் மீதும் நேர்மையான விளையாட்டின் மீதும் நம்பிக்கை கொண்டவன் என்று பதிலளித்தார்.

இதுதான் ரோட்டரியின் நான்கு அடிப்படைக் கோட்பாடுகள் போன்றது.

உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்! உத்வேகம் அளிப்போராக இருங்கள்! இணைந்திருங்கள். நம்மால் முடியும் நாம் உலகுக்கே உந்துதலாக இருப்போம்!



C பாஸ்கர்
டைரக்டர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# District Wise TRF Contributions as on November 2018

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 25,860 | 2,886 | 0 | 8,000 | 36,746 | 137 | 3.0 |
| 2982 | 28,191 | 922 | 0 | 243 | 29,356 | 182 | 6.3 |
| 3000 | 9,688 | 1,000 | 5,265 | 4,265 | 20,218 | 16 | 0.3 |
| 3011 | 34,657 | 278 | 28,811 | 15,072 | 78,818 | 58 | 1.7 |
| 3012 | 63,249 | 50 | 237,026 | 8,800 | 309,125 | 67 | 2.0 |
| 3020 | 10,468 | 47,466 | 0 | 5,000 | 62,934 | 42 | 1.1 |
| 3030 | 8,774 | 0 | 0 | 0 | 8,774 | 4 | 0.1 |
| 3040 | 2,009 | 0 | 9,930 | 0 | 11,939 | 3 | 0.1 |
| 3053 | 36,457 | 0 | 0 | 0 | 36,457 | 2 | 0.1 |
| 3054 | (22,796) | 0 | 30,714 | 0 | 7,918 | 19 | 0.3 |
| 3060 | (3,001) | 53 | 83,132 | 18,000 | 98,183 | 394 | 9.6 |
| 3070 | 63,448 | 300 | 0 | 0 | 63,748 | 188 | 6.5 |
| 3080 | 28,618 | 4,696 | 15,527 | 0 | 48,841 | 31 | 1.0 |
| 3090 | 18,071 | 0 | 0 | 0 | 18,071 | 51 | 2.5 |
| 3100 | 14,348 | 475 | 0 | 0 | 14,823 | 37 | 2.2 |
| 3110 | 23,493 | 1,087 | 16,887 | 0 | 41,467 | 39 | 1.0 |
| 3120 | 36,719 | 0 | 148,015 | 0 | 184,734 | 47 | 1.5 |
| 3131 | 137,021 | 1,227 | 144,695 | 33,203 | 316,145 | 412 | 8.1 |
| 3132 | 5,745 | 310 | 11,471 | 20,000 | 37,526 | 9 | 0.2 |
| 3141 | 423,611 | 8,169 | 672,634 | 26,000 | 1,130,414 | 489 | 9.7 |
| 3142 | 188,925 | 50 | (438) | 0 | 188,537 | 389 | 12.3 |
| 3150 | 51,119 | 0 | 60,437 | 275,467 | 387,023 | 418 | 12.0 |
| 3160 | 5,445 | 580 | 0 | 0 | 6,025 | 17 | 0.7 |
| 3170 | 45,795 | 2,470 | 4,679 | 0 | 52,944 | 82 | 1.5 |
| 3181 | 44,934 | 691 | 0 | 103 | 45,728 | 147 | 4.9 |
| 3182 | 38,916 | 0 | 6,516 | 0 | 45,432 | 127 | 4.0 |
| 3190 | 44,265 | 3,561 | 10,005 | 1,449,359 | 1,507,190 | 276 | 5.8 |
| 3201 | 29,052 | 3,468 | 141,161 | 0 | 173,682 | 88 | 1.7 |
| 3202 | 7,364 | 3,565 | 0 | 0 | 10,928 | 9 | 0.2 |
| 3211 | 16,812 | 0 | 0 | 1,515 | 18,327 | 92 | 2.1 |
| 3212 | 71,590 | 6,473 | 5,250 | 23,000 | 106,312 | 61 | 1.5 |
| 3231 | 9,834 | 1,319 | 0 | 0 | 11,152 | 154 | 5.2 |
| 3232 | 71,090 | 178 | 58,071 | 1,000 | 130,339 | 90 | 2.1 |
| 3240 | 44,835 | 208 | 525 | 0 | 45,567 | 75 | 2.6 |
| 3250 | 995 | 1,205 | 6,444 | 0 | 8,645 | 9 | 0.2 |
| 3261 | 9,527 | 1,000 | 100 | 2,000 | 12,627 | 8 | 0.3 |
| 3262 | 7,228 | 1,000 | 900 | 3,000 | 12,128 | 14 | 0.4 |
| 3291 | 48,104 | 0 | 52,383 | 800 | 101,287 | 98 | 2.7 |
| **India Total** | **1,680,459** | **94,686** | **1,750,142** | **1,894,827** | **5,420,114** | **4,381** | **3.1** |
| 3220 **Sri Lanka** | 64,800 | 2,200 | 2,150 | 7,000 | 76,150 | 120 | 6.7 |
| 3271 **Pakistan** | 28,093 | 26,413 | 2,275 | 0 | 56,780 | 14 | 1.0 |
| 3272 **Pakistan** | 5,423 | 2,069 | 0 | 0 | 7,492 | 19 | 0.7 |
| 3281 **Bangladesh** | 83,719 | 2,900 | 33,859 | 14,000 | 134,478 | 122 | 2.2 |
| 3282 **Bangladesh** | 28,357 | 610 | 0 | 3,000 | 31,967 | 61 | 1.5 |
| 3292 **Nepal** | 39,216 | 5,628 | 75,519 | 0 | 120,362 | 45 | 1.0 |
| **South Asia Total** | **1,930,067** | **134,506** | **1,863,945** | **1,918,827** | **5,847,344** | **4,762** | **3.0** |
| **World Total** | **40,363,047** | **10,860,952** | **7,358,031** | **9,673,469** | **68,255,498** | | |

Source: RI South Asia Office




# A PART OF HISTORY

The german kitchen.
Since 1898.

CERTIFIED ★★★ TROPICALISED ★★★ KITCHENS

Head Office and Showroom:

A- 248, Mahipalpur Extension, NH-8,
Delhi-Gurgaon Road, New Delhi-110037

[T] +91-11-46102000 [E] info@hacker-kitchens.com

**Häcker**
kitchen.germanMade.

www.haecker-india.com
www.haecker-kuechen.com

| AHMEDABAD | BANGALURU | CHENNAI | COIMBATORE | DELHI |
|---|---|---|---|---|
| 9879538977 | 9740999350 | 9442081111 | 9500210555 | 9313134488 |

| HYDERABAD | INDORE | JAIPUR | KOCHI | LUDHIANA | MUMBAI | MANGALURU | THRISSUR |
|---|---|---|---|---|---|---|---|
| 9700058285 | 9425803599 | 9414058718 | 9895058285 | 9815048222 | 9322987229 | 7899119955 | 7025991000 |

# தாராளமனம் படைத்தவர்களுக்குப் பாராட்டு விருந்து!

ஜெய்ஸ்ரீ

அமைதி என்பது ரோட்டரியின் ரத்தத்தில் ஊறியது. ரோட்டரி மேற்கொள்ளும் அமைதி முயற்சிகள் ஏதோ மாநாடுகளிலோ மேல்மட்டத்தின் அளவிலோ நடப்பதில்லை. பல ஆண்டுகளாக பல நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள தனிப்பட்ட நல்லுறவின் மூலமாகவே அது நிறைவேறுகிறது. எந்த நாடாக இருந்தாலும் அங்குள்ள சமுதாயம் ஆரோக்கியமாக இருக்கிறது என்பதுதான் அங்கே ரோட்டரி அமைப்பு வலுவாக இருப்பதற்கும் செயல்படுவதற்கும் உரைகல்லாகத் திகழ்கிறது. அதுதான் காலம் காலமாக ரோட்டரி கட்டிக் காத்து வரும் பண்பும் ஆகும்.

இந்தக் கருத்தை RIPE மார்க் மலோனி ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி உறுப்பினர்கள், மும்பையில் ரோட்டரி தலைவர்களிடையே பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார். அந்த சொசைட்டியின் உறுப்பினர்களாக நிக் இஸ்ரானி, மனோஜ் இஸ்ரானி ஆகியோர் சேர்க்கப்படும் நிகழ்ச்சியை அவர் நடத்திவைத்தார். நிக் இஸ்ரானி வடக்கு பாம்பே ரோட்டரி சங்கத்தில் 1993ம் ஆண்டு முதல் உறுப்பினராக இருந்து வருகிறார். மனோஜ் இஸ்ரானி பாம்பே ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக 2008ம் முதல் இருக்கிறார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர்கள் ராஜேந்திர சாபு, கல்யாண் பானர்ஜி, RIDE கமல் சங்கவி, PRID அசோக் மகாஜன், நயன்தாரா மற்றும் அறக்கட்டளை பெரிய அளவிலான நன்கொடை ஆலோசகர்கள் (Endowment and Major Gift Advisors) சாம் பதிபண்ட்லா, அசோக் பன்ஜவானி ஆகிய ரோட்டேரியன்கள் மற்றும் ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி (AKS) உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

நான் அறிந்தவரையில், பெரும்பாலான இந்திய ரொட்டேரியன்கள் மிகவும் பரந்த மனப்பான்மை கொண்டவர்கள். பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத் தலைவர் D ரவிங்கர் உங்களிடையில் இருக்கிறார். அவர்தான் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு ரூ.100 கோடியை அள்ளிக் கொடுத்தார். அது அவரது சொத்தில் 75 சதவீதம் என்பது வியப்புக்குரிய உண்மை. போலியோ ஒழிப்புக்காக ரூ.80 கோடியை வாரி வழங்கிய ராஜ்யஸ்ரீ பிர்லா ஆகிய பெருங்கொடையாளர்களும் உங்களிடையில் இருக்கின்றனர். இப்போது, ரோட்டரியின் உறுப்பினர்களாக உள்ள தந்தை நிக் இஸ்ரானி 2.50 லட்சம் டாலரையும் (சுமார் ரூ.1,78,80,375) மகன் மனோஜ் 5 லட்சம் டாலரும் (சுமார் ரூ.3,58 கோடி) வழங்கியுள்ளனர். உங்களது பரந்த மனப்பான்மை மிகவும் பாராட்டுக்குரியது என்றார் மலோனி.

மலோனியும் அவரது மனைவி கேய் ஆகியோர் மும்பைக்கு ஐந்தாவது முறையாக வந்தனர். இதற்கு முன் 1998ம் ஆண்டு நானும் மனைவி கேயும் வந்திருந்தோம். அறிமுக உரையில் ரோட்டரியில் அதிகம் பேரைச் சேர்த்து வருவதில் இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது என்று ரோட்டரி இயக்குநர் பாஸ்கர் குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டிய மலோனி, 56 சதவீதம் அதிகரிப்பு கடந்த பத்தாண்டுகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது மிகப் பெரிய சாதனையாகும் என்றார்.

### அமைதிக் காவலர்கள்

ரோட்டரியின் அமைதிப் பணி முயற்சிகள் குறித்துப் பேசிய



மலோனி, அமைதிப் பணியில் ஈடுபடுவதற்கு பெரிய ராஜதந்திரியாக இருக்கவேண்டிய அவசியமில்லை. சமுதாயத்தில் குடிநீர் வழங்குதல், சுகாதாரப் பணி செய்தல், கட்டணம் செலுத்த இயலாத மாணவர்களுக்கு உதவுதல் ஆகிய பணிகளைச் செய்தாலே அமைதிக் காவலர்கள் ஆகிறீர்கள். உங்களது சமூகத்தில் கல்வி அல்லது பொருளாதார வளர்ச்சிக்காக எந்தத் திட்டத்தைத் தொடங்கினாலும் அங்கு அதிகபட்ச அமைதி நிலவுவதற்காகப் பாடுபடுகிறீர்கள் என்றார்.

பிரச்சினை நிலவும் சிரியா, இராக் போன்ற நாடுகளிலிருந்து உயிர் பிழைக்க மற்ற நாடுகளில் குடியேறுவோரின் தேவைளைப் பூர்த்தி செய்வதற்கு அரசுகளால் மட்டும் முடியாது. அவ்வாறு அடைக்கலம் தேடி வருவோர் புதிய இடத்தில் தங்கி, வாழ்வதற்கு ஏற்ப மாறுவதும் கடினம்தான். ரோட்டரி அமைதி ஃபெலோஸ் (Rotary Peace Fellows) இளைஞர் பரிமாற்றத் திட்டம் (Youth Exchange) ஆகியவை உலக நாடுகளுக்கு இடையில் இளைஞர்கள் நல்லெண்ணத் தூதுவர்களாகச் செயல்பட உதவுகின்றன. நமது சர்வதேச சேவைத் திட்டங்கள் இரு நாடுகளிலும் இருவேறு கலாசாரப் பின்னணியில் உள்ள ரோட்டேரி அமைப்பினரைச் சார்ந்திருக்கின்றன. உள்நாட்டில் தரமான வாழ்க்கையை மேம்படுத்தவும் செயல்படுகின்றன என்றார் அவர்.

டேனிஷ் ரோட்டரி அமைதி ஃபெலோ ஒருவர் சிரியாவில் அகதிகளுக்கு டிஜிட்டல் ஒருங்கிணைப்பு (Digital Integration), தொழில்முனைவுத் திறன், வணிகத் திறன்கள் ஆகியவற்றை ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் துணையோடு பெர்லினில் உள்ள பள்ளியின் மூலம் வழங்கியிருக்கிறார் என்று மலோனி சுட்டிக்காட்டினார்.

அந்தப் பெண் ரோட்டரி ஃபெலோ பணி செய்யும் நாட்டுக்கும் அகதிகளுக்கும் பயன்தரக் கூடிய வழிகளைக் கண்டறிந்தார். குடியேறுவோரின் திறன் அவர்கள் அடைக்கலம் புகுந்த நாட்டுக்கும் பயன்படும். அவ்வாறு குடியேறுவோருக்கும் அவர்கள் அடைக்கலம் கோரி விண்ணப்பித்த காலம் பரிசீலித்து முடியும் வரையில் குறுகிய காலம் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றார் மலோனி.

WASH திட்டத்தை உலகளாவிய நிகழ்ச்சியில் வெற்றிகரமாக

*புதிய AKS உறுப்பினர்கள் மனோஜ் மற்றும் நிக் இஸ்ராணி TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் பிற ரோட்டரியினருடன் மும்பை விழாவில்.*



நிகழ்த்திக் காட்டியதற்காக ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக நியமிக்கப் பட்டுள்ள சுசீல் குப்தாவைப் பாராட்டிய மலோனி, ரோட்டரி ஃபவுண்டேஷன் 100 நாடுகளில் இதற்காக 1,000 WASH திட்டங்களுக்கு முதலீடு செய்துள்ளது.

மாணவர்கள் பள்ளிக்கு வருவதை அதிகரிக்கச் செய்யவும் அடிப்படைக் கல்வி எழுத்தறிவை மேம்படுத்தவும் உதவும் வகையில் இந்த திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது நமது குறிக்கோள் ஆகும். ரோட்டரி ஃபவுண்டேஷன் மொத்தம் 470 கோடி டாலர் திரட்டி இதற்காக முதலீடு செய்துள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற நன்கொடையாளர்களிடம் பேசிய RID C பாஸ்கர், TRF க்காக நீங்கள் அனைவரும் காட்டும் பரந்த நன்கொடை உள்ளத்தைப் பாராட்டுகிறோம். ரோட்டரியின் நன்கொடை திரட்டும் முயற்சி மற்றும் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் பணி ஆகியவற்றில் இந்தியா உங்களது பரந்த மனப்பான்மையால் முன்னணியில் இருக்கிறது என்றார். இந்தியாவில் 4,000 பெரிய நன்கொடையாளர்களும், 92 AKS உறுப்பினர் களும் உள்ளனர் என்று சுட்டிக்காட்டினார்.

RIDE பாண்ட்யா, நிக் இஸ்ரானியை அறிமுகம் செய்து வைத்துப் பேசினார். மூத்த இஸ்ரானி . ஏதோ கொடுக்க வேண்டும் என்பதற்காக அல்லாமல், ஒரு நல்ல காரியத்துக்காக நன்கொடை அளிக்க வேண்டும் என்று கருதுபவர் என்றார்.

RIDE கமல் சங்வி, மனோஜ் இஸ்ரானியை அறிமுகம் செய்தார். நிதி திரட்டும் குழுவின் தலைவர் என்ற முறையில் அவர்

## ரயில்கள் மீது காதல் !

*ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் மலோனி பேசுகையில், ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் குலாம் வாஹன்வதி, ரோட்டரி நிறுவனத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளராக (RRFC) 2004ம் ஆண்டு இருந்தபோது, அவருடன் நட்பு ஏற்பட்டு தொடர்ந்து பல கருத்தரங்குகளை நடத்தியிருக்கிறோம். அவருடன் இணைந்து மும்பை ரயில் நிலையத்தின் பிளாட்பாரத்தில் பல மணி நேரம் ரயில்கள் போவதையும் வருவதையும் பார்த்தபடியே பேசிக்கொண்டிருந்ததாகக் கூறினார். மலோனியையும் கேயையும் மும்பையிலிருந்து ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்து சூரத்தில் சந்தித்தபோது நினைவுகூர்ந்தார். மலோனி, நான் ரயில் பயணத்தை விரும்புவேன். எப்படி இந்த ரயில்கள் ஏராளமானோரை ஏற்றுக் கொண்டு செல்கிறது, எப்படி அனைவரையும் கீழே இறக்கிவிட்டு, காலியான பிறகு சில மணித் துளிகளில் மீண்டும் ஏராளமானோரை ஏற்றிக் கொண்டு புறப்படும். இதையெல்லாம் நான் ரசித்துப் பார்ப்பேன் என்றார். அதை ரசித்துக் கொண்டிருந்த கேய், பயணம் செய்வதும் நீண்டதூரம் வாகனம் ஓட்டுவதும் மார்க் மலோனிக்கு ரொம்ப பிடிக்கும். எனக்கு உங்களது விதவிதமான வண்ணங்கள் பிடிக்கும் என்றார்.*



RIPE *மார்க் மலோனி, திலிப் மற்றும் ஷாலினி பிராமல் தம்பதியினரை அவர்கள்* $100,000 TRF*க்கு கொடுத்ததற்கு வாழ்த்துகிறார்.*




அருங்காட்சியத்தை சுற்றிப் பார்வையிட்ட RIPE மலோனி மற்றும் கேய்.

ஏற்பாடு செய்த முதல் நிகழ்ச்சியிலேயே 4 லட்சம் டாலர் திரட்டப் பட்டது, என்றார்.

TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி பேசுகையில், கடந்த அக்டோபர் வரையில் திரட்டப்பட்ட மொத்த நன்கொடை 50 லட்சம் டாலர். கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 20 லட்சம் டாலர்தான் திரட்டப்பட்டது. இந்திய மதிப்பு என்றால், ரூ.34 கோடி திரட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ13 கோடி தான் கிடைத்தது. ரவிசங்கர் கொடுத்த ரூ.10 கோடியைக் கழித்தாலும் நாம் ரூ.11 கோடி அதிகமாகவே திரட்டியுள்ளோம், என்றார்.

பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத் தலைவர் D ரவிசங்கர் ரூ.100 கோடி தர முன்வந்த மிகச் சிறந்த தாராள உள்ளத்தைப் பாராட்டிய அவர், அவர் பிள்ளையார் சுழி போட்டார். இப்போது ஒவ்வொருவராக நன்கொடையை அள்ளித் தர ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நல்ல பெயரைத் தொடர்ந்து உயர்த்திப் பிடிப்போம். அப்போது தான் ஃபவுண்டேஷனின் மதிப்பு உயர்ந்து கொண்டேயிருக்கும் என்றார்.

முன்னதாகப் பேசிய அறக்கட்டளை பெரிய அளவிலான நன்கொடை ஆலோசகர் (EMGA) அசோக் பன்ஜவானி, D 3141 10 லட்சம் டாலரைக் கடந்துவிட்டது. இந்த மாவட்டத்தில் 23 AKS உறுப்பினர்கள் உள்ளனர். உலகிலேயே தர வரிசையில் மூன்றாவது இடத்தில் தங்களது மாவட்டம் இருக்கிறது என்று அறிவித்தார்.

## கேரளத்திற்கு வீடுகள்

D 3142 ஆளுநர் அஷிஸ் கங்குலி 2.50 லட்சம் டாலருக்கான காசோலையை மாவட்டத்தின் பங்களிப் பாக வழங்கினார். கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் கட்டித் தருவதற்குப் பயன்படுத்துவதற்காக அதை அளித்தார். RIPN குப்தாவுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் உபரியாக இருந்த நிதியும் இதனுடன் சேர்க்கப்படுவதாக பாண்ட்யா கூறினார். வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோருக்கு குப்தாவின் பெயரில் வீடு கட்டித் தரப்படுகிறது என்றார்.

நிகழ்ச்சி நடைபெற்ற மாலையிலும் தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு ஒரு லட்சம் டாலர் நிதியை திலீப் பிரமல் அளித்தார். அவர் இந்த ஆண்டு இறுதிக்குள் AKS உறுப்பினர் ஆவதற்கு உறுதி பூண்டுள்ளார் என்று வாஹன்வதி கூறினார்.

நிகழ்ச்சிக்கு முன்னதாக மும்பை சத்ரபதி சிவாஜி மகராஜ் வாஸ்து சங்கராலய அருங்காட்சியகத்தில் வண்ண விளக்கொளி அமைக்கும் திட்டத்தை மலோனியும் கேயும் தொடங்கிவைத்தனர். இந்த திட்டத்திற்கு மனோஜ் இஸ்ரானி ஒரு கோடி ரூபாய் நன்கொடை அளித்துள்ளார். இது பாம்பே சங்கம் நடத்தும் சூரிய சக்தித் திட்டத்தின் கீழ் செயல்படுகிறது.

புகைப்படங்கள்: ஜெயஸ்ரீ

# இந்தியா ரோட்டராக்ட் அமைப்பு வசீகரிக்கிறது:
# மார்க் மலோனி

ஜெய்ஸ்ரீ

RIஅமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மார்க் மலோனியும் அவரது மனைவி கேயும் அண்மையில் குஜராத் சூரத்துக்கு வருகை புரிந்தனர். அப்போது, D 3060 மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டப் பணிகளைப் பார்வையிட்டனர். அதையடுத்து, மார்க் மலோனி ரோட்டராக்ட் அமைப்பின் இளைஞர்களுடன் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலுக்கு மாவட்ட ரோட்டரி பிரதிநிதி நிரவ் திரிவேதி நெறியாளராக இருந்தார். ரோட்டராக்ட் இளைஞர்களுடன் மலோனி நடத்திய கலந்துரையாடலில் சில.

**நிரவ் திரிவேதி:** எங்கள் மாவட்டத்திற்கு முன்பு நீங்கள் வந்ததற்கும் இப்போது வந்துள்ளது க்கும் இடையில் ஏதாவது மாற்றத்தைக் கண்டீர்களா?

**மார்க் மலோனி:** சூரத்துக்கு கடைசியாக 2004ம் ஆண்டு வந்திருந்தேன். இப்போது வந்ததற்கும் அதற்கும் வித்தியாசம் நிறைய உள்ளது. முன்பு நீஹோல் என்ற கிராமத்தில் குடிநீர் திட் டத்தைத் தொடங்கிவைத்த இடத்துக்கு இன்று சென்றேன். முன்பு அத்திட்டம் நகருக்கு வெளியே தொலைவில் இருந்தது. இன்று, நகரின் எல்லையில் விரிவடைந்துள்ளது. விரிவான 1970ம் ஆண்டு முன்னாள் மாவட்ட இயக்குநர் ஹிமான்ஷு தாக்கர் முதல் முறையாக சூரத்துக்கு வந்தபோது, அப்போதைய மக்கள் தொகை 3 லட்சம்தான். இப்போது 60 லட்சமாக அதிகரித்து விட்டது. பெரிய கட்டடங்கள், கடை கள், உணவகங்கள் எல்லாவற்றிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ரோட்டரியின் சேவையும் மகத்தானது.

**திரிவேதி:** ரோட்டராக்ட் அமைப்பு தொழில்முறை தலைமைப் பண்பில் கவனம் செலுத்த வேண்டுமா? அல்லது சமூக சேவையில் ஈடுபட வேண்டுமா?

**மலோனி:** இரண்டும் தேவை; ஒன்றில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ரோட்டரியிலும் இதுதான். தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்குப் பங்களிப்பு செலுத்துவதை அங்கீகரிக்கிறோம். பல மணி நேரம் மேற்கொள்ளும் சமுதாய சேவையிலும் சர்வதேச திட்டங்களிலும் அப்படிச் செய்வதில்லை. அதைத்தான் நாம் செய்யவேண்டும். சேவை களில் ஈடுபடும் காலத்தை விட பணத்தை மதிப்பிடுவது எளிதுதான். அதனால், எளிதான வழியைத் தேர்ந்தெடுக்கிறோம். ரோட்டராக்ட் அமைப்பைப் பொறுத்த வரையில் தொழில்முறை தலைமைப் பண்புக்கான பயிற்சித் திட்டத்தைக் கைவிட்டால், இளைஞர்களை வசீகரிக்கும் அம்சத்தைப் புறந்தள்ளுகிறீர்கள்.



**திரிவேதி:** இந்திய ரோட்டராக்ட் அமைப்புக்கும் பிற நாடுகளில் உள்ள ரோட்டராக்ட் அமைப்புக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன?

**மலோனி:** நான் இப்போதுதான் பயணத்தை தொடங்கியுள்ளேன். ஒப்பிடும் அளவுக்கு எனக்கு அனுபவம் இல்லை. அமெரிக்காவில் ரோட்டராக்ட் வலுவாக இல்லை. இந்தியாவில் உள்ளதைப் போல் நிறைய ரோட்டராக்ட் சங்கங்களை அங்கே பார்க்க முடியாது. நான் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள பிர்மிங்ஹாம் அலபாமா ரோட்டராக்ட் சங்கம் உலகின் மிகப் பெரிய ரோட்டராக்ட் சங்கம் எனக் கருதப்படுகிறது. அதில் 350 உறுப்பினர்கள் இருக்கின்றனர். அந்த அமைப்பில் சேருவதற்காகக் காத்திருப்போர் எண்ணிக்கை பிர்மிங்ஹாம் ரோட்டரி சங்கத்தில் சேரக் காத்திருப்போருக்கு இணையானது.

இந்தியாவின் ரோட்டராக்ட் அமைப்பு என்னை ஈர்க்கிறது. இங்கே ஏராளமான ரோட்டராக்ட் சங்கங்கள் உள்ளன. ரோட்டராக்ட் அமைப்புகள் குறித்த தகவல்களைச் சேகரிப்பதில் RIக்கு போதிய கவனமில்லை. இந்தியாவில் ரோட்டரி சங்கங்களால் ஆயிரக்கணக்கான ரோட்டராக்ட் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது தெரியும். சிறந்த சமூக சேவைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக ரோட்டராக்ட் அமைப்பினரைப் பாராட்டுகிறேன்.

**திரிவேதி:** பிறகு ரோட்டரி இன்டர்நேஷனல் எப்படி தகவல்களையும் செயல்பாடுகளையும் கண்காணிக்கிறது?

**மலோனி:** ரோட்டரி செயல்பாடுகளை நாங்கள் கண்காணிப்பதில்லை. அதில் பிரச்சினை இருக்கிறது. அதை மாற்றவேண்டும் என்று ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பாரி ரஸ்ஸின் விரும்புகிறார். உலகம் முழுவதும் 2 லட்சம் ரோட்டராக்ட் சங்கங்கள் உள்ளன. அவை தொடர்பான தகவல்களைத் திரட்டி பதிவு செய்வதை மேம்படுத்த வேண்டும். ரோட்டராக்ட் சங்கத்தினருடன் கூட்டு வைத்துச் செயல்பட வேண்டும். ரோட்டரி வரலாற்றிலேயே முதல் முறையாக 2019ம் ஆண்டு சான்டியாகோவில் நடைபெறும் உலகப் பேரவைக் கூட்டத்தில் (International Assembly) பங்கேற்க 60 ரோட்டராக்ட்டர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

இப்படி அழைக்க இரண்டு காரணம் உண்டு. முதல்

RIPE *மார்க் மலோனி மற்றும் கேயை ரோட்டராக்டர்கள் ஆடி பாடி வரவேற்கின்றனர். DRR குஷால் ஷா மற்றும் DRRE சின்தன் ஷா ஆகியோரும் உடன் உள்ளனர்.*



## இளைய தலைவர்கள் வேண்டும்

*கலந்துரையாடலில் பங்கேற்ற பார்வையாளர்கள் மலோனியிடம் பல கேள்விகள் கேட்டனர்.*

*ஒரு கேள்விக்குப் பதிலளித்த மலோனி, ரோட்டராக்ட் அமைப்பினருக்கு உள்ளூர் ரோட்டரி அமைப்புகளிடமிருந்து எதிர்ப்பு வருவதாகக் கருதவில்லை. எங்காவது விதி விலக்கு இருக்கலாம் என்றார்.*

*ரோட்டரியில் துடிப்புள்ள இளம் வர்த்தகர்கள், தொழில் தலைவர்களை ஈர்ப்பில் உள்ள சிக்கல் குறித்து அண்மையில்தான் ரோட்டரி அமைப்பு உணரத் தொடங்கியுள்ளது. மாறிவரும் காலத்துக்கு ஏற்ப நாமும் மாறவேண்டும். ரோட்டரியில் முந்தைய காலத்தில் அர்த்தமுள்ள செயலைச் செய்தோம். அதுவே பாரம்பரியமாகிவிட்டது என்றார்.*

*தங்களது தொழில், பணியில் ஈடுபடுவோர் எளிதில் அணுகத் தக்கதாக ரோட்டரி தலைமையை மாற்றுவதற்கு தனது பதவிக் காலத்தில் செயல்படப் போவதாக மலோனி தெரிவித்தார். அதே பிரச்சினைதான் இந்தியாவிலும் இருப்பதாக நான் கருதவில்லை. உலகின் பல இடங்களில் ரோட்டரி அமைப்பினர் ஓய்வு பெறும் வரையில் மாவட்ட ஆளுநராவதற்குப் பரிசீலிக்கப்படுவதேயில்லை. அப்படி தலைமைப் பொறுப்புகளில் ஓய்வு பெற்றோர் மட்டுமே வருவதாக இருந்தால், ரோட்டரி அமைப்பு முதியோரின் அமைப்பு என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும். அதற்காக ஓய்வு பெற்றவர்கள் மாவட்ட ஆளுநர்களாக வரக் கூடாது என்று சொல்லவில்லை. ஒவ்வோர் ஆண்டுமே ஓய்வுபெற்றவர்கள்தான் மாவட்ட ஆளுநர்களாக வரும் முறை கூடாது என்றார்.*

*வடக்கு அலபாமா மாவட்ட ரோட்டரியில் 29 ஆண்டுகளுக்கு முன்பு 34 வயதானவன், அதான் நான் மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்றேன். ஏழு ஆண்டுகள் கழித்து 42 வயதானவர் அப்பொறுப்புக்கு வந்தார். அவர் கென் ஷுபெர்ட் என்ற எனது சட்டத் துறையின் கூட்டாளி. ஆனால், 10 ஆண்டுகளாக ஓய்வு பெற்றவர்கள்தான் மாவட்ட ஆளுநர்களாக வந்தனர். பலர் மாவட்ட ஆளுநராவதற்காக எப்போது ஓய்வு பெறப் போகிறோம் என்று காத்திருந்தனர். ஆனால், இப்போது உணர்ந்துகொண்டோம். இளைஞர்கள் உற்சாகமாக தங்களது பணி, தொழிலில் ஈடுபட்டுக் கொண்டே ரோட்டரி தலைமையையும் ஏற்கலாம் என்ற நிலை வந்துவிட்டது. ரோட்டரி தலைவர்களை இப்போது மேலும் பல பயிற்சிகள், கூட்டங்கள், நிகழ்ச்சிகள், கடமைகள் ஆகியவற்றை மேற்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டு வருகிறோம் என்றார் மலோனி.*

*RI தலைவராக நியமனம் பெற்ற சுசீல் குப்தா, ரோட்டரியை எளிமையாக்க வேண்டியுள்ளது என்று தனக்கே உரிய பாணியில் கூறினார். இந்தியாவில் கூட ரோட்டரி சங்கத்துக்கு மாவட்ட ஆளுநர் செல்வது திருவிழா ஆகிவிட்டது. அமெரிக்காவில் அப்படியில்லை என்று சொல்வேன். ரோட்டரி கூட்டத்துக்கு மாவட்ட ஆளுநர் வரக்கூடாது என்று நினைப்பர். காரணம், அவர்கள் அலுப்பூட்டும் பேச்சு பேசுவர் என்பதுதான். மாவட்ட ஆளுநர் எல்லா ரோட்டரி சங்கங்களுக்கும் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இளம் உறுப்பினர்களை ஈர்க்க வேண்டுமானால், அவர்கள் தங்களது வேலையை 50 நாட்கள் கைவிட்டுவிட்டு 50 ரோட்டரி சங்கங்களின் கூட்டங்களுக்கும் செல்லவேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா என்ன? உங்களது மாவட்ட ஆளுநர் (பிங்கி பட்டேல்) பணியிலிருந்து ஓய்வு பெற்றவர் அல்ல. அவர் இளம் பெண். அவரிடமிருந்து நிறைய எதிர்பார்க்கலாம். இளைஞர்களைக் கவரும் வகையில் ரோட்டரியை நிறைய மாற்ற வேண்டியிருக்கிறது என்றார்.*

காரணம், ரோட்டராக்ட் அமைப்பினர் ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவோரிடம் (DGE) தங்களது யோசனைகளைப் பகிர்ந்து கொள்கின்றனர். சமுதாயப் பணியிலும் உலகளவிலான மனிதாபிமானப் பணியிலும் இளம் வணிகர்கள், தொழில் தலைவர்கள் தாங்கள் எதிர்பார்ப்பது குறித்த யோசனைகளைக் கூறுகின்றனர்.

இரண்டாவதாக, ரோட்டராக்ட் அமைப்பினர் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும். அதன் மூலம் புதிய சிந்தனைகளுடன் தங்களது மாவட்ட அமைப்புகளில் செயல்பட வழி கிடைக்கும். உலகப் பேரவைக் கூட்டத்தில் 60 ரோட்டராக்ட் அமைப்பினர்தான் பங்கேற்கிறார்கள். இது தொடக்கம்தான். இது ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் அமைப்பினருக்கு இடையில் கூட்டு ஏற்பட நல்ல வழியேற்படும்.

கடந்த முறை நடந்த உலகப் பேரவைக் கூட்டத்தில் பேசிய ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பாரி ரஸ்ஸின் ரோட்டராக்ட் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தவேண்டும் என்று யோசனை கூறினார். RI முன்னாள் இயக்குநர் லாரி லாங்ஃபோர்டு, அடுத்த உலகப் பேரவைக் கூட்டத்தில் பங்கேற்க ரோட்டராக்ட் அமைப்பினரை ஏன் அழைக்கக் கூடாது? என்று கேள்வி எழுப்பினார். அந்த யோசனை விவாதிக்கப்பட்டது. கடந்த உலகப்பேரவைக் கூட்டத்தின் நிறைவடைந்த போது, கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த ஊழியர்கள் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக நியமனம் பெற்றவரைச் சந்தித்து அடுத்த உலகப் பேரவைக் கூட்டம் குறித்து விவாதிப்பார். ஆனால், கூடுதலாக 50, 100 பேருக்கு விமான டிக்கெட், விடுதி அறைகள் எடுக்க வேண்டுமே என்று கவலைப்பட்டேன். அதைப் போல் மற்ற பணியாளர்களும் நினைப்பார்கள் என்று கருதினேன். ஆனால் இல்லை. அவர்கள் எல்லாக் குறிப்புகளையும் எடுத்துக் கொண்டனர். நாங்கள் ரோட்டராக்ட் பிரதிநிதிகளை எப்படித்




தேர்ந்தெடுப்பது என்பது குறித்து விவாதித்தோம்.

பேரவையில் ஒவ்வொரு குழுவிலும் இரு ரோட்டராக்ட் பிரதிநிதிகள் இடம் பெறுவர். எனவே, நாங்கள் முன்னோக்கிச் செல்கிறோம். எதிர்காலத்தில் என்னென்ன முன்னேற்றம் ஏற்படப் போகிறது என்பதையும் காணப் போகிறோம். உலகப் பேரவைக் கூட்டத்தில் ரோட்டராக்டர்கள் எப்படி செயல்படுவர் என்பது குறித்து RIPN சுசீல் குப்தா என்ன கருதுகிறார் என்பதைப் பார்ப்போம்.

**திரிவேதி:** RI அமைப்பிடமிருந்து என்ன மாதிரியான புதிய முன்முயற்சிகளை ரோட்டராக்ட் அமைப்பினர் எதிர்பார்க்கலாம்?

**மலோனி:** ரோட்டராக்ட் விஷயத்தில் தற்போதைய தலைவர் பாரி ரஸ்ஸினின் செயல்பாடு தொடர்வதைப் பார்க்கப் போகிறீர்கள். ரோட்டராக்ட் குறித்த தகவலைப் பகிர்ந்து கொள்ள என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்றும் அறிந்துகொள்ளலாம். ரோட்டராக்ட் குறித்த விவரங்களைத் திரட்டுவது, ரோட்டராக்ட் அமைப்பினர் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்புக்கு மிகச் சிறிய தொகையை சந்தாவாகச் செலுத்தும் முறை ஆகியவை குறித்த யோசனையும் பரிசீலிக்கலாம். அவர்கள் அவ்வாறு சந்தா செலுத்தினால், அது பதிவாகி, புள்ளிவிவரம் சேகரிக்க உதவும்.

**திரிவேதி:** மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதியின் (DRR) அலுவல் வருகை குறித்து ரோட்டராக்ட் கையேட்டில் இடம்பெறவில்லை. ரோட்டராக்ட் சங்கம் தங்களை ஆதரிக்கும் ரோட்டரி அமைப்பின் தலைவருக்கும் மாவட்ட ரோட்டராக்ட் கமிட்டி தலைவருக்கும் (DRCC) தெரிவிக்க வேண்டும் என்றுதான் கூறப்பட்டுள்ளது. மாவட்ட ரோட்டாராக்ட் பிரதிநிதிக்கு தெரிவிப்பது குறித்து எதுவும் கூறப்படவில்லை. அப்படியிருக்க, ரோட்டராக்ட் சங்கத்தினரின் செயல்பாடுகளை மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் எப்படிக் கண்காணிக்க முடியும் என்றும் பயனுள்ள திட்டங்களில் ஈடுபடும்படி எப்படி அறிவுறுத்த முடியும்? ரோட்டராக்ட், ரோட்டரி இலக்குகளை நோக்கிச் செயல்படும்படி எப்படிக் கூற முடியும்?

**மலோனி:** நான் வெளிப்படையாகப் பேசுகிறேன். ரோட்டராக்ட் கையேட்டைப் படிக்கவேயில்லை. எனவே, அதில் என்ன கூறப்பட்டுள்ளது என்று கருத்து ஏதுமில்லை. நான் வாழும் நாட்டில் உள்ள நிலையின் காரணமாக, நான் அறிந்த வரலாற்றில் ரோட்டராக்ட் சங்கத்தின் ஈடுபாடு குறித்து இடம்பெறவில்லை.

இந்தியாவில் ரோட்டராக்ட் என்பது ரோட்டரியின் ஒரு திட்டமாக இருக்கிறது. எனவே, பிரச்சினை எழுகிறது எனக் கருதுகிறேன். அதனால்தான், ரோட்டராக்ட் அமைப்பினர் ரோட்டரி தலைவருக்கும் மாவட்ட ரோட்டராக்ட் கமிட்டி தலைவருக்கும் அறிக்கை அளிக்கின்றனர். பல மாவட்டங்களில் மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் இல்லை. கையேட்டின் அடிப்படையில் பார்த்தால், மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் வருவதற்கு முன் போதிய அளவில் ரோட்டராக்ட் சங்கங்கள் இருக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

ரோட்டராக்ட் மாவட்ட பிரதிநிதி இருந்தால் கூட ரோட்டராக்ட் அமைப்புகளுக்கு இடையில் அதிக நிகழ்ச்சிகளோ தகவல் பரிமாற்றமோ இல்லை. இது குறித்து கவனித்தாக வேண்டும்.

புகைப்படங்கள்: ஜெயஸ்ரீ

Rotary PEOPLE OF ACTION

# குழந்தைகளுக்கு புதுவாழ்வு தரும் சென்னை தெற்கு ரோட்டரி

ரஷீதா பகத்

அந்த மருத்துவமனையில் இறுக்கம் மெல்ல தளர்கிறது. மானிட்டரில் பீப் ஒலியுடன் திரையில் வரிகளின் அசைவு, படுக்கைகளில் குழந்தைகள் இதய சிகிச்சை முடிந்து மீண்டு வருகின்றன. அதை நிரூபிக்கும் வகையில் மார்பைச் சுற்றி பாண்டேஜ்கள் சுற்றப்பட்டுள்ளன. மூச்சு இழுத்து விடுவதைக் காட்டும் வகையில் மார்பு எழுந்து தாழ்கிறது. அங்கே ஒரு கட்டிலில் சின்ன பூவைப் போல் ஆறு மாதக் குழந்தை ருஷ்டா படுத்திருந்தாள். அருகே அவளுக்கு இதய அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தி முடித்த Dr பிரசாந்த் ஷா புன்னகையோடு நிற்கிறார்.

இந்தக் குழந்தை இங்கே சிகிச்சைக்காக வந்தபோது, மூச்சு விடுவதற்குத் திணறிக் கொண்டிருந்தாள். காரணம், இதயத்தில் ஒரு துளையும், குழாயில் லேசான கோளாறும் இருந்ததே காரணம். இதனால், அவளால் 50 சதவீதம் அளவே மூச்சு விட முடிந்தது. எனவே, அவளுக்கு அவசர அவசரமாக அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய அவசரம் இருந்தது. செய்து முடித்ததை அடுத்து அவள் உடல்நலம் தேறி வருகிறாள் என்று மகிழ்ச்சி முகத்தில் தவழ்ந்திடக் கூறுகிறார்.

அருகே ஒரு படுக்கையில் ஒரு வயது குழந்தை இன்பா படுத்திருக்கிறது. அதன் எடையோ 6 கிலோ. சென்னை சூரியா மருத்துவ மனையில் அந்தச் சிறு குழந்தைக்கு குழந்தை நல நிபுணர் டாக்டர் ஷா தலைமையிலான மருத்துவர் குழு சிகிச்சை அளித்தது. தெய்வத்தின் அருளால் அந்தக் குழந்தை



*Dr பிரசாந்த் ஷா குழந்தை இன்பாவை இதய அறுவை சிகிச்சைற்குப் பிறகு பரிசோதிக்கிறார். RC மெட்ராஸ் சவுத் தலைவர் R சரவணன் உடன் உள்ளார்.*

பிழைத்துவிட்டது. பல விதமான சிகிச்சைகள் அளிக்கப்பட்ட இன்பா உடல் நலம் பெற்றுள்ளது. அவள் விடும் மூச்சுக் கெல்லாம் டாக்டர் ஷா, அவரது குழுவுக்கும் சென்னை தெற்கு ரோட்டரி சங்கத்துக்கும் (D 3232) நன்றி கூற வேண்டும். ரோட்டரி சங்கம் "குட்டி இதயத்துக்குக் காட்டும் அக்கறை" (Caring for Little Hearts) என்ற திட்டத்தின் கீழ் இது நிறைவேற்றப்பட்டது.

ஒரு கிராமத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் டாக்டர் ஷா தலைமையிலான குழு நீல நிறக் குழந்தையாக இருந்த இன்பாவைக் கண்டது. அந்தக் குழந்தைக்கு பல பிரச்சினைகள் இருந்தது தெரியவந்தது. இதனால், பல மருத்துவமனைகள் அந்தக் குழந்தையைக் கைவிட்டு விட்டன. அப்படியே ஏதாவது மருத்துவமனை சிகிச்சை அளிக்க முன்வந்திருந்தால், சிகிச்சை நடத்த நீண்ட காலம் ஆகலாம். ரோட்டரியின் உதவியுடன் தமிழக அரசும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1 லட்சம் அளித்தாலும், சிகிச்சை முடிந்து அவசர சிகிச்சைப் பிரிவில் (ICU) 10, 15 நாட்களாகவது அந்தக் குழந்தை தங்கியிருக்க வேண்டும். அதற்கு ஏராளமான செலவு பிடிக்கும் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும் என்றார் டாக்டர் ஷா.

சென்னை தெற்கு ரோட்டரி சங்கத்தின் தலைவர் R. சரவணன் இத்திட்டத்தை முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகிறார். இதுவரை 200 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை நடத்தியுள்ளார். வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளின் இதய சிகிச்சைக்காக தமிழக முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உரிய அட்டையைப் பெற்று ரூ.1.22 லட்சம் வரையில் உதவி பெறுகிறார்கள் என்று விவரித்தார்.

### தொடக்கம்

இந்த சங்கத்தில் 73 உறுப்பினர்கள் உள்ளனர். அதன் தலைவராக சரவணன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, 2017ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தனது சொந்த நிதியை அளித்து இத்திட்டத்தைத் தொடங்கிவைத்தார். ஆரம்பத்தில் உலக அளவில் நிதியுதவி பெற நினைத்தோம். ஆனால், அதற்கான வழிமுறைகளை அறிந்து நிதி பெறுவதற்கு அவகாசம் இல்லாததால் நாங்கள எங்களது சொந்தப் பணத்தைப் போட்டு திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினோம் என்றார்.



2017ம் ஆண்டு நவம்பர் வரையிலான முதல் கட்டப் பணியில் ரோட்டரி சங்கம் உறுப்பினர்களிடம் மொத்தம் ரூ.20 லட்சம் திரட்டி 77 சின்னக் குழந்தைகளின் சிகிச்சைகளுக்கு உதவியது.இதில் டாக்டர் ஷா குழுவினர் முழுமையாக ஈடுபட்டனர்.

அதன் பிறகு 2017ம் ஆண்டு ஜூலையில் உலகளாவிய நிதியுதவி பெற விண்ணப்பிக்கப்பட்டது. அதில் துணையாக அமெரிக்கா பாஸடீனா ரோட்டரி சங்கம் D 5890 கூட்டு சேர்ந்தது.

ரொம்ப சுலபமாக செய்தோம். உலகில் உள்ள பல ரோட்டரி சங்கங்களுக்கு மின்னஞ்சல்களை அனுப்பினோம். ஆரம்பத்தில் பாஸடீனா ரோட்டரி சங்கம் பதில் அனுப்பவில்லை. ஆனால், எங்களது மின்னஞ்சலைப் பெற்ற ஒரு ரோட்டரி சங்கம் பாஸடீனா சங்கத்தைத் தொடர்புகொள்ள அறிவுறுத்தியது. உலகளாவிய நிதியை அந்த ரோட்டரி சங்கம் தருவது இதுதான் முதல் முறை. அடுத்த ஆண்டு நூற்றாண்டு கொண்டாடும் அந்த சங்கம் பணக்கார சங்கம். எங்களது ரோட்டரி சங்கம் அடுத்த ஆண்டு வைர விழா காணுகிறது என்றார் சரவணன்.

இந்த முயற்சியை அடுத்து 2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மொத்தம் ரூ.56 லட்சம் கிடைத்தது.

இப்படி சின்னக் குழந்தைகளின் இதய சிகிச்சையில் சரவணன் ஆர்வம் காட்டுவதற்கு ஒரு காரணம் உண்டு. அவர் சார்டர்டு அக்கவுண்டன்ட். 2014ம் ஆண்டு மார்ச் அவருக்கு நெஞ்சு வலி வந்தது. மருத்துவப் பரிசோதனை நடத்தியபோது,

---

*ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவனம் எங்களது கூட்டாளி. அந்நிறுவனம் தனது சமகப் பொறுப்பு நிதியிலிருந்து ரூ.12 லட்சம் கொடுத்து உதவியுள்ளது. அது எங்களது உலகளாவிய மானியத்திற்கு அளிக்கப்பட்டது.*

**R. சரவணன்,**
தலைவர்,தெற்கு சென்னை
ரோட்டரி சங்கம்

---


அமலா தன் குழந்தை சைரஸுடன்.

இதயத்தில் பல இடங்களில் அடைப்பு இருந்தது தெரியவந்தது. சிகிச்சை முடிந்த பிறகு எவ்வளவு பேர் இதனால் பாதிக்கப்படுகிறார்கள், இறந்துவிடுகிறார்கள் என்று நினைத்தேன். எனக்குப் பணம் இருந்ததால், சிகிச்சை பெற முடிந்தது. இல்லாதவர்கள் நிலையைப் பற்றி எண்ணினேன். அதன் விளைவுதான் இது என்றார்.

### உயிர் காப்போம்

இன்பா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் (ICU) மேலும் ஒரு வாரம் தங்கி இன்னொரு அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டியிருந்தது. அவளிடம் ஏதாவது முன்னேற்றம் உள்ளதா என்று டாக்டர் ஷாவிடம் கேட்டேன். அதற்கு அவர், இன்னும் இல்லை. நாங்கள் பணத்தைப் பற்றி முதலில் எண்ணவில்லை. அதனால்தான் இராக் போல சர்வதேச அளவில் இது குறித்து ஆராய நினைத்தோம். இதுபோல் நல்ல கட்டமைப்பு வசதியுடன் ஏதாவது மருத்துவமனை கட்டப்பட்டால், அதற்கான செலவை ஈடுகட்டுவது எப்படி என்றுதான் எல்லோரும் யோசிப்பார்கள். ஆனால், எங்களது குறிக்கோள் லாபம் அல்ல என்று பதிலளித்தார்.

*குழந்தைகளுக்கு இதய சிகிச்சை அளிக்கும் மருத்துவமனையைத் தொடங்கி நடத்துவதும் சிக்கலான ஆபரேஷன் செய்வதும் மிகுந்த செலவுக்குரியது. நல்லது செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தால், லாபம் நமது குறிக்கோளாக இருக்க முடியாது.*

**டாக்டர் பிரஷாந்த் ஷா,**
குழந்தை நல சிகிச்சை நிபுணர்

அதையடுத்து, அறுவைச் சிகிச்சை முடிந்த குழந்தைகள் இருந்தனர். குழந்தைகள் அழுது கொண்டிருந்தாலும், அந்தக் குழந்தைகளைக் கையில் ஏந்திக் கொண்டிருந்த தாய்மார்களின் முகத்தில், உடல் நலம் தேறுகிறார்களே என்ற மகிழ்ச்சி தவழ்ந்தது. குழந்தைகளைக் குஷிப்படுத்த, வண்ண வண்ண பலூன்கள், டொனால்ட் டக் போன்ற காமிக் உருவங்கள் வார்டு முழுவதும் வைக்கப்பட்டிருந்தன.

சூரியா மருத்துவமனையில் சிகிச்சைச் செலவுகள் மூன்று வகையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ரூ.1.25 லட்சம் ஆகும் ஆபரேஷன்களுக்குத் தமிழக அரசு ரூ.82 ஆயிரத்தை அளித்து உதவுகிறது. மீதியை தெற்கு சென்னை ரோட்டரி சங்கம் அளிக்கிறது. ரூ.1.50 லட்சம் செலவில் ஆகவேண்டிய பெரிய சிகிச்சை என்றால் அதற்கு அரசு காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1 லட்சம் தரப்படும். மீதியில் ரூ.25 ஆயிரத்தை ரோட்டரி சங்கமும் இன்னொரு அறக்கட்டளை ரூ.25 ஆயிரமும் அளித்து உதவுகின்றன. அதை விட மிக முக்கியமான ரூ.1.72 லட்சம் தேவைப்

# மகிழ்ச்சியில் துள்ளிய தாய்!

*சைரஸ் என்ற மூன்று வயது குழந்தையின் சம்பவம் மிகவும் பரபரப்பான நெகிழ்ச்சி தருவது. குழந்தை பிறந்து மூன்று நாட்கள் மருத்துவமனையில் யாருமே எதுவும் சொல்லவில்லை. நான்காவது நாள் குழந்தைக்கு காய்ச்சலும், மூச்சு திணறியதாலும் குழந்தையின் ரத்த மாதிரியை எடுத்துப் பரிசோதித்தனர். பிறகே, மஞ்சள் காமாலை இருப்பது தெரிந்தது. இன்குபேட்டரில் சிறிது நாள் வைத்திருந்தனர். அதையடுத்து சென்னையில் உள்ள குழந்தை நல மருத்துவமனைக்குக் குழந்தையை எடுத்துச் செல்லும்படி அக்குழந்தையின் தாய்க்கு கூறினர்.*

*அங்கே என் குழந்தையை நான்கு நாட்கள் வைத்திருந்து, குழந்தையின் இதயத்தில் ஓட்டை இருப்பதாகக் கூறினர். பிறந்த குழந்தைக்கு ஆபரேஷன் செய்ய வசதியில்லை என்றும் பெரிய குழந்தையான பிறகு கொண்டு வரும்படியும் கூறினர் இப்படி கூறிவிட்டு தேம்பித் தேம்பி அழுதார் அமலா.*

*இன்னொரு தனியார் மருத்துவ மனைக்குக் குழந்தையை எடுத்துச் சென்றோம். அங்கே டாக்டர்கள் கடுமையாக நடந்துகொண்டனர். குழந்தைக்கு எந்த உத்தரவாதமும் தர முடியாது. 45 நாள் கூட இருக்குமா என்று சந்தேகம் என்றெல்லாம் கூறினர்.*

*அதையடுத்து ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை அணுகியபோது, அவர்கள் டாக்டர் ஷாவைப் பற்றிக் கூறினர். அவரிடம் சென்றபோது, “கவலைப்படாதம்மா. குழந்தைக்கு எதுவும் ஆகாது. ஆபரேஷன் செய்ய வேண்டும் அவ்வளவுதான். பிறகு நன்றாகிவிடும்” என்றார். எனக்கு மிகுந்த மன ஆறுதல் கிடைத்தது என்றார்.*

*அந்தக் குழந்தையின் நிலை பற்றி விவரித்த டாக்டர் ஷா, அந்தக் குழந்தையின் நுரையீரலில் குழாய் இல்லை. ஆனால், இதயத்துக்கு நிறைய குழாய்கள் இருந்ததால், ரத்தம் சென்று வந்தது, அதனால் பிழைத்திருந்தது குழந்தை. அதன் பின் 8 மாதம் பொறுத்திருந்து குழந்தைக்கு ஆபரேஷன் செய்ய முடிவெடுத்தோம். ஆறு மாதம் ஆகும்போது குழந்தை நீலமாகிவிட்டது. அதனால், 2017 ஜூலையில் ஆபரேஷன் செய்து நுரையீரல் தமனியைப் பொருத்தினோம் என்றார்.*

*சைப்ரஸுக்கு ஐந்து முறை ஆபரேஷன்கள் செய்யப்பட நேரும் என்று அமலாவிடம் கூறிவிட்டார்கள். இரண்டாவது ஆபரேஷன் முடிந்த பிறகு, கவலை வேண்டாம், இனிமேல் அறுவைச் சிகிச்சை தேவைப்படாது என்று டாக்டர் ஷா கூறியதும் துள்ளிக் குதித்தேன். சென்னையில் ஆட்டோ ஷோ ரூமில் வேலை செய்யும் என் கணவர் எதற்கும் கவனமாக இருப்போம் என்பது போல் கூறினார். என்னைப் பொறுத்த வரையில் கடவுளுக்கு அடுத்து பிரஷாந்த் தான்! என்று நெகிழ்ச்சியோடு கூறினார் அமலா.*

*குழந்தையின் உடல் அமைப்பைப் பார்த்துவிட்டு அவனுக்கு 5 முறை அறுவைச் சிகிச்சை தேவைப்படும் என்று கருதினேன். ஆனால், கடவுள் எங்களது முயற்சிக்குக் கை கொடுத்தார் என்றார்.*

படும் அறுவைச் சிகிச்சைக்கு அரசு ரூ.1.22 லட்சம் அளிக்கிறது. ரோட்டரி சங்கம் மீதி ரூ.50 ஆயிரத்தை அளித்து உதவுகிறது. இப்படி மூன்று வகையாக வழங்க ஏற்பாடு செய்கிறார் டாக்டர் ஷா.

இத்துடன், ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவனம் தனது சமூகப் பொறுப்புக்கான நிதியிலிருந்து நிதியை அளிக்கிறது என்று சரவணன் கூறுகிறார். ஃபோர்டு கம்பெனி எங்களது கூட்டாளிகள். இதுபோன்ற ஆபரேஷன்களுக்கு அவர்கள் ரூ.12 லட்சம் வரையில் நன்கொடை அளித்துள்ளனர்.

### நோய்

தமிழகத்தின் கிராமங்களில் டாக்டர் ஷாவின் மருத்துவர் குழு மருத்துவ முகாம்களை நடத்துகிறது. சென்னையில், இதயக் கோளாறு உள்ள பல குழந்தைகள் உடனடியாக மருத்துவ ஆய்வில் கண்டறியப்பட்டு சிகிச்சை பெறுகிறார்கள். அந்த நிலை கிராமங்களில் இல்லை. அதனால், எங்களது குழு கிராமங்களில் பல முகாம்களை நடத்தி, இதய சிகிச்சையால் பாதிக்கப்படும் குழந்தைகளைக் கண்டறிந்து வருகிறது. அரசின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வரும் குழந்தைகள் உடனடியாக சிகிச்சை பெறுகிறார்கள் என்றார்.

வடமாநிலங்களை விட தென் மாநிலங்களில் நல்ல சிகிச்சை கிடைக்கிறது. அத்துடன், ஏதாவது கோளாறுகளுடன் பிறக்கும் குழந்தைகள் குறித்த விவரம் பதிவு செய்யப்படுகிறது. இந்த விவரங்களை டாக்டர் ஷா ஆய்வு செய்கிறார். அதன் பின் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பரிசோதிக்கும் வகையில் முகாம்களை அமைக்கிறார். 15 பேர் கொண்ட அவரது தலைமையிலான குழுவில் சிலர் உள்ளூர் தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து எந்தெந்த குழந்தைக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று கண்டறியச் செய்கிறார். இப்போது ரோட்டரியும் அந்தப் பணியில் இணைந்து கொண்டு, இந்த முகாம்களின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

ஆபரேஷன் தேவைப் படும் குழந்தையை அடையாளம் கண்டபின், டாக்டர் ஷா அதன் மருத்துவ விவரங்கள், குடும்பப் பின்னணி, காப்பீட்டு விவரங்களைக் குறிப்பிட்டு, புகைப்படத்துடன் அனை வருக்கும் மின்னஞ்சல் களை அனுப்புகிறார். இத் திட்டத்துக்காக ஒரு தனிக் குழுவை

*எனக்கு நெஞ்சு வலி வந்த போது, ஆபரேஷனுக்காகச் செலவு செய்யும் சக்தி இருந்ததால், உயிர் பிழைத்தேன். அப்படி செலவு செய்ய சக்தியில்லாத ஏழைகள் என்ன செய்வார்கள் என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன்.*

**R. சரவணன்,**
தலைவர், தெற்கு சென்னை ரோட்டரி சங்கம்



Dr *பிரசாந்த் ஷா*

அமைத்துள்ளோம். அந்தக் குழு ஒப்புதல் அளித்தவுடன் தொடர் பணிகளை டாக்டர் மேற்கொள்வார் என்று சரவணன் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் 8 முதல் 9 குழந்தைகளுக்கு பிறவிக் கோளாறு இருக்கிறது. இதுதான் பிறந்த குழந்தை இறக்கும் விகிதம் (Infant Mortality Rate) குறையாமல் இருப்பதற்குக் காரணம். தற்போது பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் 44 இறந்துவிடுகின்றன என்றார் Dr ஷா.

நம் நாட்டில் குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவனைகள் உள்பட ஏராளமான அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆனால், பல குழந்தைகளுக்கு இதயக் கோளாறுக்குச் சிகிச்சை தர முடிவதில்லை. ஆனால், ஏதாவது நல்லது செய்யவேண்டுமானால், லாபத்தைக் கவனிக்காமல் செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

பிறக்கும் போதே இதயக் கோளாறுகளுடன் இருக்கும் குழந்தைகள் இதயத்துக்கு ஆக்ஸிஜன் போதிய அளவில் செல்லாமல் அதன் விளைவாகக் குழந்தைகள் நீல நிறத்தில் இருக்கின்றன, அவை நீலக் குழந்தை (Blue Baby) என அழைக்கப்படுகின்றன. அவர்களது இதயக் குழாய்களில் பாதிப்பு இருக்கக் கூடும். குழாய்கள் குறுகியதாக இருக்கலாம் கசிவு இருக்கலாம். சில சமயம் ஒரே குழந்தைக்குப் பல்வேறு பாதிப்புகளும் இருக்கக் கூடும். ஏதாவது குழந்தை போதிய ஆக்சிஜன் இன்றி, நீலமாகப் பிறந்தால், ஒரு மாதத்தில் அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டும். இல்லையேல் ஆபத்து. அதற்கான ஆபரேஷனும் மிகவும் கடினமானது.

இதுவரை ரோட்டரி உதவியுடன் நாங்கள் செய்த அறுவைச் சிகிச்சைகளில் ஒரு குழந்தையின் உயிருக்குப் பாதிப்பு நேரவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும் என்று டாக்டர் ஷா கூறினார்.

இந்தப் பணி மிகவும் கடினமானது, அரசாங்கம், ரோட்டரி, இதர அறக்கட்டளைகள் முழுமையாக ஈடுபட வேண்டியுள்ளது. குறைந்த செலவில் இப்படி கடினமான பணியை மேற்கொள்ள வேண்டுமானால், எவ்வளவு சிரமமாக இருக்கும்!

இதற்கு டாக்டர் ஷா தனது புன்னகை மூலம் பதிலளித்தார். இதய அறுவைச் சிகிச்சையை நான் மேற்கொள்ளத் தொடங்கியபோது, அதுவே எனக்கு ஆர்வமான செயலாகிவிட்டது. அதையடுத்து



குழந்தைகளுக்குச் சிகிச்சை தரவேண்டுமா, பெரியவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமா என்று முடிவெடுக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு முறை இதய அறுவைச் சிகிச்சையும் சவாலானதும் கூட. ஒரு சர்ஜன் என்ற முறையில், சவால்களை எதிர்கொள்ளவே விரும்புகிறேன். எனது நோக்கம் நல்லது என்றால்,



# இராக் குழந்தையிடம் இரக்கம்

இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் பிரஷாந்த் ஷா தலைமையிலான குழந்தை சிகிச்சை நிபுணர் குழுவை சூரியா மருத்துவமனையில் அணுகியபோது, அங்கு நிர்வாகம் இயங்கும் தளத்தில் கார்ட்டூன் படங்கள் வரையப்பட்ட பல அட்டைகள் பல அறைகளில் குவிந்து கிடந்தன. அதைப் பார்த்த டாக்டர் ஷா, மன்னியுங்கள், இப்போது இராக் நாட்டின் கர்ப்பலா நகரில் சிகிச்சை அளிப்பதற்குத் தயாராகிறோம். அங்கே 25, 30 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்றார்.

அது தவிர, மொரிஷியஸ் நாட்டிலும் பணி புரிகிறார். இராக் நாட்டுக்கு 4வது முறையாகச் செல்கிறார் டாக்டர் ஷா. இந்தியாவைப் போல இராக்கிலும் கோளாறுடன் குழந்தைகள் பிறக்கிறார்கள். ஒவ்வொரு முறை செல்லும்போதும் 25 முதல் 30 குழந்தைகளுக்குச் சிகிச்சை தரவேண்டியுள்ளது. கர்ப்பாலாவில் தங்கும் 10 நாட்களில் 30 சர்ஜரிகள் நடத்தப்படுகின்றன. இந்தப் பெட்டிகளைப் பாருங்கள். எவ்வளவு நவீன உபகரணங்களை எடுத்துச் செல்கிறோம் என்றார்

இவர்கள் மருத்துவத் தொழில்நுட்பத்தை இராக்குக்கு வழங்குகிறார்கள் என்று சரவணன் கூறினார். நான், உண்மையில் பார்த்தால், தன்னடக்கம் போன்ற நல்ல குணத்தை அளிக்கிறார்கள் என்றேன்.

ஒவ்வொரு முறை இந்த மருத்துவ சேவையை இராக்கில் மேற்கொள்ளும்போது, டாக்டர் ஷா குழுவின் பணி என்று அறிவிப்பதில்லை. இந்தியக் குழுவின் பணி என்கிறோம் என்றார் புன்னகையுடன்.

தொடர்ந்து பேசிய டாக்டர் ஷா, இராக்கில் மருத்துவ சுற்றுலா நிறுவனத்தை எனது நண்பர் நடத்தி வருகிறார். இராக்கிலிருந்து ஏராளமானோர் சிகிச்சைக்காக இந்தியா வருகிறார்கள். ஆனால், பலருக்கு இந்தியா வந்து சிகிச்சை பெற வசதியும் இல்லை என்றார். அதையடுத்து, நான் அங்கே மருத்துவ சேவை செய்கிறேனே என்றேன். அதையடுத்து, இமாம் ஜைனிலாபிதீன் என்பவரது அறக்கட்டளை நடத்தும் மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கே உள்ள வசதிகளைப் பார்த்து பிரமித்தேன். அது மாதிரி சென்னையில் கூட இல்லை என்றார்.

இதற்கு முன் மூன்று முறை இராக் பயணம் செய்த டாக்டர் ஷா அங்கு 62 குழந்தைகளுக்கு சிகிச்சை செய்திருக்கிறார். அதற்கான அனைத்து செலவையும் இராக் அறக்கட்டளை ஏற்றுக் கொண்டது. இந்தியாவைப் போல இராக் குழந்தைகளும் பிறவிக் கோளாறுக்கு ஆளாகிறார்கள் என்பது ஒரு புறம் இருக்க, தாய்மார்கள் கருவுற்ற நிலையில் நாட்டின் சூழ்நிலை காரணமாக வெடிமருந்துகளை உட்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவைப் போல இராக் குழந்தைகளும் பிறவிக் கோளாறுக்கு ஆளாகிறார்கள் என்பது ஒரு புறம் இருக்க, தாய்மார்கள் கருவுற்ற நிலையில் நாட்டின் சூழ்நிலை காரணமாக வெடிமருந்துகளை உட்கொண்டிருக்கிறார்கள்.

இராக் நாட்டில் இன்னும் வன்முறை தாண்டவமாடுகிறதே, பாதுகாப்பாக இருக்க முடிகிறதா? என்று கேட்டதற்கு, டாக்டர் ஷா, அங்கு பாதுகாப்பு நன்றாக உள்ளது பெண்கள் இரவிலும் கூட அச்சமின்றி நடமாடமுடிகிறது. அதுதான் கர்ப்பாலாவின் அழகு என்று பதிலளித்தார்.

டாக்டர் ஷா சுத்த சைவம். இராக்கில் உணவுக்கு எப்படி சமாளித்தார்?

குழந்தைகளுக்கு நல்ல அறுவைச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதில்தான் குறியாக இருந்தேன். மருத்துவமனையின் அருகிலேயே தங்கியிருந்தேன். சிறிது நேரம் கூடக் கிடைக்காமல் தொடர்ந்து பணி இருந்தது. காலை 8மணிக்கு வேலை ஆரம்பித்தால், இரவு 9 மணி வரை நீடிக்கும். தயிர் சாதம், வீட்டிலிருந்து எடுத்துச் சென்ற பொடிகள், அவ்வளவுதான். நிறைய வேலை செய்யும்போது, மிதமான உணவே போதும். அதிலும் பெரும்பாலும் நான் அவசர சிகிச்சைப் பிரிவில்தான் இருப்பேன் என்கிறார் டாக்டர் ஷா. கிடைக்கும் சிறிது நேரத்தில் இமாம் உசைன் வழிபாட்டுத் தலத்துக்குச் செல்வார். எந்த மதமாக இருந்தால் என்ன, அந்த இடம் நமக்கு மன அமைதி தருகிறதே, அது போதும் என்று மன நிறைவுடன் கூறினார் ஷா.

கடவுள் துணைபுரிவார் என்று திடமாக நம்புகிறேன் என்று Dr ஷா நெகிழ்ச்சியோடு கூறினார்.

குழந்தைகளுக்கு சலுகைக் கட்டணத்தில் அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டாலும், பயனாளிகள் ஏழைகள், கிராமப்புறத்தினர் என்பதால், அவர்களால் எங்கே எப்படி தங்க முடிகிறது? அவர்களால் சமாளிக்க முடிகிறதா? என்று கேட்ட போது, ரோட்டரி சங்கத் தலைவர் சரவணன் புன்னகையோடு, இங்கே வந்து அவசர சிகிச்சைப் பிரிவு வரை சென்றோம், வார்டுகளைப் பார்த்தோம். தாழ்வாரங்களில் உள்ளவர் களையும் பாருங்கள். வார்டில் குழந்தையுடன் தாய்மார்கள் தங்கியிருப்பர். குழந்தையின் தந்தையும் மற்றவர்களும் தாழ்வாரத்திலோ மருத்துவ மனையின் ஏதாவது இடத்திலோ தங்கியிருக்க Dr ஷா அனுமதித்துள்ளார்.



*சங்கத் தலைவர் சரவணன் மற்றும் Dr ஷா ஒரு குழந்தைக்கு தீபாவளி பரிசு அளிக்கின்றனர்.*



வேறு ஏதாவது தனியார் மருத்துவமனையில் இப்படி அனுமதிப்பார்களா என்றார்.

அவர்கள் அங்கே தங்குவதற்கு காசெல்லாம் தரவேண்டியதில்லை. உணவுக்கு மட்டும் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். மருத்துவமனையில் எங்கேயும் அவர்கள் படுத்துத் தூங்கலாம். குழந்தைக்குச் சிகிச்சை செய்ய வேண்டும் என்பது தான் அவர்களது முதல் விருப்பம். மருத்துவமனையில் தங்கும்போது ஏதாவது அசவுகர்யம் இருந்தாலும் அதை அவர்கள் பொருட்படுத்தாமல் 10, 15 நாள் தங்குகிறார்கள் என்று டாக்டர் ஷா கூறினார்.

டாக்டர் ஷா குழந்தை களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதை 2009ம் ஆண்டு தொடங்கினார். இது வரை வெளிநாடுகள் உள்பட பல்வேறு மருத்துவமனைகளில் 4,500 பேருக்கு செய்து முடித்துள்ளார். எல்லாக் குழந்தைகளின் விவரங்களையும் தொடர்ந்து அறிந்து கொள்கிறோம். ஆபரேஷன்தான் முடிந்து விட்டதே என்று நிறுத்துவிடுவதில்லை. பல குழந்தைகள் வளர்ந்து கல்லூரிப் படிப்பை முடித்திருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கத் திட்டமிட்டுள்ளோம். பிறவிக் கோளாறு எப்படிப்பட்ட வேதனையானது என்று அவர்களுக்குத் தெரியும். அதனால், அவர்கள் புறநகர்ப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அடையாளம் கண்டறிந்து உதவுவர் என்று டாக்டர் ஷா கூறினார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.

KshetraGuru® PROPERTY

SwarnaGuru® GOLD

FDGuru® FIXED DEPOSIT

VyaparGuru® STOCK BROKING

ShuruGuru™ IPO

YojanaGuru® GOVERNMENT BONDS

NidhiGuru™ MUTUAL FUND

AmulyaGuru™ PRECIOUS STONES





Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in

# மனிதநேயத்துக்கான பந்தயம்

ஜெய்ஸ்ரீ

மும்பையில் ரோட்டரி D 3141, D 3142 சேர்ந்த 10 ஆயிரம் ரோட்டரியினரும் அவர்களது குடும்பத்தினரும் மகாலட்சுமி ரேஸ் கோர்ஸ் மைதானத்துக்கு மனித நேயத்துக்கான பந்தயத்தில் (Race for Humanity) பங்கேற்பதற்காக வந்தனர். பாம்பே ரோட்டரி சங்கம், நரிமன் பாயின்ட் ரோட்டரி சங்கம் ஆகியவை தலைமையில் ஏழு ரோட்டரி சங்கங்கள் இதற்கு ஏற்பாடு செய்திருந்தன. ராயல் வெஸ்டர்ன் இந்தியா டர்ஃப் கிளபில் இந்தப் பந்தயம் ஏற்பாடு செய்யப்பட்டது. மனித நேயத்துக்கான பந்தயம் பாம்பே ரோட்டரி சங்கம் நிதி திரட்டுவதற்காக 2014ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தும் நிகழ்வாகும். இந்த ஆண்டு ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் தலா 50 ஆயிரம் டாலர் (சுமார் ரூ.35 லட்சம்) திரட்டி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நன்கொடையாக அளித்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் RIPE மார்க் மலோனி, அவரது மனைவி கேய் ஆகியோர், PRIP ராஜேந்திர சாபூ, RIPN சுசீல் குப்தா, RIDEs பரத் பாண்டியா, கமல் சங்க்வி, TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, PRID அசோக் மகாஜன், மாவட்ட



ஆளுநர்கள் சசி சர்மா, ஆஷிஸ் கங்குலி ஆகியோர் பங்கேற்றனர். பந்தயங்களுடன் பழைய பொருள் விற்பனை சந்தை, ஆடை அலங்கார அணிவகுப்பு, இசை நிகழ்ச்சி கள், உணவகங்கள், குழந்தைகளின் திறனுக்கான போட்டி நிகழ்ச்சிகள் என அந்த இடமே களைகட்டியது.

ஏழு பிரிமியம் ரேஸ்களில் வெல்பவர்களுக்கான கோப்பைகளுக்கு பாம்பே ரோட்டரி சங்கம், நரிமான் பாயின்ட் ரோட்டரி சங்கம் மற்றும் பாம்பே பியர், பாம்பே வடக்கு, மும்பை குயின் நெக்லஸ், ஹிராநந்தினி எஸ்டேட், சீ கோஸ்ட், தானே லேக் சிட்டி ஆகிய ரோட்டரி சங்கங்கள் நிதியுதவி அளித்தன.

பாம்பே ரோட்டரி சங்கத் தலைவர் விஜய் ஜாட்டியா, இந்த நிகழ்ச்சி பல ஆண்டுகளாக எப்படி வளர்ச்சி பெற்றுள்ளது என்பதைக் காண பெருமகிழ்ச்சியாக உள்ளது. இது 90 ஆண்டுகால ரோட்டரி அனுபவத்தைப் பறைசாற்றும் வகையில் மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்லப்படும் என நம்புகிறோம் என்றார்.



RIPE *மார்க் மலோனி மற்றும் கேயிற்கு* DG *சஷி சர்மா நினைவுப்பரிசு வழங்குகிறார்.* PRIP *ராஜேந்திர சாபூ,* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி,* PDG *மோகன் சந்திரவாக்கர்,* D3142 DG *ஆஷஸ் கங்குலி மற்றும்* PRID *அசோக் மகாஜன் அவர்களும் உடன் உள்ளனர்.*

## நகரங்களுக்கு இடையிலான அமைப்பு

பின்னர் Intercity Forum நடந்தது. மார்க் மலோனி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அறங்காவலர் வாஹன்வதி, பாண்டியா, சாபூ, மகாஜன், சசி சர்மா, ஆஷிஸ் கங்குலி, கடந்தகால இக்கால ஆளுநர்கள், ரோட்டரி சங்கத் தலைவர்கள், D 3141, D 3142 சேர்ந்தவர்கள் உள்ளிட்டோர் கண்காணித்தனர்.

ரோட்டரி, ரோட்டராக்ட், இன்னர்வீல் உறுப்பினர்கள் காட்டிய உற்சாகத்தையும் வேகத்தையும் பாராட்டிய மலோனி இரு வேறு மாவட்டங்களும் இணைந்து செயல்பட்ட விதத்தைப் புகழ்ந்தார். எங்கள் நாட்டில் அலபாமாவில் வடக்கு தெற்கு என இரு மாவட்ட ரோட்டரிகள் உள்ளன. இரு தரப்பினரும் தனித்தனி பாதையில்தான் செல்கிறார்கள். இரு தரப்பினருக்கும் இருவேறு பாரம்பரியங்கள் உள்ளன என்றார்.

உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு குறித்துப் பேசிய அவர், ஆசியாவில் உலகளாவிய ரோட்டரி உறுப்பினர்களில் 30 சதவீதம் பேர் ஆசிய ரோட்டரி சங்கங்களில் உள்ளனர். இதுதான் அதிகமானது. இந்தியாவில் உள்ளது போல இளைஞர்கள் அதிகம் கொண்ட ரோட்டரி சங்கம் உலகில் எங்கும் இல்லை. இந்திய மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் 25 வயதுக்கும் குறைவான வயதுள்ளவர்கள். உறுப்பினர்களை ஈர்ப்பதற்கான உத்தியுடன் கொண்ட அணுகுமுறையும் அவர்களை ஈடுபடுத்துவதும் மிகப் பெரிய சவாலாகும். ரோட்டரியினர் இளையதலைமுறையினருக்கு நன்கு பயிற்சி அளித்து தயார் செய்ய வேண்டும். ஒரு நாள் அவர்கள் நான் வகிக்கும் பதவியைக் கூட எட்டிப் பிடிப்பார்கள் என்றார் மலோனி.

உறுப்பினர்களின் வளர்ச்சிக்காக விதிகள் வகுக்கும் சட்டக் குழு (Council on Legislation) 2016ம் ஆண்டு விதிகளைத் தளர்த்தியுள்ளது. இதனால், ரோட்டரியில் இடம்பெறுவதும் புதிய ரோட்டரி சங்கங்களை நிறுவுவதும் எளிதாகிவிட்டது.

இந்த ஆண்டில் முன்னுரிமை தரப்பட வேண்டியவை குறித்து ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் வகுத்த பட்டியலை மலோனி வெளியிட்டார். அதில் போலியோ ஒழிப்பு தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

போலியோ ஒழிப்புக்காக ஆண்டு தோறும் அளிக்கப்படும் நிதி 5 கோடி டாலர் திரட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கு இணையாக 2:1 என்ற விகிதத்தில் பில் கேட்ஸ் பவுண்டேஷன் அளிக்கும் என்றார் மலோனி.

மாவட்ட அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை (District Designated Funds) ஒவ்வொரு மாவட்டமும் முறையாகப் பயன்படுத்துவது அடுத்து முக்கியமானது என்று கூறிய அவர், ரோட்டரியினர் ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை அளிப்பது சேமிப்புக் கணக்குக்காக அல்ல. உலகில் நல்ல பணிகளை ஆற்ற வேண்டும் என்பதற்காக. மாவட்ட நிதிநிலைமை குறித்து கவனிக்க வேண்டிய நிலை வந்துள்ளது. வரும் ஆண்டுகளில் நிதியை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று திட்டமிட வேண்டும் என்றார் மலோனி.

ஃபவுண்டேஷனின் நிதியை வலுப்படுத்த வேண்டியது மூன்றாவது முன்னுரிமையாகும். அறக்கட்டளையில் 2025ம் ஆண்டில் மொத்தம் 202.50 கோடி டாலர் இருக்க வேண்டும். இந்த முன்னுரிமைகள் எல்லாம் ரோட்டரி ஃபவுண்டேஷனை வலுவுள்ளதாக்கும். ரோட்டரியையும் வலுப்படுத்தும் என்றார்.

PRIP ராஜேந்திர சாபூ ரோட்டரியின் எதிர்காலம் குறித்துப் பேசினார். ரோட்டரி உயர்ந்த விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு, தனித்துவம் வாய்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனமாகத் திகழும். உலகில் நல்ல பணிகளை மேற்கொள்வதில் ரோட்டரி ஃபவுண்டேஷன் மிகப் பெரிய நிறுவனமாகத் திகழும். அதே சமயம் மிகச் சிறந்த வாரிசுகளை, குறிப்பாக நம் நாட்டில் தயார் செய்ய வேண்டியது மிக அவசியம் என்றார்.

புற்றுநோய், எய்ட்ஸ் போன்ற கொடிய நோய்களை ஒழித்து, தரமான வாழ்க்கையைப் பெறுவதற்கு நம்மால் இயலும். அத்துடன், இயற்கைப் பேரிடர் நேரும்போது, மறுவாழ்வு, நிவாரணப் பணிகளில் உடனடியாக ஈடுபடும் மிகத் திறமையான குழுக்களை உருவாக்குவதும் அவசியம் என்றார் சாபூ.

ரோட்டரியில் மிக அதிகமான இளைஞர்கள் ஈடுபடுவர் என்று கனவு காண்கிறேன். மனித ஆயுள் காலம் அதிகரித்து வருகிறது. வயதான ஓய்வு பெற்றோர் நிறைய பேர் ரோட்டரியில் சேருவர். இருந்தாலும், ரோட்டரி என்றால் ஓய்வு பெற்றவர்களுக்கான அமைப்பு என்ற நிலையை விட்டு உதற வேண்டும். நல்ல நோக்கத்துக்கான நமது பணிகள் தொடர்ந்து ஆரோக்கியமான, நல்லிணக்கமான, அர்த்தமுள்ளதாக அமையட்டும் என்று சாபூ வலியுறுத்தினார்.



Rtn *ஹபில் கோரக்கிவாலா* RIPE *மலோனி மற்றும் கேயை வோக்ஹார்ட் மருத்துவ மனையில் வரவேற்கிறார்.* TRF *அறங்காவலர் வஹன்வதி,* PRID *மகாஜன் மற்றும்* DG *சர்மா ஆகியோரும் உடன் உள்ளனர்.*

நிகழ்ச்சியில் பங்கேற்றோரை மாவட்ட ஆளுநர் சர்மா வரவேற்றார். PRID மகாஜன் நன்றி தெரிவித்தார்.

### குழந்தைகளுக்கு மறுவாழ்வு

RIPE மலோனியும் அவரது மனைவி கேயும் வோக்ஹார்ட் மருத்துவ மனைக்கு (Wockhardt Hospitals) விஜயம் செய்தனர். அவர்களுடன் மகாஜன், அறங்காவலர் வாஹன்வதி உள்ளிட்டோர் இருந்தனர். அந்த மருத்துவமனையில் ரோட்டரியின் சிறு இதயங்கள் திட்டத்தின் (Little Hearts programme) கீழ் இதய நோயிற்காக குழந்தைகள் சிகிச்சை பெற்றனர்.

இதய அறுவைச் சிகிச்சை பெற்ற குழந்தைகளின் பெற்றோர்கள் சிலரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தங்களது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர். ரோட்டரி ஆதரவுடன் தங்கள் குழந்தைகள் மறுவாழ்வு பெற்றதையும் அவர்கள் நன்றியோடு கூறினர். மருத்துவமனையின் தலைவரும் ரோட்டரி உறுப்பினருமான ஹபில் கோரக்கிவாலா மருத்துவமனை மேற்கொண்டு வரும் சேவைகளை விவரித்தார். சிகிச்சை பெற்று ஆரோக்கியமாக இருக்கும் குழந்தைகளைப் பார்த்து பெரு மகிழ்ச்சி அடைவதை விட வேறு எதுவும் கிடையாது என்று அவர் கூறினார்.

ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி (Arch Klumph Society) முதன்மை ஒருங்கிணைப்பாளர் டாக்டர் மணீஷ் மோத்வானி, வரும் புத்தாண்டு தொடக்கத்தில் 70 லட்சம் டாலர் திரட்டுவதும் சொசைட்டியில் புதிதாக 25 நன்கொடையாளர்களைச் சேர்ப்பதும் மாவட்ட ரோட்டரியின் லட்சிய இலக்கு ஆகும். இதுவரை 7 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். சொசைட்டியின் (AKS) 23 உறுப்பினர்களில் 12 பேர் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்.■



*குதிரைப் பந்தயத்தை ரசிக்கும்* RIPE *மலோனி மற்றும் கேய்.*



# ஃபவுண்டேஷனுடன் தீவிரமாக ஈடுபடுவோம்

பொதுவாக ரோட்டரி உறுப்பினர்கள் தங்களை ரோட்டரி அமைப்புக்கு அறிமுகப்படுத்தியவரை நிச்சயம் நினைவில் வைத்திருப்பர் என்று அடித்துச் செ ால்வேன். பிறரது வாழ்க்கையில் நல்ல மாற்றம் ஏற்படுத்தும் பணியில் நாம் ஈடுபடும் வாய்ப்பைப் பெறுவதற்கு அவர்கள் தூண்டுகோலாக இருந்ததால், அவர்களை நன்றியோடு நினைப்போம்.

ரோட்டரி 1905ம் ஆண்டு தொடங்கியது முதல் சமுதாயத்தில் பணியாற்றுவர்களாக நாம் மாறுவதற்கு வாய்ப்பு கிடைத்து வருகிறது. நாம் எங்கே இருந்தபடி செயல்படுகிறோமோ, எங்கே நண்பர்களைச் சேர்த்துக் கொள்கிறோமோ அவையெல்லாம் நமது உள்ளூர் ரோட்டரி சங்கங்கள் ஆகும். அவைதான் கண்கூடாக மாற்றங்களை ஏற்படுத்தும் இடமும் ஆகும். ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பும் நமது ரோட்டரி சங்கம் என்று கருதும் நிலையும் நம்மிடம் இருக்கிறது.

மற்றொரு புறம், ரோட்டரி ஃபவுண்டேஷன் என்றால் ஏராளமான மனிதாபிமானப் பணிகள், கல்வித் திட்டங்கள், நற்பணிகளைச் செயல்படுத்தும் உலகின் முதன்மையான நற்பணி அமைப்பு என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. அதுதான் ரோட்டரியை அவரவர் வாழ்க்கையில் இணைக்கும் மாயாஜாலத்தை நிகழ்த்துகிறது. அத்துடன், ரோட்டரிதான் வாழ்க்கையின் அங்கம் என்று ஆகிவிடுகிறது. அது உலக த்தையே நமது சமுதாயமாக மாற்றுகிறது. ரோட்டரியினரை உலகளாவிய செயல்பாட்டாளர்களாக மாற்றுகிறது.

புத்தாண்டு பிறக்கிறது. நாம் எடுத்துக்கொள்ளும் உறுதிகளில் ரோட்டரி ஃபவுண்டேஷன் பணிகளில் ஈடுபடுவது, அதற்குப் பங்களிப்பு செலுத்துவது ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்வீர் என நம்புகிறேன். தொண்டு புரிவதற்கு ரோட்டரி ஃபவுண்டேஷனை முதலில் தேர்ந்தெடுப்போம். அப்படிச் செய்தால், இந்த ரோட்டரி ஆண்டை சிறப்பாக்க முடியும். இந்தப் பணியில் என்னுடன் தோள்கொடுத்து, ரோட்டரியின் பாரம்பரியத்தைக் காப்பதற்கு உறுதி கொள்வோம்.



ரான் D பர்டன், ஃபவுண்டேஷன்
அறக்கட்டளைத் தலைவர்



# ஹம்பர்க் அருங்காட்சியகங்கள்

ஜென்னி லாக்மனி



உங்களுக்கு எதில் ஆர்வம் இருக்கிறதோ இல்லையோ ஹம்பர்க்கில் ஓர் அழகான அருங்காட்சியகம் உண்டு. மிக அரிதான வாகனங்களின் அருங்காட்சியகம் டஜன் கணக்கில் உண்டு. கால்பந்து அங்குள்ள செயின்ட் பவ்லி அருங்காட்சியகம் 1910ம் ஆண்டு ஆடிய கால்பந்து அணியைப் போற்றுகிறது.

சுங்கம் பற்றி தெரியுமா? ஸ்பெசெர்ஸ்டட் (Speicherstadt) பண்டகசாலை மாவட்டத்தில் 2003ம் ஆண்டு வரையில் தங்கு தடையின்றி பொருட்களை எடுத்துச் செல்லலாம் என இருந்தது. அங்குள்ள டச்சுஸ் ஸோலோ (Deutsches Zollmuseum) அருங்காட்சியகத்தில் இந்தப் பண்டகசாலை இருக்கிறது. அங்குதான் உலகின் வசீகரம் மிக்க சுங்க வரி நடைமுறை குறித்த வரலாற்றையும் சுங்க வரி செலுத்தாமல் ஏய்க்கும் கடத்தல்காரர்கள் குறித்தும் அறிந்துகொள்ளலாம்.

RI மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜூன் 1ம் தேதி முதல் 5ம் தேதி வரையில் ஹம்பர்க் நகரில் இருக்கும்போது எல்பி நதியின் மீது அமைக்கப்பட்ட சர்வதேச கடல் அருங்காட்சியகத்தில் மாதிரி பிரம்மாண்டமான சரக்குக் கப்பலில் செல்லும் பயணத்தை அனுபவிக்கலாம். அல்லது 19ம் நூற்றாண்டின் ஹம்பர்க் அன்றாட வாழ்க்கையைச் சித்திரிக்கும் Kramer -Witwen-Wohnung அருங்காட்சி யகத்தையும் காணலாம்.

ஹம்பர்க் கப்பல் போக்குவரத்துக் கழகம் கட்டிய நிலையத்தில் ஆயிரக் கணக்கான பயணிகள் போய்வரும் அனுபவத்தை BallinStadt Emigration Museum காணலாம்.

ஆனால், ஒரே ஒரு அருங்காட்சியகத்தை மட்டும் பார்ப்பதற்கு நேரம் இருக்கிறது என்றால், மினியா-டுர்-ஒண்டர்லேன்ட் அருங்காட்சியகத்துக்குச் செல்லவேண்டும் ஹம்பர்க்கில் வசிப்போர் கூறுகிறார்கள்.

அங்கு, 1,040 ரயில்கள், 9 ஆயிரம் வாகனங்கள், விமானங்களுடன் இருக்கும் ஒரு விமான நிலையம் ஆகியவற்றைக் காணலாம். அத்துடன், வாகன விபத்துகள், ஒரு சாக்லேட் ஆலை, ஆல்பைன் மரங்கள் எல்லாம் குட்டி குட்டியாக நுட்பமாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

**2019 RI மாநாட்டிற்கு பதிவு செய்துகொள்ள: www.riconvention.org. இணையத்தளத்தை பாருங்கள்.**

*© The Rotarian.*

# மகளீரால் ஜொலித்தது நாசிக்

V. முத்துக்குமரன்

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் நகரில் கர்மணி என்ற பெயரில் இரண்டு நாள் மகளிர் மாநாடு அண்மையில் நடைபெற்றது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 150 ரோட்டரி மகளிர் பங்கேற்றனர். மாநாட்டுக்கு நாசிக்கில் உள்ள 19 ரோட்டரி சங்கங்கள் (D 3030) ஏற்பாடு செய்திருந்தன. மாநாட்டின் தொடக்கமே ஆடம்பரமின்றி அதே சமயம் நம்பிக்கை தரும் வகையில் அமைந்தது.

மகளிருக்காகவே தனியாக நடத்தப்படும் இந்த மாநாடு மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் அகில இந்திய அளவிலான ரோட்டரி மகளிர் மாநாடாக விஸ்வரூபம் எடுக்கும். அதில் 600 முதல் 700 பேர் பங்கேற்பர் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆளுநர் ராஜீவ் சர்மா.

மாநாட்டின் சிறப்புப் பேச்சாளர்கள், தொழில்வல்லுநர்கள், குழுவினர்



ரோட்டரி மகளிரின் விருப்பங்களில் தனிக் கவனம் செலுத்தினர். ரோட்டரி பணிகளின்போது அவர்களது கனவுகள் நிறைவேறுவதற்கான உத்திகள் குறித்தும் தடைகளையும் சவால்களையும் கடந்து வருவது குறித்தும் பேசினர்.

விழாவைத் தொடங்கிவைத்த ராஜீவ் சர்மா, மூன்று ஆண்டுக்கு முன் மாவட்ட ஆளுநராக பொறுப்பேற்க (DGND) இருந்த போது இந்த சிந்தனை தோன்றியது. மனதளவில் நான் ஒரு பெண்ணியவாதி. மகளிர் உணர்வு ரீதியில் வலிமையானவர்கள். அவர்கள் சிறந்த வழிகாட்டிகள் அவர்கள் எதை ஏற்றுக் கொண்டாலும் சிறப்பாகச் செய்து முடிப்பவர்கள் என்று கூறினார்.

உலக அளவில் ரோட்டரி அமைப்புகளில் 22 சதவீதம் மகளிர்தான் உள்ளனர். அதிலும், இந்தியாவில் 11 சதவீதம் பேர்தான். இது நான்கு ஐந்து ஆண்டுகளில் 25 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். 10 ஆண்டுகளில் ரோட்டரி அமைப்புகளில் 40 சதவீதம் பெண்கள் இருக்க வேண்டும் என்று ராஜீவ் வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட முன்னாள் ஆளுநர் (D 3150) ரவி வட்லாமணி 1974ம் ஆண்டு ரோட்டரி இளைய தலைமைக்கான விருது (Rotary Youth Leadership Award) பெற்றதை குறிப்பிட்டு, அதுதான் தன்னை நம்பிக்கை தரும் ரோட்டராக்டராக ஆக்கியது என்றார். அதுதான் என் மனைவி ராஜலட்சுமியை 1977ம் ஆண்டு முதல் முறையாகச் சந்திக்கவும் வழிசெய்தது என்றார்.



*கர்மணி மகளிர் மாநாட்டில் DG ராஜீவ் சர்மா மற்றும் அவர் துணைவியார் ராஷ்மி மற்றும் PDGs ரேகா ஷெட்டி, ரவி வட்லாமணி மற்றும் சர்ப்ஜீத் சிங்.*

**அவர் பேசியதாவது:**

ரோட்டரி சாதாரணமானவர்களை மாவீரர்களாக்கி சமூகத்துக்குப் பணியாற்றும் வாய்ப்பையும் தளத்தையும் அளிக்கிறது.

என்னை மிகவும் கவர்ந்த பெண்மணிகளில் மாவட்ட முன்னாள் ஆளுநரான என் மனைவி, அன்னை தெரசா, அகன்ஷா அறக்கட்டளை நிறுவனரும் குழந்தைகள் உரிமை செயல்பாட்டாளருமான ஷாஹின் மிஸ்த்ரி, மகசேசே விருது பெற்ற சாந்தா சின்ஹா, பிரிட்டனைச் சேர்ந்த சமூக ஆர்வலர் இஸபெல்லா, ஹைதாராபாதைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் சுனிதா கிருஷ்ணன் ஆகியோரைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவர்களில் சுனிதா கிருஷ்ணன் 12 ஆயிரம் பாலியல் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு தந்தவர். அச்சுறுத்தலையும் வன்முறையையும் எதிர்கொண்டவர். 8 வயதிலேயே சிறப்புக் குழந்தைகளுக்கு நாட்டிய வகுப்புகள் நடத்தியவர். அவரே 15 வயதில் பாலியல் வன்முறைக்கு ஆளானவர்.

ஷாஹின் தனியார் பள்ளிகளில் கிடைக்கும் கல்வி ஏழைகளுக்கும் கிடைக்கவேண்டும் என்ற உந்துததால் 'பள்ளி நேரத்துக்குப் பிறகு' என்ற கல்வி நிறுவனத்தை புனே, மும்பை நகரங்களில் நடத்தி வருகிறார். அங்கு 6,500 ஏழைச் சிறுவர்கள் பயில்கின்றனர்.

கனவுகள் ஆர்வத்தின் காரணமாக நிறைவேறுகின்றன. பெரிய கனவுகளைக் காணும் வெறி தேவை என்று கூறுகிறார் ஷாஹின். இந்தியாவுக்காக கற்பி (Teach for India) என்ற அவரது அமைப்பு பின்தங்கிய பகுதிகளில் அரசுப் பள்ளிகளில் பாடம் நடத்துவதற்காக 1,500 பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

அன்னை தெரசாவை 1996ம் ஆண்டு சந்தித்தபோது, ரூ.5 கோடியில் 100 பள்ளிகளைக் கட்டுவது குறித்து விவாதித்தேன். அப்போதுதான் பொருள் முக்கியமல்ல, எளிமை, உண்மையான தூய்மையான புன்னகை, உதட்டில் பிரார்த்தனை ஆகியவற்றுக்குப் பலன் கிட்டும் என்பதை அறிந்தேன்.

M V அறக்கட்டளையை நடத்தும் சாந்தா பள்ளிப் படிப்பை நிறுத்திய 12 லட்சம் பேர் மீண்டும் கல்வியைத் தொடர வழிசெய்தார். அவர் பணியை தற்போது 9 ஆப்பிரிக்க நாடுகளில் விரிவுபடுத்தியுள்ளார்.

இஸபெல்லா நற்பணிகளுக்காக நிதி திரட்டும் மிக இளம் வயதுப் பெண். ஒரு லட்சம் பவுண்டு திரட்டி, புற்றுநோயால் உயிரிழந்த தனது சகோதரியின் பெயரில் புற்றுநோய் மருத்துவமனையை நிறுவியுள்ளார்.

உடனுக்குடன் சேவை புரிதல், இரக்க சுபாவம், சமுதாய களத்தில் இருப்பது ஆண்களை விடப் பெண்கள் தான் என்றார் ரவி வட்லாமணி.

## வெற்றிகரமான கண்டுபிடிப்புகள்

PDG ரேகா ஷெட்டி (D 3232) பேசுகையில், உண்மையில் உங்களைக் கண்டறியும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. ஆகையால், உங்களை நீங்கள் நேசிக்கப் பழகுங்கள். அடுத்து, அறிவைத் தேடிக் கற்றுக் கொள்ளுங்கள். ஆண்டுக்கு ஆண்டு திட்டமிடுங்கள். நிறைய படியுங்கள். ரோட்டரி எனக்கு நிறைய கற்றுத் தந்தது. சுய முன்னேற்றத்துக்கு அது பெரிதும் உதவியது என்றார்.

மேலும் பேசுகையில், ரோட்டரி சங்கங்களைத் தலைமையேற்று நடத்தும் ஆற்றல் பெண்களுக்கு உண்டு. பெண்கள் ஊதாரிகள் அல்ல. உண்மையில் பெண்கள்தான் சிறந்த மேலாண்மைத் திறன் கொண்டவர்கள். நவரசங்களில் இரக்கம் எதையும் மாற்றக் கூடியது. எல்லோரையும் ஈர்க்கக் கூடியது. அது கடவுள் அருளால் பெண்களிடம் இருக்கிறது என்றும் ரேகா ஷெட்டி கூறினார்.

சர்வதேச இன்னர்வீல் சங்கத்தின் முன்னாள் தலைவர் மீனா கபூர் பேசு



*மாநாட்டில் மகளிர் நிருத்திய யோக சூத்ரா கற்றுக்கொள்கின்றனர். மேலே : 'கர்மணி ராணி' பட்டம் வென்ற D 3182வைச் சார்ந்த B K சௌம்யா மணி (இடதிலிருந்து 4வது) தன் குழுவுடன்.*







கையில், சமூகத்தின் முரட்டுத்தனமான பழக்கவழக்கங்களை எதிர்த்து நான் போராடினேன். சாதுவாகவும் எடுப்பார் கைப்பிள்ளையாகவும் இருந்த நான் போராளியாக உருமாறினேன் என்றார்.

எனக்கு இப்போது 80 வயது. நான் சமூகக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து, எதிர்ப்புகளை என் சகோதரனின் உடலுக்கு எரியூட்டினேன்.

நாம் அனைவரும் கர்மணிகள் (செயல் வீராங்கனைகள்). அந்த உணர்வு நம்முள் ஊறியுள்ளது. அதுதான் நம் அடையாளம், சமூகத்தை மாற்றும் சக்தி. இந்தியாவில் கிராமப்புறப் பெண்கள் பேசமாட்டார்கள். ஆனால், கிராமத்தில் நல்ல பலன் கிடைக்கும் வகையில் அமைதியாகச் செயல்படுவார்கள் என்றார்.

### மீ டூ இயக்கம்

காலம் காலமாக பெண்கள் கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றனர். வீட்டிலும், வேலை செய்யும் இடத்திலும் உறவினர்களாலும் அண்டை வீட்டாராலும் சுரண்டப் படுகிறார்கள் என்று மகாராஷ்டிர மாநில தேர்தல் ஆணையர் நீலா சத்தியநாராயணன் IAS கூறினார்.

இந்திய வரலாறு, புராணங்களில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் நிறைந்துள்ளன. பெண்களுக்குத் தீங்குகள் நேர்கின்றன. சமூகத்தால் ஒதுக்கப்படுகிறார்கள். வாய்மூடியிருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

கொடுமை, அச்சுறுத்தல், வன்முறை ஆகியவற்றுக்கு ஆளாகும் பெண்கள் புகார் கொடுக்கும்போது, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் காப்பாற்றவும் இந்த சமுதாயம் தயாராக இருக்கிறதா?

இப்போது மீ டூ (MeToo) என்ற சமூக வலைதளத்தைப் பெண்கள் தவறாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இது தொடர்ந்தால், அதுவே பெண்களுக்கு எதிராகிவிடும். அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்துவிடும்.

கிராமப்புறப் பெண்கள் எதிர்கொள்ளும் அவமானம், கொடுமை, வன்முறையை

ஒப்பிடும்போது, சமூகத்தின் மேட்டுக் குடிப் பெண்களிடமிருந்து வரும் மீ டூ புகார்கள் பல போலியானவை. கிராமப்பெண்கள் தங்களது புகாரைத் தெரிவிக்க வழியில்லாமல் தவிக்கிறார்கள் என்று நீலா சத்திய நாராயணன் பேசினார்.

**சுவையான விவாதம்:**

ரோட்டரியில் யார் சிறந்தவர் ஆணா, பெண்ணா? பட்டிமன்றத் தலைப்பைப் போல் இருக்கிறதல்லவா?

இது தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் மாவட்ட முன்னாள் ஆளுநர் டாக்டர் சரப்ஜித் சிங், இந்திய இன்னர்வீல் சங்கங்களின் கூட்டமைப்பு (Association Of Inner Wheel Clubs In India) தேசிய ஆசிரியர் டாக்டர் சுர்ஜித் கவுர், ரோட்டேரியன்கள் விவேக் ஜாய்கேத்கர், அவரது மனைவி ரூபாலி ஆகியோர் பங்கேற்றனர். அவர்கள் பாலின பாரபட்சம், பெண்களுக்கு உரிய வாய்ப்புகள் கிடைப்பது, ரோட்டரி சங்க நேரம், ரோட்டரி விதிகளைப் பெண்களுக்குக் கற்பித்தல், பெண்கள் தங்களது பல திறன்களை வெளிப்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து விவாதித்தனர்.

இக்குழு விவாதத்துக்கு கோல்கத்தாவைச் சேர்ந்த சோமா ஜெய்ஸ்வால், D 3291, நெறியாளராக இருந்தார். பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த அஸ்வதி தோர்ஜி, IPS (இயக்குநர், மகாராஷ்டிர போலீஸ் அகாடமி); சங்கீதா பேத்கர் (ஒடிசி நாட்டியக் கலைஞர்); ஜெயஸ்ரீ தோத்கர் (குடல் சிகிச்சை மருத்துவ நிபுணர்) மற்றும் மோனிகா அதரே (தடகள விளையாட்டு வீராங்கனை) ஆகியோர் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்த சாதனையாளர்கள் அனைவரிடமும் தடைகளை உடைத்து போராடி ஜெயிக்க வேண்டும் என்ற உறுதி இருக்கிறது. அதுதான் அனைவருக்கும் பொதுவான தன்மை என்று மேதா சேக்கேத்கர் கூறினார்.

ஜல்கான் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் பிரதீப் ஜோஷி, மனித வரலாற்றில் காலம் காலமாக இருந்து வரும் ஒரே போர் ஆண் பெரியவரா, பெண் பெரியவரா என்ற பிரச்சினைதான் என்றார்.



*சர்வதேச இன்னர் வீல் முன்னாள் தலைவர் மீனா கபூருடன் ரேஷ்மி சர்மா மற்றும் சுர்ஜீத் கவுர்.*

**கர்மணி ராணி**

மாநாட்டை ஒட்டி குழு நடனம், பாட்டு, சிறு நகைச்சுவை நாடகம், கவிதை வாசிப்பு, நடிப்பு உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளில் தங்களது திறமையைப் பெண்கள் காட்டினர். ஹசன் மிட் டவுன் ரோட்டரி சங்கத்தின் தலைவர் B K சௌம்யா மணி (D 3182) ஸ்பூர்த்தி (Spoorthi) என்ற குழுவுக்குத் தலைமை ஏற்று நடத்தினார். அவருக்கு கர்மணி ராணி (Karmani Queen) என்ற மகுடம் சூட்டப்பட்டது.

மாநாட்டின் இரண்டாவது நாளில் ஜுகல்பந்தி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பாரம்பரியமும் பிரும்மாண்டமும் கொண்ட வட மகாராஷ்டிர மாநிலம் கந்தேஷ் மண்டலத்தின் தனி இசைக் கருவிகளை இளைஞர்களும் இளம் பெண்களும் இசைத்து மகிழ்வூட்டினர்.

பங்கேற்றவர்களின் போக்குவரத்துக்கான ஏற்பாடுகளை செயலர் ஆஷா வேணுகோபால், ராஷ்மி சர்மா, நாசிக் கிரேப் சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் துர்கா சாலி ஆகியோர் செய்தனர்.

*நாம் அனைவரும் கர்மணிகள் (செயல் வீராங்கனைகள்). அந்த உணர்வு நம்முள் ஊறியுள்ளது. அதுதான் நம் அடையாளம், சமூகத்தை மாற்றும் சக்தி.*

**மின்னா கபூர்**
சர்வதேச இன்னர் வீல் முன்னாள் தலைவர்

**திராட்சைத் தோட்டத்திற்குப் பயணம்**

இந்தியாவின் ஒயின் தலைநகரம் என்று போற்றப்படும் நாசிக்கில் 40க்கும் மேற்பட்ட ஒயின் ஆலைகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளன. நிகழ்ச்சிக்கு வந்திருந்த ரோட்டரி அமைப்பினர் நாசிக்கிலிருந்து 25 கிமீ தொலைவில் உள்ள சோமா ஒயின் கிராமத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 25 ஏக்கர் பரப்பில் பசுமை நிறைந்த நிலத்தில் 15 ஏக்கரில் ஐந்து வகையான திராட்டைகள் கொண்ட தோட்டங்கள் அமைந்துள்ளன. சுமார் 100 டன் திராட்சைகள் ஜனவரி முதல் மார்ச் வரையில் உற்பத்தியாகின்றன. அங்கு ஒயின் சுவைக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

படங்கள்: V முத்துக்குமரன்

# அலிகர் சங்கங்களின் ஹெர்னியா முகாம்

ரோட்டரி செய்திக்குழு



அலிகாரில் உள்ள RUSA மெடிக்கல் சென்டரில் ஹெர்னியா முகாம் நடத்தப்பட்டது. அதில், 92 நோயாளிகளுக்கு 100க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. சிலருக்கு இரட்டை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏழு பேர் கொண்ட வெளிநாட்டு மருத்துவர்களின் குழு இந்த அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டது. அதற்கு D 5420 கவர்னர் டாக்டர் ஸ்காட் லெக்மேன் தலைமைதாங்கினார்.

**முகாமை நடத்தியவர்கள்:** RC அலிகர் சிட்டி, D 3110, மற்றும் RCகள் அலிகர் ராயல், ஸ்மார்ட் சிட்டி, பிரைடு, டிவா, ருத்ரா, சஸ்னி ஆகியோர்; தேவையான ஆதரவை வழங்கியவர்கள்: அலிகர் டிவா ரோடராக்ட் சங்கம் மற்றும் கியான் மஹாவித்யாலயா. விளம்பரத் தட்டிகள், பலகைகள், பதாகைகள், சமூக வலைத்தளங்களில் செய்திகள் ஆகியவற்றின் மூலம் பரவலாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு, ஹெர்னியா முகாம் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அறுவைசிகிச்சை முகாமுக்கு முன்பு, நகரத்தில் எட்டு ஸ்கிரீனிங் முகாம்கள் மூலம் நோயாளிகள் ஹெர்னியா குறித்து ஸ்கிரீனிங் செய்யப்பட்டனர். ■

---

# ஏழு லட்சம் பேர் ரோட்டரி ஸ்டாலுக்கு வருகை

D3012 சங்கம், காஸியாபாத்தில் உள்ள ராம்லீலா மற்றும் தசரா மேலாவில் ரோட்டரி ஸ்டால் அமைத்திருந்தது. நவராத்திரி பண்டிகையின் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த 11-நாள் நிகழ்ச்சிக்கு, அந்தப் பகுதி முழுவதுமிருந்து 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வருவார்கள். பெண்கள் மற்றும் இளைஞர்களை ரோட்டரியின் பக்கம் ஈர்ப்பதும் இந்நிகழ்ச்சியின் இன்னொரு முக்கியக் குறிக்கோளாக இருந்தது.

இந்த ஸ்டால், குழந்தைகளுக்கு பல்வேறு விளையாட்டுக்களை நடத்தியது. எல்லா தினங்களிலும் மருத்துவ முகாம்கள் மற்றும் கண் பரிசோதனை முகாம்களும் ஸ்டாலில் நடத்தப்பட்டன. 3,500 முதல்கட்ட கண் பரிசோதனைகள், 3,300 இரத்தப் பரிசோதனைகள், 5,000 சர்க்கரைப் பரிசோதனைகள் மற்றும் 8,000 வாய்ச் சுகாதாரப் பரிசோதனைகள் நடத்தப்பெற்றன. தேவையுள்ள 1,100 பேருக்கு ஸ்டாலில் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. தினமும் 60,000க்கும் அதிகமான மக்கள் ரோட்டரி ஸ்டாலுக்கு வந்து சென்றனர். ஆக, 11 நாட்களில் மொத்தம் ஏழு லட்சம் பேர் வருகைதந்தனர். நிகழ்ச்சியின் இறுதியில், டிஸ்ட்ரிக்டில் உள்ள வெவ்வேறு சங்கங்களுக்கு 20 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். இந்தத் திட்டப்பணியின் மொத்தச் செலவு ரூ.12 லட்சம். ■



DG *சுபாஷ் ஜெயின் ரோட்டரி ஸ்டாலில்*

# 20 ஆண்டுகளாக எல்லை கடந்த சேவை

ஃப்ராங்க் பர்ஸ்

ராஜேந்திர சாபூ 1992இல் ரோட்டரி இன்டர்நேஷனல் பிரசிடென்டாக தனது பதவிக் காலத்தை முடித்த போது, எப்படி மக்களுக்குத் தொடர்ந்து சேவையாற்றுவது என்பது பற்றி யோசிக்கத் தொடங்கினார். 1998 வாக்கில், ரோட்டரி ஃபவுன்டேஷனின் அறக்கட்டளைத் தலைவராக பதவி வகித்த பிறகு, ஏதாவது தொண்டு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்று அவருடைய உள்ளுணர்வு சொன்னது.

"நான் ரோட்டரி பிரசிடென்டாக இருந்தபோது, உன்னைத் தாண்டி யோசிப்பீர் என்பதை மூலமந்திரமாகக் கொண்டிருந்தேன்'' என்கிறார் சாபூ, இந்தியாவிலுள்ள சந்திகர் நகர ரோட்டரி சங்க உறுப்பினர். ''நான் எல்லைகளுக்கு அப்பால் சேவை செய்வது பற்றி யோசித்தேன். அதனால், 'இந்தியர்கள் உலகுக்கு எதை வழங்க முடியும்?' என்று எண்ணிப் பார்த்தேன். இந்தியா மருத்துவ அறிவியலில் நன்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை உணர்ந்தேன், எனவே இங்குள்ள ரொட்டேரியன் மருத்துவர் களை வைத்து- அபரிமிதமான மருத்துவத் தேவைகள் உள்ள அப்பிரிக்காவுக்கு ஏதாவது வழங்க முடியும் என்று என் மனதுக்குப் பட்டது.''

சாபூ தனது ரோட்டரி நண்பரும் மருத்துவருமான நந்தலால் பாரேக் குடன் இதுபற்றி ஆலோசித்தார். அவர் முன்பு உகாண்டாவில் பணிபுரிந்தவர், சர்வாதிகாரி இடி அமீனின் ஆட்சியில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர். பாரேக் இதுபற்றி தன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி, உகாண்டா உள்நாட்டுப் போரில் சிக்கிக்கொண்டு தவிக்கின்ற போதிலும் அது மருத்துவச் சேவை செய்ய ஒரு சிறந்த இடமாக இருக்கும் என்று சொன்னார். ஆக, 1998ல் சாபூ ஒரு தொண்டுப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார், அதுவே 20 ஆண்டு கால மருத்துவச் சேவைகளுக்கும், 67,000க்கு மேற்பட்ட அறுவை சிகிச்சைகளுக்கும் தொடக்கமாக அமைந்தது.

அந்த முதல் பயணத்தில் சாபூ தன்னுடன் அழைத்துச் செல்ல ஒரு கண் மருத்துவர்களின் குழுவையும், ஓர் அறுவைசிகிச்சை நிபுணர்களின் குழுவையும் ஒன்றுதிரட்டினார். இந்த இரண்டாம் குழுவினர், போலியோ நோயாளிகளுக்கு திருத்த அறுவைசிகிச்சை செய்த அனுபவம் கொண்டவர்கள். பிறகு, பயணம் தொடங்க ஒருசில நாட்களே இருந்த



PRIP *ராஜேந்திர சாபூ இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்ட இரண்டு வயது குழந்தையுடன்.*




*2015ல் ஆர்ச் க்ளம்ஃப் சொசைட்டி உறுப்பினரான பிறகு சாபூ தம்பதியனர்.*

நிலையில், பயங்கரவாதிகள் கென்யா மற்றும் தன்ஸானியாவின் அமெரிக்கத் தூதரகங்களில் குண்டுவெடிப்பு நிகழ்த்தி நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று விட்டனர். உகாண்டாவின் தலைநகரமான கம்பாலாவிலும் மூன்றாம் தாக்குதல் நடந்தது, ஆனால் அது முறியடிக்கப்பட்டது.

“எங்களுக்குத் திகில் ஏற்பட்டது,” நாம் அவசியம் போக வேண்டுமா? நமக்குப் பாதுகாப்பு இருக்குமா?' என்றெல்லாம் மருத்துவர்கள் கேட்டனர்'' என்கிறார் சாபூ.

பிறகு சாபூவின் மனைவி உஷா, முன்னாள் யூகோஸ்லாவியாவில் போர்க் காயம் அடைந்தவர்களுக்கு தொண்டாற்றிவிட்டுத் திரும்பிய ஒரு பெண்மணியிடம் பேசியிருக்கிறார். அவருக்குப் பயமேதும் இருக்க வில்லையா என்று உஷா கேட்ட போது, “நாம் ஒருமுறை தான் சாகப் போகிறோம், எனவே எப்படிச் சாகப் போகிறோம் என்பதுதான் முக்கியம், அந்தச் சமயத்தில் எனக்கு எவ்வொரு அச்சமும் ஏற்படவில்லை, ஏனென்றால் நான் மனிதகுலத்துக்குக் தொண்டாற்றிக் கொண்டிருந்தேன்'' என்று பதிலளித்தார் அந்தப் பெண்மணி.

“அந்தப் பதிலுரை உஷாவின் உள்ளத்தைத் தைத்தது'' என்று நினைவு கூறுகிறார் சாபூ.'' அவள் அதுபற்றி என்னிடம் சொன்னாள். நான் மருத்துவர்களை ஒன்று கூட்டி ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்தேன், அதில் அவள் தன் உரையாடல் பற்றி சொல்லிக் காட்டினாள். பிறகு மருத்துவர்களும் தொண்டுப் பணியாளர்களும்' நாங்கள் பயணத்துக்குத் தயார்' என்றார்கள். ''

அவர்கள் குண்டு வெடிப்புச் சம்பவம் ஏற்பட்ட மூன்றாவது நாள் கம்பாலா வந்திறங்கினர். கம்பாலாவிலிருந்து ஒரு குழுவினர் பேருந்தில் ஏறி கிழக்குத் திசையில் நான்கு மணிநேரம் பயணம் செய்து மஸாகாவை அடைந்தனர், இன்னொரு குழுவினர் வடக்குத் திசையில் குளூ என்ற இடத்துக்குச் சென்று கண் அறுவைசிகிச்சை செய்யத் தயாராயினர். அங்குள்ள உள்ளூர் மருத்துவமனைக்கு கடந்த ஏழாண்டுகளாக எவ்வொரு கண் மருத்துவரும் வந்திருக்கவில்லையாம். எனவே, சில மூதாட்டிகள் தங்களுக்குக் கண் அறுவைசிகிச்சை செய்யப்பட்ட பிறகு சந்தோஷத்தில் நடனமாடினர், ஏனென்றால் அவர்கள் அப்போது தான் முதன்முதலாகத் தங்கள் பேரக் குழந்தைகளைக் கண்ணாரப் பார்க்கிறார்களாம்.

சாபூ எவ்வித மருத்துவ அனுபவமும் இல்லாதவர், எனவே அங்கே இரத்தத்தைப் பார்த்ததும் அவருக்குத் தலைசுற்றிவிட்டது. எனினும் தொண்டாற்ற வந்த அனைவர்களும் காரியத்தில் களமிறங்க வேண்டும் என்பது குழுவின் நிபந்தனை, எனவே சிலர் அறுவை சிகிச்சைக்குத் தயார்படுத்துவதற்காக குழந்தைகளின் அழுக்கடைந்த பாதங்களைக் கழுவினர், சிலர் நோயாளிகளை ஸ்ட்ரெச்சரில் தூக்கி வைத்தனர், சிலர் IV டிரிப்ஸ் ஏற்றுவதைத் துவக்க உதவினர், மற்றும் இன்னபிற தேவையான பணிகளைச் செய்தனர்.

“எங்கள் மருத்துவச் சேவைக் குழுவின் தலைவர் மாதவ் பொராட்டே என்னை நோக்கி,' ராஜா, உடைகளை மாற்றிக்கொண்டு ஆபரேஷன் தியேட்டருக்கு வாங்க, நாங்கள் நோயாளிக்கு ஆபரேஷன் செய்யும் போது நீங்கள் அவருடைய மணிக்கட்டுகளைப் பிடித்து நாடித் துடிப்பைக் கவனிக்க வேண்டும்' என்றார்.' மாதவ், உங்களுக்கு என்ன பைத்தியமா? ஊசிபோடுவதைப் பார்த்தால் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியாது, இரத்தத்தைக் கண்டாலே மயங்கிவிடுவேன்' என்று

சொன்னேன். '' என்பதாக தன் நினைவுகளைச் சொல்லிக் காட்டுகிறார் சாபூ.

பொராட்டேவுக்கும் அந்த நாள் நினைவு இருக்கிறது.'' ஆபரேஷன் ரூம்களில் போதுமான கண்காணிப்புக் கருவிகள் இல்லை, பல்ஸ் ஆக்ஸிமீட்டர் என்ற உபகரணமும் இல்லை'' என்கிறார்.'' அதனால் நாங்கள் மூன்று ரொட்டேரியன்களுக்கு பயற்சி அளித்து, நோயாளிகளின் நாடித் துடிப்பை உணருமாறும், அது ரொம்ப வேகமாகவோ ரொம்ப மெதுவாகவோ இருந்தால் அனஸ்தீசிய நிபுணரிடம் தெரிவிக்குமாறும் வேலைதர முடிவுசெய்தோம். இப்படி, தொண்டுப் பணியாளர்களே பல்ஸ் மீட்டர்களாகச் செயல்பட்டனர்.''

''இரத்தத்தை கண் முன்னால் பார்த்தேன்'' என்கிறார் சாபூ.'' நான் எல்லாவற்றையும் பார்த்தேன், எனக்கு ஒன்றும் நேரவில்லை. அந்த அனுபவம் என்னை முழுமையாக மாற்றிவிட்டது.''

அந்தக் குழுவினர் இந்தியாவுக்குத் திரும்பியதும், தங்கள் அடுத்த பயணத்தில் எத்தியோபியாவுக்கு கூடுதல் நிபுணர்களுடன் செல்லத் திட்டமிட்டனர். மூன்றாம் ஆண்டு அவர்கள் நைஜீரியாவுக்குச் சென்றார்கள். அன்று முதன்முதலாக உகாண்டா பயணத்தில் தொடங்கிய சேவை, இன்றைக்கு 20 வருடங்களில் 500 தொண்டுப் பணியாளர்களை 43 நாடுகளுக்கு அனுப்பியுள்ளது, 67,000 அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது, 2,50,000 நோயாளிகளைப் பரிசோதித்துள்ளது, மேலும் ரோட்டரி ஃபவுன்டேஷனிலிருந்தும், ஜப்பான், கொரியா, தாய்வான் உள்ளிட்ட இதர நாடுகளிலிருந்தும் 2.4 மில்லியன் மானியம் பெற்றுள்ளது. அத்தோடு நிற்கவில்லை. சிக்கலான மருத்துவப் பிரச்சனைகள் கொண்ட ஆப்பிரிக்க நோயாளிகளை சிகிச்சைக்காக இந்தியாவுக்கு விமானத்தில் அழைத்துவர ஏற்பாடு செய்துள்ளனர், அதேபோல் இந்தியாவுக்குள்ளேயும் சேவைப் பணிகளை ஆற்றியுள்ளனர்.

சென்றாண்டு, இச்சேவையின் 20ஆம் ஆண்டு விழாவில், எமது குழுவினர் மீண்டும் உகாண்டா சென்றனர். இன்று அந்நாடு பொருளாதாரத்தில் முன்னேறி, முன்பைவிட அமைதியாகக் காணப்படுகிறது, எனினும் இன்னும் பல தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது.

''மருத்துவமனையில் அடிப்படைக் கட்டமைப்புகளும் வசதிகளும் பெரிதும் முன்னேறியுள்ளது, நர்ஸிங் ஊழியர்களும் ஒத்துழைப்புத் தந்து உதவுகிறார்கள்'' என்கிறார் பொராடே. ''என்றாலும், வழக்கமான அறுவை சிகிச்சைகளுக்குக் கூட போதிய சாதனங்கள், கருவிகள், உபகரணங்கள் இல்லாமல் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது.''

இதையெல்லாம் மீறி, உகாண்டாவில் உள்ள ரொட்டேரியன்கள் மற்றும் மருத்துவர்களின் உதவியைக் கொண்டு, நம் குழுவினர் 440 கண் அறுவை சிகிச்சைகள், 452 பல் சிகிச்சைகள், 25 சீராக்க அறுவைசிகிச்சைகள் மற்றும் 84 பொது அறுவைசிகிச்சைகள் உட்பட மொத்தம் 1,100 அறுவைசிகிச்சைகளை மேற்கொண்டனர்.

''ரொட்டேரியனாக இருந்த எனது 22 வருட அனுபவத்தில் இதுவே மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வு'' என்று (தான்ஸானியா மற்றும் உகாண்டாவின்) முன்னாள் 9211 டிஸ்ட்ரிக்ட் கவர்னர் இம்மானுவேல் கடோன்கோல் கூறினார்.'' ஏராளமான மக்கள் வெகு சிக்கலான பிரச்சனைகளுடன் நாள் கணக்கில் அறுவைசிகிச்சைக்காக வரிசையில் காத்திருப்பதையும், பிறகு அவர்களின் முகத்தில் புன்னகை பிறப்பதையும் பார்க்கும் போது பெருமகிழ்ச்சியாக இருந்தது. இன்றுவரை எங்களுக்கு தொலைபேசியில் அழைப்புகள் வந்து கொண்டே இருக்கிறது,' இந்திய மருத்துவர்கள் எங்கே? அவர்கள் திரும்ப வருவார்களா?' என்று கேட்கிறார்கள். ''

2019க்கு சாபூ இதைவிட பெரிய இலக்கு வைத்திருக்கிறார்.'' 2018-19 RI பிரசிடென்டாக பதவி வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டு துரதிர்ஷ்டவசமாக 2017ல் காலமான சாம் ஒவேரி என்னிடம் இப்படிச் சொன்னார், 'ராஜா, நான் பிரசிடென்டாக பதவியேற்கும் ஆண்டில் ஆப்பிரிக்காவின் ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டுக்கும் ஒரு மருத்துவர்கள் குழு போய்வர நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.' அதற்கு,' நான் முயற்சிக்கிறேன்' என்று சொன்னேன்.

''சாம் ஒவோரி இறந்த பிறகு, பிரசிடென்ட் பேரி ராஸ்ஸின் என்னை நோக்கி,'' 'ராஜா, சாம் கனவை நாம் நனவாக்க முடியுமா என்று பார்க்கலாம்' என்றார். அதற்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறோம்.''

© தி ரோட்டேரியன்.



PRIP *ராஜேந்திர சாபூ மற்றும் உஷா அன்னை தெரசாவுடன்.*

## Rotary News Subscription Remittances

**You can pay the**
**Rotary News / Rotary Samachar**
**subscription online**

**Our Bank details:**

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank<br>SB Account |
| Branch | : | Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

**E mail us following details:**

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

### RI Exchange Rate - January 2019

**$1 = `70**

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,224,445 |
| Clubs | : | 35,942 |
| Districts | : | 538 |
| *Rotaractors | : | 218,730 |
| Club | : | 9,510 |
| *Interactors | : | 541,029 |
| Clubs | : | 23,523 |
| RCC | : | 10,105 |

*Estimated

As of Dec. 10, 2018

## Membership Summary

As on December 1, 2018

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,794 | 229 | 39 | 232 | 193 |
| 2982 | 69 | 3,146 | 159 | 64 | 113 | 52 |
| 3000 | 129 | 5,280 | 474 | 231 | 679 | 199 |
| 3011 | 82 | 3,511 | 754 | 47 | 115 | 25 |
| 3012 | 89 | 3,680 | 798 | 48 | 130 | 56 |
| 3020 | 78 | 4,096 | 231 | 54 | 466 | 349 |
| 3030 | 90 | 4,875 | 587 | 75 | 313 | 165 |
| 3040 | 97 | 2,181 | 240 | 33 | 124 | 142 |
| 3053 | 72 | 3,116 | 554 | 9 | 56 | 96 |
| 3054 | 130 | 6,189 | 1061 | 76 | 321 | 474 |
| 3060 | 103 | 4,340 | 551 | 59 | 131 | 141 |
| 3070 | 104 | 3,136 | 324 | 45 | 163 | 57 |
| 3080 | 79 | 3,337 | 265 | 71 | 223 | 108 |
| 3090 | 77 | 2,008 | 52 | 35 | 37 | 122 |
| 3100 | 77 | 1,864 | 112 | 9 | 77 | 146 |
| 3110 | 116 | 3,914 | 337 | 24 | 52 | 104 |
| 3120 | 76 | 3,327 | 418 | 28 | 62 | 52 |
| 3131 | 131 | 5,538 | 1233 | 88 | 306 | 90 |
| 3132 | 99 | 3,776 | 373 | 38 | 214 | 150 |
| 3141 | 93 | 5,564 | 1310 | 107 | 265 | 84 |
| 3142 | 94 | 3,498 | 654 | 72 | 205 | 65 |
| 3150 | 98 | 3,647 | 358 | 56 | 240 | 109 |
| 3160 | 71 | 2,439 | 134 | 21 | 48 | 81 |
| 3170 | 127 | 5,693 | 617 | 55 | 343 | 164 |
| 3181 | 77 | 3,447 | 298 | 41 | 249 | 109 |
| 3182 | 85 | 3,359 | 245 | 23 | 278 | 95 |
| 3190 | 131 | 5,107 | 683 | 117 | 364 | 50 |
| 3201 | 142 | 5,359 | 340 | 91 | 134 | 49 |
| 3202 | 130 | 5,021 | 259 | 73 | 441 | 47 |
| 3211 | 139 | 4,477 | 293 | 6 | 90 | 126 |
| 3212 | 99 | 4,160 | 352 | 92 | 281 | 142 |
| 3231 | 78 | 3,327 | 280 | 48 | 214 | 249 |
| 3232 | 113 | 4,709 | 724 | 110 | 330 | 81 |
| 3240 | 91 | 3,176 | 400 | 40 | 160 | 166 |
| 3250 | 101 | 3,972 | 704 | 58 | 210 | 176 |
| 3261 | 73 | 2,663 | 356 | 5 | 104 | 43 |
| 3262 | 91 | 3,459 | 430 | 37 | 75 | 75 |
| 3291 | 149 | 3,792 | 721 | 82 | 135 | 600 |
| **India Total** | **3,794** | **1,48,977** | **17,910** | **2,207** | **7,980** | **5,232** |
| 3220 | 69 | 1,995 | 274 | 75 | 204 | 73 |
| 3271 | 84 | 1,482 | 271 | 50 | 19 | 15 |
| 3272 | 163 | 2,735 | 396 | 46 | 37 | 38 |
| 3281 | 208 | 5,792 | 841 | 219 | 93 | 188 |
| 3282 | 147 | 4,144 | 447 | 110 | 48 | 42 |
| 3292 | 119 | 4,563 | 686 | 120 | 125 | 111 |
| **S Asia Total** | **4,584** | **1,69,688** | **20,825** | **2,827** | **8,506** | **5,699** |

*Source: RI South Asia Office*

# இந்தியாவில் மலோனி



சிறப்பு ஏற்பாடு

*கேய் மலோனி பினோதாவுடன் அலவலாவுகிறார். RIPE மார்க் மலோனி மற்றும் PRIP கல்யாண் பானர்ஜீயும் உடன் உள்ளனர்.*



சிறப்பு ஏற்பாடு

PRID *அசோக் மகாஜன், ஃபிரோஸ் கச்வாலா, மாலா,* RID C. *பாஸ்கர், கேய்,* RIPE *மலோனி மற்றும்* DG *சஷி சர்மா.*






RIPE மலோனி, PRIP ராஜேந்திர சாபூ, RIDE பரத் பாண்டியா மற்றும் DGE ஹர்ஜித் சிங் தல்வாருடன்.



மஞ்சு ஜெட்லி, ரீடா சர்மா, நந்திதா கங்கூலி, மாலா பாஸ்கர், நயன்தாரா மகாஜன் மற்றும் ரஞ்சு குப்தா.




RIPN சுஷில் குப்தாவுடன் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி.



RIDE கமல் சங்கவி.



சூரத்தில் நடந்த பல்நகர
கூட்டத்தில் பங்கேற்ற
RIPE மலோனி மற்றும் கேய்.



மலோனி தம்பதியினர் சூரத்தில்
ஆட்டோ பயணம்.





சுமுல் பட்டேல், DG பிங்கி பட்டேல், PDG ருச்சிர் ஜானி,
RIDE பரத் பாண்டியா, PDG நீலேக்ஸ் முஃப்தி,
PRID மனோஜ் தேசாய் மற்றும் ஷர்மிஷ்டா.





RIDEs கமல் சங்வி மற்றும் பரத் பாண்டியா.
இடதுபுறம்: யூத் எக்ஸ்சேன்ஜ் மாணவர்களுடன்
RIPE மலோனி மற்றும் கேய்.

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ, வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION



# குப்பைகளை எறியாதீர்கள், விதைப் பந்துகளை எறியுங்கள்

ரஷீதா பகத்

கோவா, இந்தியர்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் அழகான சுற்றுலாத் தலம். ஆனால், இப்போது புதிது புதிதாகக் கட்டப்படும் கட்டடங்கள், நகரத்தின் வளர்ச்சி காரணமாக அங்கு இயற்கைச் சூழல் சிதைந்து வருகிறது. அதை மாற்றி, மீண்டும் சூழலைக் காப்பதற்கு மாபுகா ரோட்டரி சங்கம் (D 3170) முடிவெடுத்தது.

இது எங்களது ரோட்டரி சங்கத்தின் 53வது ஆண்டு. நான் சங்கத்தின் 53வது தலைவர். நான் தலைவராகவும், ஆஷ்லி டேலானி செயலாளராகவும் தேர்ந் தெடுக்கப் பட்டபோது, இந்த இயற்கையைப் பாதுகாப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தோம். சங்கம் தொடங்கப்பட்டது முதல் ஆண்டு தோறும் 25, 30 மரக்கன்றுகளை நட்டு வருகிறோம். ஆனால், மரங்கள் வெட்டப்படும் வேகத்தைப் பார்த்தபோது, மரக்கன்றுகளை நடும் எங்கள் பணியால் எந்த மாற்றம் ஏற்படாது என்று தெரிந்துகொண்டோம் என்று சங்கத் தலைவர் அஜய் மேனன் கூறினார்.

உதாரணத்துக்கு, எங்களது ரோட்டரி சங்கத்தில் 80 உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஒவ்வொருவரும் வீடு கட்டியபோது, மரக்கன்றுகளை நட்டிருந்தாலும் கூட கட்டுமானத்துக்காக மரங்கள் வெட்டப்படுவதை ஈடு செய்ய முடியாது என்றார் அவர்.

ரோட்டரி சங்கத்தின் செயலர் ஆஷ்லி டேலானி, நாடு முழுவதும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த ஆய்வுப்படி கடந்த பத்தாண்டுகளில் 1 கோடியே 6 லட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பில் காடுகள் அழிக்கப்பட்டு விட்டது தெரியவந்துள்ளது. இது தில்லி பரப்பைப் போல 70 மடங்கு பெரியது என்றார். அழிக்கப்பட்ட காடுகள் நாடு முழுவதும் காடு வளர்ப்பைப் போல மூன்று மடங்குக்கும் அதிகமானவை. நாட்டின் மொத்த காட்டுப் பகுதியில் 15 சதவீதம் ஆகும் என்றார்.

சுற்றுச்சூழலைக் காக்க வேண்டியதன் அத்தியாவசியம் குறித்து அடுத்த தலைமுறைக்கு எப்படி விழிப்பு ஊட்டுவது என்பது குறித்து ரோட்டரி சங்கத் தலைவரும் செயலாளரும் தீவிரமாக விவாதித்தனர். அத்துடன் பள்ளிகளில் மரக்கன்றுகளை நட்டு வருகிறோம். இந்தக் காலத்தின் பல சிறுவர்கள் மரக்கன்றுகளை நடும்போது தங்களது கைகளில் மண் படிவதை விரும்புவதில்லை என்று இருவரும் கூறினர்.

அதனால், பரவலாக நடைமுறையில் உள்ள ஜப்பானிய நுட்பத்தைக் கடைப்பிடிப்பது என்று முடிவு செய்தனர். அதுதான் விதைப்பந்து முறை. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விதைகளை கலப்புரத்துடன் சேர்த்து மண்ணில் சேர்த்து பந்துகளைப் போல் உருட்டி வைத்து இரண்டு வாரம் வெயிலில் காய வைக்கப்படும். அது நன்கு காய்ந்து இறுகி பந்து வடிவம் பெறும். அந்தப் பந்துகள் பசுமை குறைந்த பகுதிகளில் வீசி எறியப்படும். அங்கு அந்த விதைகள் முளைக்கும்.



*RC மாபுகா தலைவர் அஜய் மேனன், RAC மாபுகா தலைவர் ஆர்யா பரிக்கர் மற்றும் இன்னர் வீல் தலைவர் நடாஷா கோட்கர் மற்றும் ரோட்டரியினர் விதைப்பந்து விதைக்கும் துவக்க விழாவில்.*

சங்கத் தலைவர் அஜய் மேனன் விமான நிறுவனத்தில் உயர் அதிகாரியாக இருக்கிறார். அவர் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தபோது, கென்யா அரசு இந்தத் தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்ததைப் பார்த்திருக்கிறார்.

தோட்டக்கலை நிபுணர் ரொட்டேரியன் ரோஸென்டோ மென்டோன்ஸா கோவாவில் விவசாயம் செய்து வருகிறார். அவர் விதைப்பந்துகளை உருவாக்குவதற்குத் தேவையான கலப்பு உரம், மண் ஆகியவற்றை தயாரிக்கத் துணை புரிகிறார்.



விதைப் பந்தை தரிசு நிலங்களில் காற்றில் ஈரப்பதம் உள்ளபோது வீசி எறிந்தால், மண்ணில் ஈரமும், மழை பெய்யும்போது, விதைப் பந்திலிருந்து செடி முளைப்பதற்கு வாய்ப்பு நிச்சயம். அந்த பந்தில் நிறைய விதைகளை வைத்திருந்தால், முளைப்பதற்கான சாத்தியக் கறுகள் அதிகம் என்றார்.

இத்தகைய விதைப் பந்துகளை மார்ச் மாதம் தயாரித்து பெறுவதற்கு ரோட்டரி சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அப்போதுதான் ஜூன் மாதம் பருவ மழை பெய்யும்போது, விதைப் பந்துகள் முளைப்பதற்குத் தயாராகும். ஒரு விதைப் பந்தின் விலை ரூ.5. ரோட்டரி சங்கம் இதுவரை 26 பள்ளிகளில் 32 ஆயிரம் விதைப் பந்துகளை விநியோகித்துள்ளது.

இந்தத் திட்டத்தை அரசு, பஞ்சாயத்து, நகராட்சி அதிகாரிகள், ஊழியர்கள், கவுன்சிலர்கள், வார்டு உறுப்பினர்கள் வரவேற்றுள்ளனர்.

3170வது மாவட்டத்துக்கு உள்பட்ட இதர ரோட்டரி சங்கங்களுக்கும் விதைப்பந்துகள் வழங்கப்படுகின்றன.

நல்ல பணிகள் வீட்டிலிருந்துதான் தொடங்க வேண்டும். இதையடுத்து, பெரும் பாலான ரோட்டரி உறுப்பினர்கள் விதைப்பந்துகளைத் தங்களது வீட்டின் பின்புறத்திலும் சமையல் தோட்டத்திலும் வீசு கிறார்கள். விதைப்பந்து களிலும் கொன்றை (Gulmohar), பப்பாளி, முருங்கை ஆகியவற்றுக்கு நிறைய வரவேற்பு உள்ளது.




ரோட்டரி சங்கம் சுற்றுலாவுக்கோ பொழுதுபோக்கு உலாவுக்கோ செல்லும் போது, உடன் வரும் குழந்தைகள் தங்களது கைகளில் விதைப்பந்துகளை எடுத்துச் செல் கிறார்கள். 'தரிசு நிலத்தைப் பார்த்தால் குப்பை எறியாதே, விதைப் பந்தினை எறிந்துவிடு' என்பதுதான் எங்களது சித்தாந்தம். அது மட்டுமல்ல, குழந்தைகளுக்கு விளையாட்டாகவும் பொழுதுபோக்காகவும் உள்ளது.

தற்போது 32 ஆயிரம் விதைப்பந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் விதைப்பந்துகளைத் தயாரிக்க ரோட்டரி சங்கம் திட்டமிட்டுள்ளது. இதில் கார்ப்பரேட் நிறுவனங்களைப் பங்குதாரர்களாக ஈடுபடுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு பள்ளிகள் ஆர்வத்துடன் முன்வந்துள்ளன. குழந்தைகளுக்கு பசுமையின் அவசியம், சூழல் காப்பு குறித்து மிக நீண்ட விளக்கத்தை அளித்துள்ளோம். பள்ளிக்கூடங்களில் நடைபெறும் அசெம்பிளி கூட்டங்களில் இது குறித்து விவரித்துள்ளோம். சில பள்ளிகளில் நான்கைந்து முறை இது போன்ற விளக்கங்களை நிகழ்த்தியுள்ளோம். இப்போது பல பள்ளிகள் கொன்றை மரம், பப்பாளி மரங்களின் கன்றுகளைக் கேட்டுள்ளன. நீண்ட காலத் திட்டமாக பத்து லட்சம் மரக்கன்றுகளை நடுவது என்று ரோட்டரி சங்கம் லட்சிய இலக்கைக் கொண்டிருக்கிறது என்று ஆஷ்லி டேலானி தெரிவித்தார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# குழந்தைகளின் ஒரு நாள் சுற்றுலா

ஜெய்ஸ்ரீ

கொல்கத்தாவில் நகரத்தில் இருக்கும் பல்வேறு ஆதரவற்ற விடுதிகளில் இருந்து வந்திருந்த குழந்தைகளின், சவாரிகள் மற்றும் விளையாட்டுகளால் இங்கிருக்கும் நிக்கோ பார்க் மகிழ்ச்சி, கூச்சல் மற்றும் சிரிப்புடன் நிறைந்திருந்தது.

வேடிக்கை தொகுப்பு என்று அழைக்கப்படும், இந்த வருடாந்திர குழந்தைகளுக்கான பரிசு, 1925 ஆம் ஆண்டு முதல் D 3291 கல்கத்தா ரோட்டரி சங்கத்தின் முத்திரைத் திட்டங்களில் ஒன்றாகும். ஐந்து குழந்தைகள் காப்பகங்களில் இருக்கும் 200 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் பல்வேறு ஆதரவற்றோர் இல்லங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் இருக்கும் 1,750 குழந்தைகளாக படிப்படியாக அதிகரித்துள்ளது. “இந்தக் குழந்தைகள் பொதுவாக எங்கள் RCCகளுடன் தொடர்புடைய நலிவடைந்த பிரிவுகளில் இருந்து வருகிறார்கள். குழந்தைகளின் மனநிறைவு மற்றும் நம்பிக்கையை உயர்த்துவதற்காக இந்தச் சுற்றுலா திட்டமிடப்பட்டுள்ளது’’ என்று சங்க உறுப்பினர் அமித் கோஷ் கூறினார். அடுத்த ஆண்டு நூற்றாண்டு விழாவை கொண்டாடவிருக்கும் இந்தச் சங்கம் அடிக்கடி இந்த இல்லங்களுக்குச் சென்று, எழுதுபொருள்கள், சீருடைகள், காலணிகள், ஆடைகள் போன்றவற்றை விநியோகித்து, பிறக் கல்வி தொடர்பான உதவிகளைச் செய்கிறது.

93 ஆண்டுகளாகச் சங்கம் நடத்தும் சாதனை திட்டம் என்று சங்கத்தின் தலைவர் ஹீனா கோர்ஸியா சொன்னார். தாவரவியல் பூங்காவில் ஆரம்பித்த இச் சுற்றுலா திட்டம், தேசிய நூலகம், அலிபூர் மிருகக்காட்சி சாலைக்கு மாறி, பிறகு 1993 ஆம் ஆண்டு முதல், சால்ட் லேக் பகுதியில் உள்ள நிக்கோ பார்க்கில் நடைபெறுகிறது. சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரான ராஜீவ் கவுலுக்குச் சொந்தமான 40 ஏக்கர் பூங்காவில், 35 விதமான உற்சாக விளையாட்டுகள் இருக்கிறது, அவரது பெருந்தன்மையால், பல ஆண்டுகளாகக் குழந்தைகளுக்கான நிகழ்ச்சி நடத்த உதவியாக இருக்கிறது. இந்த நாளில் பூங்கா மற்றவர்களுக்கு அனுமதியளிக்காமல், இந்தக் குழந்தைகளுக்கு பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்படுகிறது. “இது சமுதாயத்திற்கு திருப்பிக் கொடுக்கும் கவுலின் வழி’’ என்கிறார் கோஷ்.

உள்ளூர் பள்ளிகளில் இருக்கும் பேருந்துகளில் புறநகர்ப் பகுதிகளில் இருக்கும் சில ஆதரவற்ற இல்லங்கள் உட்பட பல்வேறு இடங்களிலிருந்து குழந்தைகளை அழைத்து வந்தனர். புல்வெளிகளில் குழுக்கள் ஒன்று கூடி காலை உணவை முடித்தவுடன், தொப்பி மற்றும் தின்பண்டங்கள் கொண்ட பை கொடுக்கப்பட்டவுடன், வேடிக்கை தொடங்குகிறது.

DG முக்குல் சின்ஹா, IPDG





ப்ரோஜோ கோபால் குண்டு மற்றும் DGE அஜய் அகர்வால் ஆகியோர்கள் குழந்தைகளை மகிழ்ச்சியாக வரவேற்றனர். சக்கர நாற்காலியில் இருக்கும் 10 வயதான நீரஜ் குமாரை நான் பார்த்தேன், அவன் கடந்த மூன்றாண்டுகளாக இந்த நிகழ்வுக்கு வந்து கொண்டிருக்கிறான். “என்னால் இந்த விளையாட்டுகளில் சவாரி செய்ய முடியாது, ஆனாலும் நான் இந்த மாதிரி வெளியே வந்து நண்பர்களுடன் ஒன்றாக இருப்பது எனக்குப் பிடிக்கும், மேலும் புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்ள எங்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கும்,'' என்று அவன் கூறினான்.



மதிய நேரத்தில், குழந்தைகள் சோர்வடைந்தாலும், முகங்களில் மகிழ்ச்சி ததும்புகிறது. மதிய உணவுக்காகப் புல் வெளியில் மீண்டும் கூடினார்கள். “இங்கே சமையல்காரர்களை வரவழைத்து சைவம் மற்றும் அசைவ உணவு களைச் சூடாக வழங்குகிறோம். சங்க உறுப்பினர்கள் புதிய மெலமைன் தட்டுகளில் உணவைப் பரிமாறுகிறார்கள், அந்தத் தட்டுக்களை, குழந்தைகள் வீட்டுக்கு எடுத்துப் போகலாம்,'' என்றார் ஹீனா. அது ஒரு சாதாரண மதிய உணவு இல்லை, அது ஒரு பெரிய விருந்தாக எனக்குத் தோன்றியது.

மதிய உணவிற்குப் பிறகு, குழந்தைகளுக்கான கலை நிகழ்ச்சி, மேஜிக் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மேஜிக் நிபுணர், தொப்பியில் இருந்து ஒரு முயலை எடுத்தது அல்லது எங்கிருந்தோ ஒரு புறாவை வரவழைத்தது போன்றவற்றிற்கு குழந்தைகள் “ஆஹா” என்று உற்சாக கூச்சலிட்டார்கள். சிறிய குழந்தைகள், களைப்பு மிகுதியால் நாற்காலியிலே தூங்கினார்கள்.

*RC கல்கத்தாவைச் சார்ந்த S K சர்மா, சுபாஜித் குஹா மஜீம்தார், IPDG ப்ரோஜோ குண்டு, சமீரன் சென், ராஜ் குமார் அகர்வால், ஹீனா கோர்சியா மற்றும் அமித் கோஷ்.*




*சக்கர நாற்காலியில் நீரஜ்குமார்*

மாலை 4 மணியளவில், வீட்டிற்குப் போகும் நேரமானவுடன், ஹீனா மற்றும் அவரது குழுவினர் குழந்தைகளுக்கு மேலும் சில பரிசுப் பொருட்களை கொடுத்து, மீண்டும் அடுத்த ஆண்டு பார்க்கலாம் என வழியனுப் பினார்கள். ரோட்டாராக்ட் உறுப்பினர்கள் மற்றும் அந்தந்த நிறுவன ஊழியர்களின் உதவியுடன் அவர்கள் பேருந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.■



# சங்கத்திற்கு விருது பெற்று தந்த கூமர் நடனம்

V முத்துக்குமரன்



ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் மார்வார் மஹோத்சவ்-இன் முதல் நாளில், வண்ணமயமான ஆடைகளில் ராஜஸ்தானி பெண்கள், மாநிலத்தின் தனித்துவமான பாரம்பரிய கூமர் நடனமாடினார்கள். இந்தியன் புக் ஆஃப் ரெகார்ட்ஸில் இடம் பிடித்த, மக்களை மயக்கிய, பல்வேறு துறைகளை சேர்ந்த 1,760 பெண்கள் ஒருங்கிணைந்து ஆடிய இந்த நக்ராளி கூமர் நடனம், சுமார் 16 நிமிடங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மண்டோரே கார்டனை அதிர வைத்தது.

இந்த நிகழ்ச்சியை D 3053, RC ஜோத்பூர் சன்ஸ்கர் முழுமையாக வடிவமைத்து நடத்தியது. சங்க தலைவர் மேக்னா ராஜ்புரோஹித், மாவட்ட ஆட்சியாளர் டாக்டர். ரவிக்குமார் சுர்பூருக்கு இந்த கூமர் நடன விருதை வழங்கும் முன்முயற்சியை மேற்கொண்டார்.'' அதில் மிகவும் ஈர்க்கப்பட்ட அவர், எங்களை மார்வார் விழாவை நடத்த, மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலா துறையுடன் கை கோர்க்கச் சொன்னார்,'' என்று அவர் சொல்கிறார். இந்தப் பெரிய திருவிழாவிற்காக, மூன்று நிறுவனங்களும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

கூமர் நடனம் ஒரு பெரிய குழு நடனமாக முதல் முறையாக மண்டோரே கார்டனில் ஆடப்பட்டது, இதுவரை திருவிழாக்கள்

மற்றும் சிறப்பு நிகழ்வுகளில் குடும்பத்தினருக்காக மட்டும் வீட்டில் ஆடப்பட்டது. நாங்கள் மாவட்ட நிர்வாகத்திடம் நிகழ்ச்சியை விளம்பரப்படுத்தவும், பாதுகாப்பு வழங்கவும் கேட்டுக் கொண்டோம் என்றார் மேக்னா.

வானொலியில் விளம்பரம் செய்யப்பட்டது, ஒரு பிரத்தியேக வலைத்தளம் (www.nakhralighoomar.com) மற்றும் யூ-டியூப் சேனல், இந்த நிகழ்ச்சியைப் பிரபலப்படுத்த உருவாக்கப்பட்டன. சமூக ஊடகங்கள் மூலம் நிகழ்ச்சி பற்றிய விவரங்கள் பரப்பப்பட்டதால், நிறையப் பெண்கள் இணையத்தில் கூமர் நடனமாடப் பதிவு செய்தார்கள்.

ரோட்டரி பற்றிய எண்ணத்தை மக்கள் மனதில் உயர்த்துவதற்கு, பாரம்பரிய நடை போன்ற நிகழ்ச்சிகளை அவ்வப்போது நடத்தி நம் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாக்க நிதி திரட்டுவோம் என்றார்.





பிற உயர்மட்ட நிகழ்வுகளான ஆரோக்கியமான இதயத்திற்காக வாக்கத்தான், ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற வலியுறுத்தும் சைக்ளோத்தான் போன்ற நிகழ்ச்சிகள், நிறைய பேர் பங்கு பெற வேண்டும் என்ற நோக்கத்தில், அதிகமாக விளம்பரம் செய்யப்படும்.

### மண்டோரே கார்டன் புத்துயிர் பெறுகிறது

கண்களுக்கு ஒரு அழகான பின்னணியை வழங்கிய மாண்டோரே கார்டன், கூமர் நிகழ்ச்சியின் பின் விளைவாக, ஒரு புதிய தோற்றம் பெற்று சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தொடங்கிவிட்டது.'' நிகழ்ச்சிக்கு முன், இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பண்டைய கட்டமைப்புகள் மீது களைகள் மற்றும் முட் புதர்கள் வளர்ந்திருந்தது. அங்கே இருந்த புல்வெளிகள், நீரூற்றுகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் கோயில்கள், கவனிக்கப்படாமல் மோசமான நிலையில் இருந்தது,'' என மேக்னா நினைவு கூர்ந்தார். இப்போது நான்கு கோடி ரூபாய் செலவில், மாவட்ட நிர்வாகம் இந்தப் புராதன தோட்டத்தை மறுசீரமைக்கப் போகிறது.

இந்திய நாட்டுப்புற நடனம் பற்றிய ஒரு ஆவணப்படத்திற்காக, இந்த நடன நிகழ்ச்சியை சில இத்தாலியர்கள் படம்பிடித்தார்கள், அது எல்லா நாடுகளிலும் வைரலாக பரவியது. அதன் பின்னர், அமெரிக்காவில் உள்ள ராஜஸ்தானி அசோசியேஷன் அமெரிக்க நகரங்களில் இந்த நடன வகுப்புகளைத் துவக்கியுள்ளார்கள்.

ஆண்டுதோறும் மாநில அரசாங்கத்தால் நடத்தப்படும் மார்வார் திருவிழாவின் துவக்கத்தில் நடைபெற்ற இந்த நடன நிகழ்ச்சியை 10,000க்கும் மேற்பட்டோர் பார்த்தார்கள், உள்ளூர் டிவி சேனல்களில் ஒளிபரப்பப்பட்டது. பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்ற நீதிபதி நிர்மால்ஜித் கவுர் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இந்த அனைத்து மகளிர் சங்கத்தில் 97 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ரோட்டரி கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த, இவர்கள் அனைவரும் பிரெசிடென்ட்டுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். ''எங்கள் திட்டங்கள் சுகாதாரம், கல்வி மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, இதனால் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்வாதாரம் மேம்படுகிறது'' என்றார் மேக்னா.■

**மேலே:** *ஜோத்பூர் சன்ஸ்கார் சங்கத் தலைவர் மேக்னா ராஜ் புரோஹித் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் ரவிக்குமார் சுர்பூர் இந்திய புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் விருது பெறுகின்றனர். உடன் DG ப்ரியேஷ் பண்டாரியும் உள்ளார்.*

# வண்ணமயமான கொலம்பியா

ரஷீதா பகத்





*கார்டஹீனா கடற்கரையின் இரவுக் காட்சி.*

நீங்கள் கொலம்பியாவுக்கு பயணம் செல்லத் திட்டமிடும் போது, 'கொலம்பியாவில் பாதுகாப்பாக இருப்பது எப்படி' என்று ஒரு கட்டுரையை படிக்கிறீர்கள், அதில் முகப்பு வரிகள் இப்படிச் சொல்கிறது: “கார்டஹீனா நகரம் (கொலம்பியாவின் அழகிய துறைமுக நகரம்) பாலியல் சுற்றுலாவுக்கு எதிரான அரசு நடவடிக்கைகளுக்கும், வெளிநாட்டவர் மீதான தாக்குதல்களுக்கும் இன்று ஆளாகி வருகிறது''. மேலும், அது போதை மருந்துக் கடத்தலுக்கும் நிழலுலக தாதாக்களுக்கும் பெயர்போன நாடு என்றும் கேள்விப்படுகிறீர்கள். அந்தக் கட்டுரை அத்தோடு நிற்கவில்லை. ஒரு சுற்றுலாப் பயணி கார்டஹீனா என்ற கொலம்பியாவின் சுவர்க்கலோகக் கடற்கரைக்கு வந்திறங்கு கிறார். முதல் நாளே பணம், கிரெடிட் கார்டுகள், பாஸ்போர்ட் சகிதம் அடங்கிய அவரது வாலட் திருட்டுப் போகிறது. இத்தோடு நின்றுவிட்டால் நீங்கள் அதிர்ஷட சாலி என்றும் அந்தக் கட்டுரை சொல்கிறது. ஏனென்றால், பல சுற்றுலாப் பயணிகள் வழிப்பறிக்கு ஆளாவது மட்டுமல்லாமல், அடித்து நையப் புடைக்கப்படுகிறார்களாம்.

நல்ல வேளையாக, நாங்கள் இந்தக் கட்டுரையை ஓர் உள்ளூர் செய்தித்தாளில் கடைசி நாள் தான் பார்த்தோம்.

கார்டஹீனா கொலம்பியாவின் வட பகுதியில் கரீபிய கடலோரம் வீற்றுள்ள துறைமுக நகரம். மிகச்சிறந்த சுற்றுலாத் தலம். கண்கவரும் கடற்கரைகள். அந்தக் கடற்கரை முகப்பில் சீரான அரைவட்டத்தின் புள்ளிகளைப் போல அமைந்து ஜொலிக்கும் நவீன வானுயர் கட்டிடங்கள். நகர நிர்வாகம் அவ்வூரின் விலைமதிப்பற்ற பாரம்பரியத்தைப் பேணிகாக்க மிகுந்த கவனம் எடுத்திருந்தது.

நாங்கள், மெக்ஸிகோவில் வசித்த எங்கள் மகனைப் பார்க்கப் போனபோது திடீரென்று கொலம்பியா சென்றுவர முடிவெடுத்தோம். ஒரு புதிய நாட்டுக்குச் செல்ல திடீரென்று திட்டமிடும் போது, இந்திய பாஸ்போர்ட் வைத்திருக்கும் எங்களுக்கு ஒரு தனி வசதி இருக்கிறது. அதன்படி, பாஸ்போர்ட்டில் அமெரிக்க அல்லது ஷென்ஜென் விசா முத்திரை இருந்தால், விசா தேவையில்லாத நாடுகள் என்று ஒரு பட்டியல் இருக்கும், அதில் ஒன்றை நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இரண்டு வருடத்துக்கு முன்பு, இப்படித்தான் கோஸ்டா ரிகா நாட்டுக்குச் சென்றோம். இம்முறை கொலம்பியா சென்றுவரத் திட்டமிட்டோம். மெக்ஸிகோ சிட்டியிலிருந்து ஐந்து மணிநேர விமானப்

பயணமாக தலைநகர் பொகொடா சென்றுவிடலாம், அங்கிருந்து இன்னும் இரண்டு மணிநேரம் பறந்தால் கார்டஹீனாவை அடைந்துவிடலாம்.

மெக்ஸிகோ விமான நிலையத்தில் செக்-இன் கவுன்ட்டரில் நின்றிருந்த ஒரு அதிகாரி எங்கள் கொலம்பியா விசாவை பார்க்கவேண்டும் என்று அதிகாரமாகக் கேட்டது. ஆனால் நாங்கள் விவரம் அறிந்தவர்கள், 180 நாட்கள் செல்லுபடியாகும் அமெரிக்க அல்லது ஷென்ஜென் விசா வைத்துள்ள இந்தியர்களுக்கு விசா விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று கொலம்பிய அரசாங்க வலைத்தளத்திலேயே அதை உறுதிசெய்துவிட்டோம். எனவே, அதன் நகலை ஸ்மார்ட்போனில் அவரிடம் காட்டிவிட்டு, கிளியரன்ஸ் பெற்று விமானத்தில் ஏறினோம்!

அங்கே, கடற்கரை முகப்போடு மோதுவது போன்று நின்றிருந்த ஓர் வானுயர் கட்டிடத்தின் 22ஆம் தலத்தில் ஒரு ஜோரான ஏர்பின்ப் (AirBnb) அபார்ட்மெண்டை முன்பதிவு செய்திருந்தோம், அங்கே சென்று பார்த்தபோது, கடற்கரைக் காட்சி உள்ளிட்ட கரீபிய கடலோரத்தின் வியக்கவைக்கும் காட்சியில் கரைந்து போனோம்.

கார்டஹீனா நிச்சயமாக தென் அமெரிக்காவின் மிகத் துடிப்பான நகரங்களில் ஒன்றாக உருவாகியிருந்தது. கொலம்பியாவின் வடக்குக் கடலோரத்தில் பதித்த ரத்தினக் கல் போல் இருந்தது. அங்கே வயிற்றுப் பசிக்கு விருந்தாக விலையுயர்ந்த ஆடம்பர உணவகங்கள் முதல், சிக்கனமான ஆனால் ருசியான தெருவோர உணவுகள் வரை பல்வேறு தெரிவுகள் இருந்தன. மிகுந்த புத்துணர்வளிக்கும் பசுங்கனிகளும் விற்கப்பட்டன. மா, வாழை, பப்பாளி, அன்னாசி போன்றவை அங்கே செழிப்பாக மிகுந்து வளர்கின்றன. சுற்றுலா செல்லும் இளசுகளுக்கு கடற்கரை பார்ட்டிகளே, சுற்றித்திரிந்து ஆடிப்பாடி மகிழும் இடங்கள் (எனினும், அந்தந்த நாளின் மாலைப் பொழுதுக்குத் தேவையான பணத்தை மட்டுமே வைத்துக் கொள்ளுமாறு சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது). ஆனால் அதைவிட பார்க்கவேண்டிய ஓர் இடம் கார்டஹீனாவின் கோட்டை நகரம். அது 500 ஆண்டு சரித்திரத்தைப் பேசுகிற ஒரு வரலாற்றுச் சின்னம். கடற்கொள்ளைகளுக்கும், போர்களுக்கும், அடிமைகளுக்கும் பெயர்போன இடம்.

கடற்கரை, மதுபான விடுதிகள் என்பன மீது மிகுந்த மோகம் கொண்டவரல்ல நீங்கள் என்றால், கார்டஹீனாவில் நேரடியாக அதன் எழில்கொஞ்சும் பழைய நகரத்துக்கு அல்லது கோட்டை நகரத்துக்கு செல்ல வேண்டும். அங்கே வண்ணமயமான, மும்முரமான உணவகங்களும், கருங்கல் தளமிட்ட வீதிகளும், விசித்திரமான பரிசுப்பொருட்கள் நிரம்பிய கடைகளும், ஆவலான சுற்றுலாப் பயணிகளும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். கோட்டை நகர்த்தில் முக்கியமாகக் கவரக்கூடிய இடங்களில் ஒன்று, காஸ்டிலோ சான் ஃபிலிப்.


இது ஒரு பிரம்மாதமான கோட்டை, இதற்கான பணி 16ஆம் நூற்றாண்டில் தொடங்கியதாம், ஆனாலும் அடுத்த இரண்டு நூற்றாண்டுகளாக அதன் விரிவாக்கமும் புனர்நிர்மாணமும் தொடர்ந்து நடந்தேறியதாம். கூம்பு வடிவில் கட்டப்பட்ட அது, ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலின் நான்காம் ஃபிலிப் மன்னனை கௌரவப்படுத்தும் விதமாக இப்படிப் பெயரிடப்பட்டுள்ளது. அது விரிவாக்கம் செய்யப்பட்ட போது, அதனோடு சேர்த்து ஓர் முன்னேற்றமடைந்த தற்காப்பு அமைப்புகள் இணைக்கப்பட்டன; அவை, கோட்டை மாளிகை நோக்கி எதிரிகள் முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தும் வகையில் அமைந்திருந்தது. அதன் நிலத்தடி அரங்குகளின் வலைபின்னல் மூலம் கண்ணிவெடிகளை வெடிக்கச் செய்து, தாக்க வருபவர்களை வேரறுக்க முடியும். 300 ஆண்டுகால தாக்குதல்களும், போர்களும், அடிமைகளும் நிரம்பிய இந்தப் பிராந்தியம் மற்றும் மக்களின் அச்சவுணர்வுக்கு ஒரு வாழும் சாட்சியாக இது நிற்கிறது.


காஸ்டிலோவை சுற்றிப் பார்த்த பிறகு, சற்று மேலே நடந்தால், தெருவோர வியாபரிகளின் படையே அங்கு இருக்கும். ஒயிலான தொப்பிகள், காந்தங்கள், முகமூடிகள்,
























*கொலம்பியாவின் வண்ணமிகுக் காட்சிகள்.*

காதணி வளையங்கள், கழுத்து மாலைகள் போன்ற வண்ணமயமான, அழகழகான கைவினைப் பொருட்களும் நினைவுப் பரிசுகளும் மிகுந்த காணப்படும். எனினும், அடித்துப் பேரம் பேச முடிந்தால் மட்டுமே தெருவோர வியாபாரிகளிடம் பொருள்களை வாங்குங்கள். நடை பயணமாகச் செல்வதே, கோட்டை நகரத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு சிறந்த வழி. அதன் வண்ணமயமான, காலனித்துவ கால கட்டிடங்களைப் பார்த்து ரசிக்கத் தயாராக இருங்கள். பிரகாசமான ஆனால் கண் கூசாத நிறங்களில் பெயின்ட் அடிக்கப்பட்டு, பளிச்சென்ற இளஞ்சிவப்பு மற்றும் மஞ்சள் நிற மாடங்களிலிருந்து வண்ணப் பூக்கள் தொங்கும், கற்களாலான வளைவு மேற்கூரை கொண்ட பாதைகள் ரம்மியமான விளக்கொளியில் துள்ளும். கட்டிடங்களின் சிற்பக்கலையை கூர்ந்து கவனிக்கத் தவறிவிடாதீர். அழகாக வடிவித்த கதவுக் கைப்பிடிகள் வரை, அது வெகு நுணுக்கமாக அமைக்கப்பட்டுள்ளது.

கார்டஹீனாவின் கடற்கரை முகப்பு உள்ளிட்ட சற்று நவீனகாலத்தில் உருவான பகுதியை விட, கோட்டை நகரம் விலையதிகமான இடம். அங்கு சுற்றி நடந்தாலே போதும். கிட்டத்தட்ட ஒவ்வொரு வீதியிலும் திகைப்பூட்டும் ஓட்டல்களையும் கஃபேகளையும் காணலாம். பொழுது போக்க வேண்டுமென்றால், ஒரு கஃபேயில் அமர்ந்து நம் இஷ்டத்தைப் பொறுத்து கொலம்பியன் காபியோ அல்லது பீர் பானமோ உறிஞ்சியபடி உல்லாசமாக ஓரிரு மணிநேரங்களைக் கழிக்கலாம். ஆனால் விலைப்பட்டி வரும்போது தான் தெரியும், பழைய நகரப் பகுதி மேல்தட்டுப் பிரயாணிகளுக்கே உரியது என்று.

கார்டஹீனாவுக்குப் பிறகு நாங்கள் பொகொடா சென்றோம். அது உலகின் மிக உயரமான தலைநகரங்களில் ஒன்று. கடல் மட்டத்திலிருந்து 8,500 அடி உயரத்தில் வீற்றுள்ளது. கார்டஹீனாவில் கொலம்பிய மக்களின் நட்பு எங்களுக்குப் பழக்கமாகியிருந்தது. ஆனால், பொகொடாவில் நாங்கள் எதிர்கொண்ட அனுபவமோ, எங்கள் மனதைக் கொள்ளைகொண்டது. விமானம் காலையில் சீக்கிரம் வந்துவிட்டதால், 9 மணிக்கெல்லாம் எல்டொராடோ ஓட்டலை அடைந்து விட்டோம். சற்று தயக்கமாக முன்கூட்டியே அறை வேண்டும் என்று கேட்டோம்.

பெரும்பாலான ஓட்டல்களில் மதியம் 2 மணிக்குத் தான் செக்-இன் அனுமதிக்கப்படும், எனவே கூடுதலாக பாதி நாள் கட்டணத்தை வசூலித்து விடுவார்கள் என்று நினைத்தோம். கொலம்பியர்கள் ஸ்பானிஷ் மொழி பேசுபவர்கள் என்பதால், ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் போன்ற ஒரு சில இடங்களில் மட்டுமே ஆங்கிலப் புழக்கம் இருக்கும். ஆனால் வரவேற்புப் பிரிவில் பொறுப்பு வகித்த பெண்மணி சரளமாக ஆங்கிலம் பேசினாள். அவள் எங்களைப் பார்த்துப் புன்னகைத்து, “நீங்கள் படு களைப்பாக இருக்கிறீர்கள் போலத் தெரிகிறது’’ என்று சொல்லி, அதிர்ஷ்ட தேவதை போல், இரு அறைகளுக்குமான சாவிகளை எங்கள் கையில் ஒப்படைத்துவிட்டாள்.

பொகோடா ஒரு காட்சிமிகுந்த மலை நகரம். ஆரோக்கியமான சீதோஷ்ணம் கொண்டது. நாங்கள் அங்கே மான்சர்ரேட் மலையை சுற்றிப்பார்க்கத் தீர்மானித்தோம். அது, நகர மையத்தில் படர்ந்து சுமார் 10,200 அடி வரை உயர்ந்து, உச்சத்தில் மாதா கோயிலைக் கொண்டிருந்தது. மான்சர்ரேட்டின் இயற்கை அழகு மற்றும் சரித்திரத்துக்காகவே சுற்றுலாப் பயணிகள் அங்கு வந்து குவிந்தனர். அது, ஸ்பானியர்களின் வருகைக்கு முன்பு நகரின் முக்கியமான புனிதத் தலமாக கருதப்பட்டிருந்தது. பூர்வீக மியூஸ்கா மக்கள் அந்த மலையை குயிஜிச்சா காகா அல்லது ‘பாட்டியின் பாதம்’ என்று அழைத்தனர். அதை ஒரு புனித இடமாக அவர்கள் கருதியதற்குக் காரணம், ஜூன் மாத கதிர்த்திருப்பத்தின் போது மலைக்குப் பின்னால் மறைவிலிருந்து நேரடியாக சூரியன் உதிக்கும். பிற்காலத்தில், புனிதக் கல்லறையுடன் கூடிய ஒரு தேவாலயம் அங்கே கட்டப்பட்டது.

பல சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக யாத்திரிகர்கள், நடந்தே மலையில் ஏறுவார்கள். ஆனால் நாங்கள், கயிற்று ரயிலில் ஏறி, நேராக அங்கே சென்ற போது, கடுங்குளிர் காற்றும், உறையும் வெப்பநிலையும் எங்களை வரவேற்றது. எனினும், இந்த எழில் கொஞ்சும் இடத்திலிருந்து இவ்வழகிய நகரத்தின் காட்சியை ரசிப்பதும், அங்கே நிலவும் பலமான கிறிஸ்துவ சூழலும், ஏசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நகரும் சிற்பங்கள் மூலம் வர்ணிக்கும் அமைப்பும், அதன்



*கொலம்பியாவின் கைவினை பொருட்கள்.*




காஸ்டிலோ சான் ஃபிலிப் கோட்டை.

வழியே ஏறிச் சென்று தேவாலயத்தை அடைவதும் இங்கு வருபவர்களுக்கே கிடைக்கும் பரிசு.

பொகொடா நகரின் மையப் பகுதியில் நடந்து சுற்றிப்பார்க்க வேண்டிய ஒரு பகுதி, பிளாஸா டீ பொலிவியார் என்ற பிரதான சதுக்கம், அங்கே ஒரு மைய தேவாலயம் உள்ளிட்ட பிரம்மாண்டமான கட்டிடங்களைக் காணலாம். இந்தப் பிரம்மாண்டமான சதுக்கத்தைச் சுற்றி நடப்பது அந்நகரின் உணர்வை நமக்குக் கொடுக்கும், நிதர்சனமாக ஆயிரக்கணக்கான புறாக்கள் அவ்விடம் முழுக்க பறந்துகொண்டு இரைக்காகக் காத்திருக்கின்றன. நாங்கள் அங்கே போன சமயத்தில் ஒரு திறந்தவெளி கலைக் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ரஃபேல், ரூபன்ஸ் போன்ற மாபெரும் கலைஞானிகளின் உருமாதிரிகளைப் பார்ப்பது கண்ணுக்கு விருந்தாக அமைந்தது.

இந்தச் சதுக்கத்திலிருந்து கிளைவிட்டுப் பிரியும் குட்டித் தெருக்கள் ஆசையான கடைவீதிகளாக விரிந்தன. துணிப் பைகள், பணமுடிச்சுப் பைகள், குஷன் உறைகள், கைத்துண்டுகள், முகமூடிகள், விக்கிரஹங்கள், வகை வகையான கைவினைப் பொருட்கள், குறிப்பாக மண்பாண்டம் மற்றும் முகமறைப்புகள் எல்லாம் நியாயமான விலையில் இங்கே கிடைத்தன. கார்டஹீனாவின் கோட்டை நகரத்தில் உள்ள தெருவோர வியாபாரிகளுக்கு நேர்மாறாக, இங்கே கடைகளைக் கவனித்துவந்த பெண்களும் ஆண்களும் மிகவும் பண்பாக, நட்பாக, இதமாகப் பழகினர். அவர்கள் சுற்றுலாப் பயணிகளைச் சுரண்டக் காத்திருக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படவில்லை; லட்சணமாக ஆங்கிலம் பேசினார்கள், ஆவலுடன் தங்கள் சரக்குகளை எடுத்துக் காட்டினார்கள், ஒரு பொருளை வாங்காவிட்டாலும் கூட சற்றும் முகம் சுளிக்கவில்லை. நான் ஒருவகை கைவினைப் பொருளை வாங்க வேண்டும் என்று சொன்ன போது, ஒரு கடையை கவனித்துவந்த பெண்மணி அப்பொருள் இருக்கும் இடத்துக்கு சுமார் ஐந்து நிமிடம் நடையாக என்னை அழைத்துச் சென்றார்.

சுற்றுலாப் பயணிகள் கொலம்பியாவை விட்டு பிரிந்து வந்த பிறகு நிச்சயமாக அங்குள்ள நட்பான மக்கள் பற்றி சுகமான எண்ணங்களும் பசுமையான நினைவுகளும் கொண்டிருப்பார்கள். அங்கே வறுமை இருக்கிறது; ஆம், கோட்டை நகரத்தில் உள்ள பாரம்பரிய, வண்ணமயமான உடையணிந்த உள்ளூர்ப் பெண்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், சுமார் 100 ரூபாய் அளவுக்கு பணம் வெட்ட வேண்டும். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், இப்பெண்களின் பிழைப்புக்கான வழியே, சுற்றுலாப் பயணிகளுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வதன் மூலம் தான்.

எல்லாவற்றையும் விட, சாக்லேட் மற்றும் காபிக்கு கொலம்பியா புகழ் பெற்றது. கொலம்பிய காபியின் வாச னை வீடு முழுக்க மனம் கமழும், அங்கிருந்து திரும்பி வந்து நீண்ட காலம் கழிந்த பிறகும் அந்த அழகான நாடு மற்றும் மக்களின் நினைவை பசுமையாக வைத்திருக்கும்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

- TRF (இந்தியா) உலகளாவிய மானிய உதவியைச் செயல்படுத்த கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நிதியை (CSR) தற்போது ஏற்றுக் கொள்கிறது. இந்தியாவில் ரோட்டரி சங்கங்களும் ரோட்டரி மாவட்ட அமைப்புகளும் 33 வகையான சமூகப் பணிகளுக்கு உதவுவதற்காக TRF (இந்தியா) அமைப்புக்கும் 28 கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு TRF (இந்தியா) இன்று வரை மொத்தம் 4.60 லட்சம் டாலர் (சுமார் ரூ.3.23 கோடி) பெற்றுள்ளது. கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நிதியைப் பெறுவதற்காக உங்கள் மண்டலத்தில் உள்ள கார்ப்பரேட் நிறுவனங்களை அணுகுங்கள். இதுதொடர்பாக தெற்காசிய அலுவலகத்தில் உள்ள கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நிதிக் குழுவை (CSR team) தொடர்பு கொள்ளலாம்.
- **குழு விவாதங்கள்:** குழு விவாதங்கள் மூலமோ புதிய குழுக்களை அமைத்தோ இதர ரோட்டரி உறுப்பினர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களது நலன்கள், செயல்பாடுகளை அறிந்துகொள்வோரைக் கண்டறிந்து, திட்டப் பணிகளில் கூட்டாளிகளாக்கிக் கொண்டு, ரோட்டரியின் பலதரப்பட்ட உலகளாவிய பார்வையில் ஈடுபடுத்துங்கள். இது குறித்து மேலும் அறிந்து கொள்வதற்கு: https://my.rotary.org/en/exchange-ideas/groups/membership-best-practices
- **ரோட்டரி உறுப்பினர்களாவது குறித்து:** ரோட்டரியில் உறுப்பினராவது குறித்து திருத்தப்பட்ட புதிய விவரம் RI இணையத்தில் இடம்பெற்றுள்ளது. உறுப்பினர்கள் குறித்த வளர்ச்சி, தொய்வு, மேம்பாடு ஆகியவை குறித்த விரிவான தகவல்களை அதில் பெறலாம். ஜூலை 1, 2018ம் தேதி வரையிலான உறுப்பினர்கள் குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவல் அதில் உள்ளது. பவர் பாயிண்ட் முறையில் அமைக்கப்பட்ட அதில் 16 வகையில் அமைந்துள்ள ஸ்லைடுகள் தங்களது விருப்பப்படி அமைத்துக் கொள்ள உதவும்.
- **பயிற்சிகளுக்கான தலைவர்களின் வழிகாட்டுதல்கள்:** அடுத்த பயிற்சிக்கான யோசனைகள் வேண்டுமா? RI அமைப்பின் தலைவர்கள் வழிகாட்டுகிறார்கள். பேச்சில் இடம்பெற வேண்டிய கருத்துகள், செயல்பாடுகள், போக்குவரத்து குறித்த தகவல்கள், பதிவிடுவதற்கான மாதிரி ஸ்லைடுகள் (Slideshow Templates), பயில் ஏடுகள் (Worksheets) மதிப்பீட்டுப் படிவங்கள் (Evaluation Forms) ஆகியவை உள்ளன. அவற்றை உங்களுக்கு ஏற்ப வடிவமைத்துக் கொள்ளலாம். தேவையானவர்களுக்குப் பகிர்ந்து கொள்ளலாம்.
- **ரோட்டரி சங்கப் பதாகைகள் (Banners):** ரோட்டரி ஆண்டில் TRFக்கு சிறந்த பங்களிப்பைச் செலுத்தும் ரோட்டரி சங்கங்களுக்கு பல்வேறு பதாகைகள் இங்கே பதியப்பட்டுள்ளன.
  - ஃபவுண்டேஷனுக்கு 100% நிதி அளிக்கும் சங்கம்
  - 100% ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் சங்கம்
  - 100% பால் ஹாரிஸ் ஃபெலோ சங்கம்
  - ஆண்டு நிதி அளிப்பதில் முதல் மூன்று இடங்கள்
  - 100% பால் ஹாரிஸ் சொசைட்டி சங்கம்

---

*ஆண்டுதோறும் முதன்மை அங்கீகாரம் பெறுவதற்கான (Annual Recognition Banners) பட்டியலில் தங்களது சங்கம் இடம்பெறுவது குறித்து முடிவு செய்ய ரோட்டரி தலைவர்கள் எனது ரோட்டரி (My Rotary) தளத்தில் உள்ள சங்க நிறுவன முதன்மை அறிக்கையை (Club Foundation Banner Report) பயன்படுத்திக் கொள்ளலாம்.*

---

ஆண்டுதோறும் முதன்மை அங்கீகாரம் பெறுவதற்கான (Annual Recognition Banners) பட்டியலில் தங்களது சங்கம் இடம்பெறுவது குறித்து முடிவு செய்ய ரோட்டரி தலைவர்கள் எனது ரோட்டரி (My Rotary) தளத்தில் உள்ள சங்க நிறுவன முதன்மை அறிக்கையை (Club Foundation Banner Report) பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தச் சிறப்பைப் பெறுவதற்கு தங்களது சங்கங்களைத் தூண்டலாம். மேலும் விவரங்களுக்கு ரோட்டரி இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

- **மாவட்டத்துக்குக் கூடுதல் நிதி:** 2019-20 மற்றும் 2020-21ம் ஆண்டுகளுக்குத் தேவையான மாவட்ட வளர்ச்சி நிதியை (DDF) TRF அறங்காவலர்கள் உயர்த்தியுள்ளனர். அவற்றில் கடந்த ஆண்டு முதல் பயன்படுத்தாத தொகையில் 20 சதவீதத்தை 2018 ஜூலை 1ம் தேதி வரையில் கணக்கிட்டபடி பயன்படுத்திக் கொள்ளலாம். இத்தொகையை 2019-20 மற்றும் 2020-21ம் ஆண்டுகளுக்கு சமமமாகப் பிரித்துக் கொள்ளலாம்.

  உதாரணத்துக்கு, உங்களது மாவட்டத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மொத்தம் 10 ஆயிரம் டாலர் கையிருப்பில் உள்ளதென்றால், 2019-20ம் ஆண்டுக்கான அதிகபட்ச மாவட்டத்துக்கான மானியமும் இதில் இடம்பெறும். 2019-20ம் ஆண்டுக்கான மாவட்ட நிதிக்காக 2019 ஜூலை 1ம் தேதி விண்ணப்பிக்கலாம்.
- **பெருங்கொடையாளர் அங்கீகாரத்துக்கான வழிகாட்டுதல்:** ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி (AKS) கொடை உள்பட அனைத்து பெருங்கொடையாளர்களின் நன்கொடைகளும் அவர்களது தனிப்பட்ட வெகுமதிகளாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். மாவட்ட நிதிகள், திரட்டப்பட்ட நன்கொடைகள், பயனாளிகள், ஒத்துழைக்கும் அமைப்புகள் அளிப்பவை பெருங்கொடைக்கு இணையாகப் பயன்படுத்தப்பட வேண்டாம்.■

# கைதிகளுக்கு தள்ளுவண்டிகள் நன்கொடை

ரோட்டரி செய்திக்குழு




*DG நிகிலேஷ் திரிவேதி கைவண்டிகளை கைதிகளுக்கு வழங்குகிறார்.*

ஜபல்பூர் நகர மத்திய சிறையிலிருந்து விடுதலையானவர்களுக்கு புதுவாழ்வு தொடங்க உதவுமாறு உச்ச நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டலை மனதில் கொண்டு RC ஜபல்பூர், D 3261 சமயோசிதமாக எட்டு தள்ளுவண்டிகளை கைதிகளுக்கு அன்பளிப்புச் செய்தது. கைதிகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் இந்தத் தள்ளுவண்டிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

"இது கைதிகளுக்கு தன்னம்பிக்கை ஊட்டுவது மட்டுமல்லாமல், நிலையான பொருளாதாரத்துக்கும் ஆதாரமாக இருக்கும்" என்று சங்க பிரசிடென்ட் ரச்னா திரிவேதி பேசினார். DG நிகிலேஷ் திரிவேதி, முன்னாள் பிரசிடென்ட் பல்தீப் சிங் மாயினி, சிறை கண்காணிப்பாளர் கோபால் தம்ரகர் ஆகியோரும் நன்கொடை வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். கூடியிருந்த கைதிகள் மத்தியில் உரையாற்றிய தம்ரகர், ரோட்டரியின் ஆதரவைப் பாராட்டியதோடு, சிறைவாசிகளின் நலவாழ்வுக்காக மருத்துவ முகாம்களும் திட்டப்பணிளும் நடத்தித் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

**மார்பிள் ராக் ஓட்டம்**

ஜபல்பூர் நகரை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மாவட்ட நிர்வாகமும் ஜபல்பூர் மாநகராட்சியும் இணைந்து நடத்திய மார்பிள் ராக் ஓட்டம் மாரத்தானில் ஜஸ்டிஸ் தன்கா மெமோரியல் ரோட்டரி இன்ஸ்டிட்யூட்டின் மாற்றுத் திறனாளிக் குழந்தைகளும் பங்கெடுத்தனர்.



*சுத்தம் சுகாதாரம் விழிப்புணர்வு மராத்தனில் ரோட்டரியினர்...*

இந்த ஓட்டத்தில் 150க்கும் மேற்பட்ட ரோட்டரி தன்னார்வலர்கள் பங்கு கொண்டனர். அதில், ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இந்தியாவுக்கு வருகை தந்துள்ள அமெரிக்காவின் கைலா அவென்ட்டும் பிரேசிலைச் சேர்ந்த ஜோவா பெட்ரோவும் அடக்கம்.

மாவட்ட ஆட்சியர் சாவி பரத்வாஜ், நகராட்சி ஆணையர் சந்திரமௌலி ஷுக்லா ஆகியோரும் பங்கு பெற்று சிறப்பித்தனர்.

ஜபல்பூரை ஸ்மார்ட் சிட்டியாகவும் முன்னிறுத்துவதற்கான பிரச்சாரங்களில் ரோட்டரி முழுமனதுடன் ஒத்துழைப்பு அளிக்கும் என்று ரச்னா திரிவேதி அரசு அதிகாரிகளுக்கு உறுதியளித்தார்.■

# ஒடிசி
## அசைவில் ஒரு கவிதை

சீதா ரத்னாக்கர்





இரண்டு வேறுபட்ட மொழிகள் உள்ளன - மக்களைப் பிரிக்கின்ற வாய்மொழி சார்ந்தது, மற்றும் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய காட்சி சார்ந்தது. யாகோவ் ஆகம் அவர்களின் இந்த வார்த்தைகள் எல்லா நிகழ்த்துக் கலைகளையும் மிகச் சிறப்பாக விவரிக்கின்றன மற்றும் மொழி சார்ந்த தடைகளைக் கடந்து காட்சி ஊடகம் வாயிலாகத் தொடர்புகொள்வதன் மூலம் பல நூற்றாண்டுகளைக் கடந்து புகழ்பெற்று விளங்குகின்ற இந்தியப் பாரம்பரிய நடனங்களைப் பொறுத்தவரை அது முற்றிலும் உண்மை. ஒடிசி என்பது ஒடிசாவில் உள்ள கோயில்களில் தோன்றிய ஒரு பாரம்பரிய நடன வகை ஆகும், அது பெரும்பாலும் பெண் நடனக் கலைஞர்களால் ஆடப்பட்டது. கடலில் ஓய்வின்றி எழும்பும் அலைகளை ஒத்த இயக்கங்களைக் கொண்ட இந்த நயத்தகு நடனம் கலாச்சார மற்றும் மத எல்லைகளைக் கடந்து உலகம் முழுவதும் உள்ள நடனக் கலைஞர்களைக் கவர்ந்திருக்கிறது. பல நாடுகளைச் சேர்ந்த பல்வேறு கலைஞர்கள் புகழ்பெற்ற குருக்களிடம் பயிற்சி பெறுவதற்காக ஒடிசா வுக்கு வந்துள்ளனர் மற்றும் ஒடிசி நடனத்தை தங்களுடைய முழுநேரத் தொழிலாகவே செய்து வருகின்றனர். அமெரிக்காவின் ஷரோன் லோவன், இத்தாலியின் இலியானா சிதாரிஸ்டி, ஜப்பானின் மசாகா ஓனோ மற்றும் மலேசியாவின் ராம்லி இப்ராஹிம் ஆகியோர் இந்தச் செழுமையான பாரம்பரியக் கலையில் ஈடுபட்டு அதைப் பரப்பியும் வருகின்ற தொழில்முறைக் கலைஞர்கள் ஆவர். ராம்லி இப்ராஹிமிடம் அவருடைய அனுபவங்களைப் பற்றிக் கேட்டபோது, “நான் நடனமாடும்போது, நான் ஒரு ரசம் வழிந்தோடும் பாத்திரம் போல, ஒரு வெள்ளொளிர்வுள்ள பாதிக்கப்படக்கூடிய மின்மினிப் பூச்சி போல, தூய்மையாகவும் பிரகாசமாகவும் இருக்கிறேன். இத் தூய்மையான, தீவிரமான நெருப்பு என்னுடைய மிகப் புனிதமான பகுதியாக விளங்குகிறது. அது என் மொத்த இயல்புடன் என் வாழ்க்கையைக் கொண்டாடும் தருணம் என்று கூறுகிறார்.

அவர் ஓரளவுக்குக் கண்டிப்பான முஸ்லிம் பின்னணியிலிருந்து வருகிறார். “80களிலும் 90களிலும் உலகளாவிய அடிப்படைவாத மத உணர்வின் சுனாமிக்கு மலேசியா ஆளாகியிருந்தது. “ஆயினும், நான் அதில் தப்பிப் பிழைத்தேன். நான் வெற்றி பெற்றபோது, ஒப்புக்கொள்வது எளிதாகவும், இசைவாகவும் இருந்தது.”

புவனேஸ்வர், கோனாரக் மற்றும் பூரி ஆகிய இடங்களில் கோயில் சிற்பங்களில் கிடைத்துள்ள வரலாற்றுச் சான்றுகள் ஒடிசி நீண்ட காலமாக வழக்கில் உள்ளது என்பதை நிரூபிக்கின்றன. உதயகிரியில் உள்ள மஞ்சபுரி குகைகளில் கி.மு. முதலாவது அல்லது இரண்டாவது நூற்றாண்டைச் சேர்ந்த ஜெயின் அரசர் காரவேலனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த நடனக் கலைஞர்கள் மற்றும் இசைக் கலைஞர்களின் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. ஆசியா மலைத்தொடர்களிலும் லலித்கிரி, ரத்தினகிரி மற்றும் அலத்கிரியில் உள்ள குகைகள் மற்றும் கோயில்களிலும் உள்ள புத்த, ஜைன மற்றும் இந்து மதத்தின் தொல்பொருள் தளங்களில், கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்த நடனக் கல்வெட்டுக்களும், சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன. கோயில்களில் உள்ள புடைப்புச் சிற்பங்களின் சிற்பக்கலைத் தோரணைகள் நடனத்தின் உள்ளார்ந்த நளினத்தையும் அழகையும் வெளிப்படுத்துகின்றன.

ஒடிசி நடனம் வழக்கமாக மூன்று பாடசாலைகளைக் கொண்டிருக்கிறது, மஹரி, நர்த்தகி மற்றும் கோத்திபுவா. மஹரி, ஒரிய நடனக்கலைஞர்களால் அல்லது மஹரிகள் எனப்படும் தேவதாசிகளால் ஆடப்பட்டது. இந்தப் பெயர், சிறந்த பெண் மற்றும் மஹரி என்கிற தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் என்று பொருள்படும் மஹாநாரி என்ற வார்த்தையிலிருந்து தருவிக்கப்பட்டது. அவர்கள் கோயிலின் எல்லைக்குட் பட்ட பகுதிகளில் பக்தி நடனங்கள் ஆடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பின்னர் அவர்கள் தங்கள் திறமையில் ஜெயதேவர் இயற்றிய கீத கோவிந்தம் போன்ற மிகவும் உணர்ச்சிமிக்க நடனங்களைச் சேர்க்கத் தொடங்கினர். நடனம் அரச சபையில் நிகழ்த்தப்பட்டபோது, அது நர்த்தகி நடனம் எனப்பட்டது. கோத்திபுவாக்கள் என்போர் பெண்களைப் போல் உடையணிந்த இளம் ஆண் நடனக்கலைஞர்கள் ஆவர். அவர்கள் கோயில் திருவிழாக்களிலும் கண்காட்சிகளிலும் நடனமாடினர். அவர்கள் உடல் இளக்கமாக இருக்கக்கூடிய இளம் வயதிலிருந்தே நடனப் பயிற்சியைத் தொடங்கிவிடுகிறார்கள். அதோடு, அவர்கள் களரி விளையாட்டுகள், தடகளம், தற்காப்புக் கலைகள் மற்றும் நாட்டுப்புறக் கூறுகள் ஆகியவற்றையும் நடனத்தில் சேர்த்துக்கொள்கின்றனர்.



ஒடிசி கலைஞர் ரமணி ரஞ்சன் ஜெனா.

தற்காலத்தில் ஒடிசி நடனத்தில் கோத்திபுவா பாரம்பரியத்தின் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது மற்றும் அது தாண்டவம் (ஆண்பால்) மற்றும் லஸ்யா (பெண்பால்) அம்சங்களின் இணக்கமான கலவை ஆகும். பல புகழ்பெற்ற ஒடிசி குருக்கள் தங்கள் இளம் பருவத்தில் கோத்திபுவாக்களாகத் தொடங்கினர். கேலுசரன் மோஹபத்ரா, கங்காதர் பிரதான், பங்கஜ் சரண் தாஸ், தேபா பிரசாத் தாஸ் மற்றும் ரகுநாத் தத்தா ஆகியோர் நாற்பதுகளின் பிற்பகுதியிலும், ஐம்பதுகளின் முற்பகுதியிலும் ஒடிசி நடனத்துக்குப் புத்துயிரளித்த நான்கு முக்கியக் குருக்கள் ஆவர். கேலுசரன் மோஹபத்ரா தீவிர உணர்வுகள் மற்றும் எல்லையற்ற நளினம் வாயிலாக ஒடிசியின் உள்ளார்ந்த அழகை உருவகப்படுத்திக் காட்டிய முழுநிறைவான நடனக் கலைஞராக விளங்கினார். அவருடைய குறிப்பிடத்தக்க சீடரான சஞ்சுக்தா பனிக்ரஹி மிக முக்கியமான பெண் விளக்கவுரையாளர் ஆவார். அவர் இசைக் கலைஞரும் தனது கணவருமாகிய ரகுநாத் பனிக்ரஹியுடன் இணைந்து இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஒடிசி நடனத்தைப் பிரபலப்படுத்தினார்.

ஒடிசியை அதன் தனித்துவமிக்க நெகிழ்வுடைய, நயத்தகு மற்றும் உணர்ச்சிப்பூர்வ இயக்கங்களைக் கொண்டு எளிதாக வேறுபடுத்தி அறிய முடியும். அடிப்படை நடனத்தின் மையக் கருத்துக்கள் பங்காஸ் என்று அழைக்கப்படுகின்றன, இதில் உடலின் கீழ்ப்பகுதி (பாதம்), நடுப்பகுதி (முண்டம்) மற்றும் மேல்பகுதி (கை மற்றும் தலை) ஆகியவை முக பாவத்துடன் சமச்சீரான ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளன மற்றும் இந்த நடனம் இசைக் கருவிகளுடன் இணைந்து நிகழ்த்தப்படுகிறது. இவை எட்டு பெலிஸ், அல்லது உடல் நிலைகள் மற்றும் இயக்கங்களைக் கொண்டிருக்கின்றன மற்றும் அவை பல வகைகளில் இணைந்துள்ளன. மூன்று முதன்மை நடன நிலைகளாவன சமபங்கா - சதுர நிலை, அபங்கா - பக்கவாட்டில் நீட்டிய இடுப்புடன் உடல் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் அசைக்கப்படுகிறது மற்றும் டிரைபங்கா - உடல் கு-வடிவில் மூன்று மடிப்புகளாக வளைந்துள்ள நிலை, இதில் முண்டப் பகுதி ஒரு திசையிலும், தலையும், இடுப்புப் பகுதியும் அதன் எதிர்த்திசையிலும் திரும்புகின்றன. இது பூரி ஜெகனாதர் ஆலயத்தின் பிரதான தெய்வமாகிய ஜகன்னாதரைச் சித்தரிக்கும் சதுரம் போன்ற தோரணையாகிய சௌக்கா உடன் சேர்ந்து, ஒடிசியின் மிகவும் தனித்துவம் வாய்ந்த தோரணையாக உள்ளது. இந்த இயக்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும்போது இந்த நடனம் மாசற்ற கருணையின் பொழிப்புரையாக விளங்குகிறது.

நடனத்தின் ஆடைகள் விமரிசை யான வெள்ளி நகைகள் இணைந்த பாரம்பரிய அலங்கார வேலைகளுடன் நெய்யப்பட்ட உள்ளூர் பட்டினால் (பட்டுசேலை) ஆன கிளர்ச்சியூட்டும் வண்ணங்களால் ஆனவையாகும். இந்த நடனத்தொகுப்பில் பிரார்த்தனை, நிருத்தம் (தூய்மையான நடனம்), நிருத்யம் (வெளிப்படுத்தும் நடனம்), நாட்டியம் (நாட்டிய நாடகம்) மற்றும் மோட்சம் (வீடுபேறு அடைதல்) ஆகியவை உள்ளடங்குகின்றன. நிருத்தம் என்பது கருத்தியலானதும் விரைவானதும் ஆகும், மற்றும் அது வடிவம், வேகம், வரம்பு மற்றும் அமைப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. நிருத்யம் என்பது வெளிப்படுத்தும் நடனம் ஆகும், அது ஒரு கதை வாயிலாக உணர்வுகளைத் தெரியப்படுத்துகிறது. நாட்டியம் என்பது ஒரு நாடகம் ஆகும், குறிப்பாக அது ஒரு குழுச் செயல்பாடு ஆகும். ஆனால் ஒரு தனி நபராலும் அது நிகழ்த்தப்படலாம். மோட்சம் என்பது ஆன்மீகத்தில் ஆன்மா மற்றும் அமைதி விடுவிக்கப்பட்டதை

உயர்த்திக் கூறுவதை நோக்கமாகக் கொண்ட, தூய அழகியல் எல்லைக்குள் பறக்கின்ற உச்சநிலை ஆகும். ஒடிசி நடனத்தின் இசை பூரி ஜகன்னாதர் ஆலயத்தின் சம்பிரதாய இசையிலிருந்து தோன்றியது. மேலும் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த துறவி புலவர் ஜெயதேவர் அதனைப் பின்பற்றிய முக்கியமான நபர் ஆவார். அது அலை போன்ற அலங்காரத்துடன் கூடிய குறியீட்டு இலக்கணத்தையும் தனித்துவமான பாடல் விளக்கத்தையும் கொண்டுள்ளது. ஒடிசி நடனம், புவனேஸ்வர் நகரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (Indian Institute of Technology) 2015 ஆம் ஆண்டிலிருந்து பி.டெக். படிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒரு பாரம்பரிய ஒடிசி நடனம் ஒரு மங்களாச்சரன் என்கிற தொடக்க வழிபாட்டுடன் - கடவுள், குரு (ஆசிரியர்) மற்றும் பார்வையாளர்கள் ஆகிய மூவருக்கும் வணக்கம் செலுத்துவதில் - தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து ஒரு வேகமான பட்டு நிகழ்த்தப்படுகிறது. அடுத்தது, மெதுவான நயத்தகு அசைவுகளுடன் ஆரம்பிக்கும் பல்லவி. இது கண்களில் ஆரம்பித்து உத்வேகம் அதிகரிக்க அதிகரிக்க உடலின் மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு, உச்சத்திற்கு உயர்கிறது. அதன் பிறகு உணர்ச்சி கள் அல்லது வெளிப்பாடுகள் வாயிலாக ஒரு பாடல் அல்லது கவிதை அரங்கேற்றப்படும் அபிநயம் வருகிறது. அது வழக்கமாக அஷ்டபதிஸ் போன்ற சமஸ்கிருத பாடல்களுக்கோ அல்லது ஒரிய மொழிப் பாடல்களுக்கோ நடத்தப்படுகிறது. நிருத்தியத்தை அடுத்து வருவது நாட்டியம் ஆகும், இதில் பல பாத்திரங்களைக் கொண்டு புராணங்களில் இருக்கும் கதைகள் நடித்துக் காட்டப்படுகின்றன. இந்த நடனம் மோட்சத்துடன் முடிவடைகிறது.

1974 இல் மறைந்த ரமணி ரஞ்சன் ஜெனாவிடமிருந்து ஒடிசி பற்றி நான் சுருக்கமாகக் கற்றுக்கொண்டபோது, ஒடிசியின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்துகொள்ளக்கூடிய அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது. விரைவிலேயே அவர் மெட்ராஸ் நகரத்திலிருந்து வெளியேறிவிட்டதால் நான் குறுகிய காலமே அவரிடம் கற்றுக்கொள்ள முடிந்தது, ஆனால் அந்த சுருக்கமான தாக்கம் கூட ஆழமானதாக இருந்தது. உலகம் முழுவதும் உள்ள நடனக் கலைஞர்கள் இந்தியாவுக்கு வந்து ஒடிசி கற்றுக்கொண்டு அதை வெளிநாடுகளுக்குச் சென்று பரப்புவதன் மூலம் அதை உண்மையில் உலகளவில் பிரபலப்படுத்தும்போது நமக்குள் ஒரு மகத்தான பெருமித உணர்வு ஏற்படுகிறது. ராம்லி இப்ராஹிம் சொல்வது போல, “இந்திய நடனங்களில் அபரிமிதமாகப் பயன்படுத்தப்படுகின்ற புராணக்கதைகள், காலம் கடந்து நிலைத்து நிற்பவை, ஆனால் இவற்றை எப்படி உலகளாவிய உருவகங்களாகவும் குறியீடுகளாகவும் மாற்றுவது என்பது சவாலானதாகவே இருக்கிறது.” கலாச்சாரமும் கலையும் நமது சிக்கலான இயல்பினைப் புரிந்துகொள்வதற்கு நேர்மறையாகப் பங்களிக்கின்ற அதிகாரமிக்க முகவர்களாக விளங்குகின்றன. அவை நம்மை நாகரீகமடைந்தவர்களாக ஆக்குகின்றன. “ஒரு கலைஞருக்கு, நீங்கள் உங்களையும் உங்கள் கலையையும் எந்த அளவுக்கு மற்றவருக்குக் கொடுக்கிறீர்களோ அந்த அளவுக்கு நீங்கள் “இருப்பதற்கான காரணத்தை’ நீங்கள் கண்டறிய முடியும். இது என்னுடைய ‘வழியற்ற’ கலைப் பயணத்தின் இறுதியான வளமிகு கற்றல் அனுபவம் ஆகும்.”■



*பெண் வேடம் பூண்ட சிறுவர்கள்-கோத்திபுவாக்கள்.*



## நான் பெரிதாக கனவு காண்பதை நம்புகிறேன்

**சுரேஷ் ஹரி S**
**ரியல் எஸ்டேட், RC பெங்களூர் இந்திரா நகர், D 3190**

அவர் ஒரு ரவுண்டு டேபிள் உறுப்பினர் மற்றும் 1995ம் ஆண்டு அதன் நேஷனல் பிரெசிடென்ட்டாக இருந்தார். 1996ம் ஆண்டு அவர் RC பெங்களூர் இந்திரா நகர் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினர் ஆனார்.

ஹரிக்கு பவுண்டேஷன் மீது அதிக நாட்டம், குறிப்பாகமானியங்களில். நான் இதுவரை 50 க்கும் மேற்பட்ட மானிய விண்ணப்பத்தை தயார் செய்திருக்கிறேன், மேலும் அதே அளவு மற்றவர்களுக்கு உதவி செய்திருக்கிறேன். மானியங்கள் மற்றும் நிர்வாகப் பொறுப்பு தான் என்னுடைய பலம். PDG நாகேஷ் அவர்களின் காலகட்டத்தில் முதன்மையான நன்கொடை, பருவ அன்பளிப்புகள், போன்ற நிதியளிப்புகளின் மூலம், சுமார் அரை மில்லியன் டாலர்கள் நிதி சேகரிப்பதில், அவர் மிக முக்கியபங்கு வகித்தார், மேலும் இப்போது RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் பிரெசிடென்ட் D ரவிஷங்கரின் மிக அதிகப்படியான ரூ.100 கோடி வாக்குறுதிக்கும் அவரே காரணம்.

நான் எப்போதும் பெரிதாக கனவு காண்பதை நம்புகிறேன், கண் துடைப்புக்காக எந்த வேலையையும் செய்வதை நான் விரும்பவில்லை என்கிறார் அவர், பிரஸ்டீஜ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான, அவரது நண்பர் இர்பான் ரஸாக், பிறகு AKS உறுப்பினர் ஆனார், எப்படி அவரிடமிருந்து ஊக்கம் பெற்றார் என்பதை நினைவு கூறுகிறார். PDG பத்ரி பிரசாத் மாவட்ட மாநாட்டிற்கு 10 லட்சம் நிதியுதவி தேவை என்று கேட்டபோது, நான் அவரை இர்பானிடம் அழைத்துச் சென்றேன், ஆனால் அவரை AKS உறுப்பினராக சொன்னேன். அவர் AKS பற்றி கேட்டபோது, நான் 250,000 கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். அவர் அதற்கான விவரங்களை அனுப்பச் சொன்னார். இரண்டு மாதங்களுக்குப் பிறகு, இர்பான் AKS உறுப்பினராக நன்கொடையளிக்க சம்மதித்தபோது எங்களது சந்தோஷத்தை கற்பனை செய்து பாருங்கள்!

அவரது மனைவி அனிதா அவருக்கு ஒரு பெரிய உத்வேகம். எனது வெற்றிக்காக மேலும் பங்கு வகித்த நான்கு பேர்கள், எப்போதும் ஊக்குவிக்கும் எனது பெற்றோர்கள், எனது மானசீக குருவான மாமனார், மற்றும் எனது பங்குதாரர் நாராயண சாமி ஐயங்கார், அவருடன் நான் சொல்லும் ஒவ்வொரு விஷயத்தையும், ஆராய்ந்து கருத்து சொல்லுவார்.

உறுப்பினர் வளர்ச்சியில், தரமான உறுப்பினர்கள் தான் வேண்டும், எண்ணிக்கை முக்கியமல்ல என்கிறார் ஹரி. இரண்டு புதிய சங்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது, மேலும் செயல்படாத சங்கங்களை RISAO உடன் கலந்தாலோசித்து மூடப்போகிறார். 1,000 நல்ல உறுப்பினர்களைப் பெற்றால், நான் சந்தோஷமாக இருப்பேன் என்கிறார் DG.

விதைப் பந்துகள் மற்றும் மரக் கன்றுகள் நடுவதன் மூலம் இப்பகுதியை பசுமைப் படுத்துவதில் அவர் ஆர்வமாக இருக்கிறார். மாவட்ட அங்கீகாரங்களுக்கும் கூட, நினைவுப் பரிசுகள் மற்றும் பதக்கங்களில் பணத்தை வீணடிக்காமல், நாங்கள் மரக்கன்றுகளை நடுவோம் என்கிறார்.

# உங்கள் ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு

ஜெய்ஸ்ரீ

## TRF நிகழ்த்தும் மாயத்தை நம்புபவர்

**சுபாஷ் ஜெயின்**
**வரி ஆலோசகர் மற்றும் கல்வியாளர்,RC காஸியாபாத் சென்ட்ரல், D 3012**



அவர் 1986 ஆம் ஆண்டில் இருந்தே ஒரு ரோட்டேரியன். ரோட்டரியினால் கிடைக்கும் மகிழ்ச்சி மற்றும் நட்புணர்வுக்காகதான் அதில் சேர்ந்தேன். ஆனால் ஒரு முறை நான் இலங்கையில் உள்ள கண்டிக்கு விஜயம் செய்த போது, ஒரு பிரத்தியேக சைவ உணவகத்தை தேடிக் கொண்டிருந்தேன். அப்போது நான் ஒருவரை சந்தித்தேன், அவர் எனது ரோட்டரி லேபில் பின்னை பார்த்து விட்டு, அருகில் இருந்த ஒரு உணவகத்தை காட்டி அங்கு ஒரு ரோட்டரி கூட்டம் நடந்துக் கொண்டிருக்கிறது, அங்கு உள்ள ரோட்டேரியன்கள் உங்களுக்கு அவசியம் உதவுவார்கள் என்றார். அப்போது தான் நான் ரோட்டரி பின்னினுடைய மகத்துவத்தை அறிந்தேன், என்கிறார் சுபாஷ் ஜெயின்.

60 உறுப்பினர்களை கொண்ட ரோட்டரியின் AKS இணையத்தளத்தை படித்த பின்னர் அவரும் அதில் ஏறக்குறைய ஒருவராக வேண்டும் என்ற தூண்டுதலை உணர்ந்தார், அதன் பின்னர் 2016 ஆம் ஆண்டு முதல் அவரும் ஒரு AKS உறுப்பினர் ஆனார். வேறு எதையும் விட சமூகத்தில் ரோட்டரியினால் நிகழும் பரிமாற்றத்தை தான் முதற்கண் பார்த்தேன். பவுண்டேஷன் மற்றும் அது நிகழ்த்தும் விசாலமான நன்மைகளில் மிகுந்த நம்பிக்கை உடையவன் நான், என்று அவர் கூறினார்.

தனது மாவட்டம் நான்கு உலகளாவிய மானிய செயல் திட்டத்தை நிறைவேற்றியதில் ஜெயின் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறார், அதில் ஒரு மருத்துவ மனையில் ரூ.1 கோடி மதிப்பிலான CT ஸ்கேன் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது, ஒரு மேம்மோகிராஃபி வேன், டாடா டெக்னாலாஜியின் ஆதரவுடன் காஸியாபாத்தில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு இணைய-முறை படிப்பு வசதிகள் மற்றும் ஒரு மாபெரும் பல் மருத்துவ முகாம் முதலியவை இதில் அடங்கும். நாங்கள் இது வரை இந்த 150 நாட்களில் 1,000 சேவை திட்டங்கள் நிறைவேற்றி உள்ளோம் என்று புன்னகையுடன் கூறுகிறார்.

இந்த DG மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளார், அவர் 10 சதவீதம் அதிக உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார், மேலும் முற்றிலும் பெண்கள் கொண்ட மூன்று கிளப்பை துவங்கியுள்ளார். மாவட்டத்தின் இந்த ஆண்டிற்கான TRF இலக்கான 1 மில்லியனையும் தாண்டிவிடுவோம் என்ற நம்பிக்கையுடன் மற்றும் இந்த வருடத்திற்கான தகுதியான மூன்று AKS உறுப்பினர்களையும் தயார் நிலையில் வைத்துள்ளார்.

## நிரந்தர சேவை திட்டங்கள் தான் தற்போதைய தேவையாகும்

**கோணிடாலா முனி கிரிஷ், வழக்கறிஞர், RC குடூர், D 3160**

அவர் தனது பள்ளி நாட்களில் ஒரு லியோ கிளப் உறுப்பினராக இருந்தவர், மேலும் 1999 ஆம் ஆண்டு தனது 28 வது வயதில் ரோட்டரியில் சேரும்படி தனது பக்கத்து வீட்டுக்காரர் அழைப்புவிடுத்தார். முனி கிரிஷ் தனது தலைவர் காலத்தில் கிளப் சார்பாக ஒரு தகன மேடையை நிறுவியதை நினைவுக் கூர்ந்தார். அந்த இடத்தை சுற்றி இருப்பவர்கள், அதை நிறுவியதற்கு ரோட்டரிக்கு நன்றி கூறியது எனக்கு நினைவில் இருக்கிறது. இது ரோட்டரியை பெரியளவில் பிரபலமாக்கியது.



இந்த ஆண்டு அவர் 20 சதவிகிதம் உறுப்பினர்களை சேர்த்து மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 3,160 ஆக உயர்த்த விரும்புகிறார், மேலும் 10 புது சங்கங்களை நிறுவுவதாக இருக்கிறார். கிராமப்புறமாக இருப்பதால், சில நகரங்களான ஹோஸ்பெட், நெல்லூர் மற்றும் குல்பர்கா ஆகிய இடங்களை தவிர மற்ற இடங்களில் பெண்கள் உறுப்பினர்களாக சேருவதற்கு விரும்புவதில்லை. அந்த நகரங்களில் முற்றிலும் பெண்கள் சங்கங்களை நிறுவுவதற்கான வேலைகளைச் செய்கிறேன், என்கிறார் கிரிஷ்.

TRFக்காக அவர் மாவட்டத்தில் இருந்து 300,000 பணம் திரட்ட விரும்புகிறார், மேலும் ஒவ்வொரு சங்கத்தையும் ஒரு நிரந்தர சேவை திட்டத்தை நிறைவேற்ற உற்சாகம் செய்கிறார். ஒரு தொழில் பயிற்சி மையம் அல்லது ரோட்டரி மையம் ஏதேனும் ஒன்றை நிறுவினால், சங்க தலைவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் மக்களின் நினைவில் இருப்பார்கள், என்று அவர்களிடம் நான் சொல்வேன். மாவட்டத்திற்கு இரண்டு உலகளாவிய மானியத் திட்டத் திற்கான உரிமம் கிடைத்துள்ளது; 19 அரசு பள்ளிகளில் கழிப்பறை கட்டுவதற்கும்; மற்றும் பல பள்ளிகளுக்கு மேஜை மற்றும் இருக்கைகள் வழங்குவதற்கும், என்கிறார்.

## அவரது குறிக்கோள்: பெண் குழந்தைகள் கல்வி



**நீரஜ் சோகானி, ஆட்டோமொபைல்**
RC **ஜெய்ப்பூர் சென்ட்ரல்,** D 3054

ஜெய்சல்மேரிலிருந்து அகமதாபாத் வரை சுமார் 500 கி.மீ. இந்த மாவட்டம், பரந்து விரிந்திருந்தாலும், அதிகாரப்பூர்வ சங்க வருகைக்காகப் பல பயணங்களை மேற்கொண்டாலும் கூட தனது கவர்னர் பொறுப்பை அனுபவித்து வருகிறார். இந்த மாவட்டத்தில் ராஜஸ்தான் மற்றும் குஜராத் அடங்கியிருக்கிறது. மார்வாரி மற்றும் குஜராத்தியான இரண்டு வெவ்வேறு கலாச்சாரங்களை அனுபவிப்பது சுவாரஸ்யமானது என்றார் நீரஜ் சோகானி.

பெண் குழந்தைகளுக்கான கல்வி அறிவு கிடைப்பதில் கவனம் செலுத்துகிறார், ராஜஸ்தானில் குறிப்பாக, நிலைமை சரியாக இல்லை. உடனடியாக பெண்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தும்படி அவர், சங்கங்களை வலியுறுத்துகிறார். அடுத்த கட்டமாக அவர் WinS திட்டத்தை ஊக்குவிக்க விரும்புகிறார். பொதுமக்கள் சுத்தம் மற்றும் சுகாதாரம், கழிவறைகள் மற்றும் கை கழுவுவதின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளும் விதமாக பேரணிகள் மற்றும் மற்ற விளம்பரங்களையும் செய்ய திட்டமிட்டுள்ளார். நாம் நிலையான மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும், என்றார்.

சோகானி புதிய சங்கங்களை உருவாக்க அக்கறை காட்டவில்லை, மாறாக தற்போது இருக்கும் சங்கங்களில் சேருவதை ஊக்கு விக்கிறார். இதுவரை 600 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். டிசம்பரில் எண்ணிக்கை குறைய லாம். என்னுடைய அனுமதியின்றி எந்த பெயரையும் நீக்க முடியாது என்று நான் சொல்லி இருக்கிறேன், அது வேலை செய்யாது, என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

DG, TRFக்கு அதிகமாக நன்கொடை அளிக்க வலியுறுத்தாமல், மாறாக ஒவ்வொரு சங்கத் தலைவர்களையும் குறைந்தபட்சம் 5 அல்லது 6 PHF அல்லது MPHFகளை உருவாக்கச் சொல்லுகிறார். மேலும் ஒவ்வொரு சங்கத்திற்கு போகும்போதும், TRF பற்றி பேசுவது, அது எப்படி வேலை செய்கிறது என்று விளக்கும்போது. பொதுவாக இன்னும் நிறைய பேர், TRFக்கு வழங்கப்படும் நன்கொடைகளை RI எடுத்துக் கொள்கிறது என தவறாகதான் நம்புகிறார்கள், ஆனால் கருத்துக்களை புரிந்து கொள்ளும் போது உடனடியாக நிதியளிக்க முன் வருகிறார்கள். இவர் 2000 ஆம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார்.

## சங்கங்களை வலுப்படுத்துவதே அவரது முன்னுரிமை



**பிரியேஷ் பண்டாரி**
**கைவினை பொருட்கள் ஏற்றுமதி,** RC **ஜோத்பூர் மிட் டவுன்,** D 3053

கவர்னர்களில், மிகவும் இளையவரான பிரியேஷ் பண்டாரி, எட்டு ஆண்டு காலம் ரோட்டராக்ட் உறுப்பினராக இருந்த பிறகு 1999ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார். நான் உலகம் முழுவதும் பயணம் செய்கிறேன், நான் போகும் எல்லா இடங்களிலும் ரோட்டரி நண்பர்கள் மற்றும் சக கவர்னர்களை சந்திக்கிறேன். இந்த உடனடி இணைப்பு மற்றும் ரோட்டரியின் உலகளாவிய தொடர்பை மிகவும் விரும்புகிறேன், என்றார்.

மாவட்டத்தில் 400 புதிய உறுப்பினர்கள் சேர்த்திருப்பது மற்றும் மூன்று புதிய சங்கங்கள் உருவாக்கப் பட்டிருப்பது, மேலும் ஐந்து சங்கங்கள் உருவாக்கப் போவதால் அவர் மிகுந்த உற்சாகமாக இருக்கிறார். அவரது குழு, 250,000 டாலர்கள் TRFக்கு அளிக்க தயாராகிக் கொண்டிருக்கிறது, 15 முக்கிய நன்கொடையாளிகள் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள், அவரே 50,000 டாலர்கள் TRFக்கு நன்கொடை அளிக்க உள்ளார். மேலும் இந்தியன் புக் ஆப் ரெகார்ட்ஸில் அதிக பெண்கள் நடனமாடிய பட்டியலில் சாதனை படைத்துள்ளது. 1,700 பெண்கள் கலந்து கொண்ட, ஜோத்பூரின் பாரம்பரிய கூமர் நடன நிகழ்ச்சிக்கு, 10,000க்கும் மேற் பட்டோர் பார்வையாளர்களாக இருந்தனர்.

கைக்கழுவும் நிலையங்களை கொண்ட 100 ஹாப்பி ஸ்கூல்கள் மற்றும் ஆல்வாரில் ஒரு இரத்த வங்கியை உருவாக்குவது அவரது திட்டங்கள். ரோட்டரியின் அற்புதங் களை பற்றி பேசும்போது, ஐந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவத்தை பன்டாரி நினைவுப் படுத்தினார், இந்த அமைப்பின் மேல் நம்பிக்கை மேலும் வலுவாக்கியது. வேலூரில் உள்ள CMC மருத்துவ மனையில் அவரது மைத்துனர் எலும்பு மர்ரோவ் அறுவைச்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த போது, அவருக்கு கிட்டத்தட்ட 50 முதல் 60 யுனிட் இரத்தம் தேவைப்பட்டது. சென்னை யில் இருக்கும் DGக்கு தகவல் சொன்னேன், உடனடியாக வேலூர் மாவட்டத்தில் இருக்கும் ரோட்டரி நண்பர்களைத் தொடர்பு கொண்டு, பலர் இரத்த தானம் செய்ய முன் வந்தனர். ரோட்டரியால் மட்டுமே சாத்தியமாகும், என்றார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# மிராக்கிளுக்கு புது வாழ்வு தந்த ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு மருத்துவச் சேவைகளையும் மனிதாபிமான தொண்டுகளையும் ரோட்டரி அளிப்பதற்கு சமூக வலைதளங்கள் எப்படி ரோட்டரி சங்கங்களின் பணிகளுக்கு உதவுகின்றன என்பதற்கு இதோ ஓர் உதாரணம்.

நைஜீரியவைச் சேர்ந்த அனியாகு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு வயது குழந்தையின் பெயர் மிராக்கிள். அந்தக் குழந்தைக்கு கோல்கத்தாவில் உள்ள ஒரு மருத்துவமனையில் பேலூர் ரோட்டரி சங்கத்தின் (D 3291) உதவியோடு இதய அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. அதற்கு உதவியது ஃபேஸ்புக் தளம்தான்.



நைஜீரியாவின் மருத்துவமனையில் மிராக்கிள் அனியாகு என்ற குழந்தைக்கு அமெரிக்க மருத்துவர்கள் இதய அறுவைச் சிகிச்சை செய்வதற்கு உரிய வசதிகள் இல்லை. அதற்கு உதவும்படி இந்திய அமெரிக்கரான ஹர்ஷத் ரவேஷியா தனது ஃபேஸ்புக் வலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

ரவேஷியா அமெரிக்கா, ஹூஸ்டன் ரோட்டரி E-சங்கத்தை (D 5450) சேர்ந்தவர். அவரது பதிவைப் படித்த பேலூர் ரோட்டரி சங்க உறுப்பினர் RK புப்னா ரவேஷியாவைத் தொடர்புகொண்டு குழந்தையின் மருத்துவ அறிக்கைகளை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொண்டார். அவை ஹவுராவில் உள்ள நாராயணா பல்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டன.


மிராக்கிளின் மருத்துவ அறிக்கைகளை ஆராய்ந்த நாராயணா மருத்துவமனை சிகிச்சை அளிக்க முன் வந்தது. குழந்தை மிராக்கிள் அனியாகுவும் அவளது பெற்றோரும் கோல்கத்தாவுக்கு அக்டோபர் 25ம் தேதி வந்தனர். குழந்தை மருத்துவமனையில் அன்றே சேர்க்கப்பட்டது. மருத்துவ ஆய்வுகள் செய்யப்பட்டு, டாக்டர் தேபசிஷ் தாஸ் தலைமையிலான மருத்துவ நிபுணர் குழு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை நடத்தியது.

> *பலதரப்பட்ட கலாசாரம், இனம் ஆகியவற்றை விட மனிதாபிமானமே உயர்ந்தது என்று நிரூபித்துவிட்டீர்கள். இதை நாங்கள் வாழ்நாள் உள்ளவரை மறக்கவே மாட்டோம்.*
>
> குழந்தையின் தந்தை
> அனியாகு ஜோசப்

### அதிசயம்

குழந்தையின் சிகிச்சையின் போது நைஜீரிய குடும்பத்தினர் கோல்கத்தாவில் வசதியாகத் தங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் ரமேஷ் திவாரி, விஷ்ணு தண்டானியா ஆகியோர் செய்தனர். இந்தப் பணியில் பேலூர் ரோட்டரி சங்கத்துடன் அமெரிக்க ரோட்டரி E-சங்கமும் கிரேட்டர் நைஜீரியா ரோட்டரி சங்கமும் (D 9125) இணைந்து செயல்பட்டன.

பாட்டியாவுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதிய குழந்தையின் தந்தை அனியாகு ஜோசப், பலதரப்பட்ட கலாசாரம், இனம் ஆகியவற்றை விட மனிதாபிமானமே உயர்ந்தது என்று நிரூபித்து விட்டீர்கள். இதை நாங்கள் வாழ்நாள் உள்ளவரை மறக்கவே மாட்டோம். உங்களது பணி உலகம் முழுவதும் பிரசாரம் செய்யவேண்டிய தாகும் என்று உருக்கத்துடன் குறிப்பிட்டுள்ளார்.■




# பாலியல் வன்முறைப் பற்றி பேச தைரியம் வேண்டும்

சந்தியா ராவ்

*40 ஆண்டுகள் இடைவெளியில் இரண்டு பெண்கள் பாலியல் பலாத்காரம் பற்றி வித்தியாசமாக எழுதுகிறார்கள், ஆனால் குற்றவாளிக்கு எப்போதும் ஒரு வாய்ப்பு தரப்படுகிறது என்பதை ஒத்துக் கொள்கிறார்கள்.*

உங்கள் இளம் மகள் தான் கற்பழிக்கப்பட்டாள் என்று உங்களிடம் சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள்? சொஹைலா அப்துலாலியின் வழக்கில், அவளது தந்தை அவளை அள்ளி அணைத்துக் கொண்டார். பின்னர் அவளை தன் ஆட்கள் முன்வைத்து, அரிவாள் வைத்திருந்த நால்வர் தன்னையும் தனது ஆண் நண்பரையும் மலைக்கு மேல் கூட்டி சென்று தாக்கி தன்னை கிட்டத்தட்ட ஒன்பது-பத்து முறை கற்பழித்தார்கள் என்று அவள் கூறியதை கேட்டறிந்தார். அதன் பின் அவள் என்ன செய்வதாக இருக்கிறாள் என்பதை கேட்டார். ஆனால் இது போல் நடப்பது ஒரு விதிவிலக்கு என்பதை, சொஹைலா தனது புத்தகமான வாட் வீ டாக் அபௌட் வென் வீ டாக் அபௌட் ரேப்-இல் வெளியிட்டார், இது இந்த காலத்திற்கு ஏற்ற ஒரு புதிய புத்தகம் இது நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாக கூறும். பொதுவாக, கற்பழிப்பு பற்றி யாராவது சொன்னால் அதன் பிரதிபலிப்பாக குற்றம் காணுதல், தவறான தீர்ப்புக்கு வருதல், வெட்கப்பட வேண்டிய செயல், ஒழுக்கத்தைக் கேள்விக்குறியாக்குதல், ஒரு சமாதானமற்ற விதத்தில் “நீ தான் இப்படி ஆவதற்கு காரணம்...” என்றெல்லாம் கூறப்படுவது தான் சொஹைலா அப்துலாலியின் புத்தகம் மிகவும் முக்கியமானது மற்றும் எல்லா வயதினரும் அதை படிக்க வேண்டும் என்பதன் அவசியத்திற்கான முக்கிய காரணங்கள்.

இதன் எழுத்தாளர் ஒரு வித்தியாசமான நபர். நண்பர்களால் ஊக்குவிக்கப்பட்டவர் மற்றும் காவல் துறையினரின் நடத்தையால் ஊக்கம் இழந்த நேரத்தில், தான் அனுபவித்ததை மனுஷி ஜூன் - ஜூலை 1983 என்ற ஒரு பெண்ணிய பத்திரிகையில் எழுதினார்: மூன்று வருடங்களுக்கு முன் ஒரு கூட்டத்தால் நான் கற்பழிக்கப்பட்டேன், அப்போது எனக்கு வயது 17. எனது பெயர் மற்றும் புகைப்படம் இந்த கட்டுரையுடன் பிரசுரிக்கப்படும். சாதாரண, நேர்ப்பட்ட மொழியில், உண்மையை மிகுந்த பக்குவத்துடன் அவள் எழுதினாள்: பல சமயங்களில் மக்கள் பலர் எனது மதிப்பு மிகுந்த “கற்பை” இழந்ததற்கு பதிலாக நான் இறந்திருக்கலாம் என்றனர். நான் அதை ஒப்புக் கொள்ளமாட்டேன். எனது உயிர் மிகுந்த மதிப்புடையது.


இன்று, *#Me too* இயக்கம் மற்றும் சமூகத்தின் கொடுமையான நிலை இந்த பழைய கட்டுரையை சமூக வளைத்தளங்களில் உலவ செய்தது.

இதற்கிடையில், சொஹைலா இப்படிப்பட்ட கற்பழிப்புகள் உலகெங்கும் இந்த அளவு ஏன் நிகழ்கிறது என்பது பற்றிய ஆராய்ச்சியில் தனது வாழ்க்கையை மீட்டெடுத்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறார். ஒரு பாதிக்கப்பட்டவர், ஆராய்ச்சியாளர், ஆர்வலர் மற்றும் ஆலோசகர் போன்ற அவரது சிந்தனைகளின் விளைவு தான் இந்த வாட் வீ டாக் அபௌட்...

சொஹைலாவின் கேள்விகளால் எழுந்த ஒரு எண்ணம் இது: கற்பழிக்கபடுவது அல்லது பாலியல் வன்முறைக்கு பலியாவது அல்லது விரல்களால் துன்புறுத்தப்படுவது அல்லது கூட்டமாக சேர்ந்து பாலியல் தொல்லை தருவது பற்றி தெரியாதவர்கள் அல்லது தனக்கு நெருக்கமானவர்களில் அல்லது மிகவும் நெருக்கம் என்ற வகையில் இல்லாதவர்களில் இவை நடந்தது என்று இல்லாதவர் இருக்கிறார்களா? எனக்கு இரண்டு கைகளுக்கு மேல் தேவைப்படும் இப்படிப்பட்ட மக்களை - பெண்கள், சிறுமிகள், சிறுவர்களை எண்ணுவதற்கு - எனக்கு தெரியும்.

நீங்கள் இந்த உண்மையை அறிவது தூரத்தில் இல்லை மற்றும் இவை குடைகிற எண்ணங்கள் மிகுந்த குழப்பத்தை உண்டாக்குகிறது, உதாரணமாக, இந்த *#Me too* பிரளயம் கவலை ஏற்படுத்தக்கூடியது.

...பிரபலமான பெண்கள் சிரித்துக் கொண்டும் ஆண்களை கட்டிப்பிடித்துக்கொண்டும் இருக்கும் புகைப்படங்களை பார்க்கையிலும் பின்னர் அவர்கள் தான் தங்களை கற்பழித்தனர் என்று அவர்கள் கூறுவதும் எனக்கு ஒரு சரியான அர்த்தத்தை தருகிறது.




உங்களை காயப்படுத்திய நபரைப் பற்றி நீங்கள் குழப்பமான உணர்ச்சி களைக் கொண்டிருப்பது உங்களை குற்றவாளியாக்காது. அது உங்களை மனிதனாக ஆக்குகிறது, இது அர்த்தத்தை தர தொடங்குகிறது.

உலகெங்கும் உள்ள பாதிக்கப் பட்டவர், ஆராய்ச்சியாளர், ஆர்வலர் மற்றும் ஆலோசகர் ஆகியோரின் அனுபவத்தை மேற்கோளிட்டு காட்டுகிறார் சொஹைலா. ஒரு காட்டுவாசி பெண் காவல் நிலையத்தில் வைத்து கற்பழிக்கப்பட்ட 1970ஆம் ஆண்டு மதுரா கற்பழிப்பு வழக்கை நம் நினைவுக்கு கொண்டு வருகிறார். அவர் ஜோதி சிங் எனும் இளம் பெண்ணின் கற்பழிப்பு மற்றும் அதனால் அவர் மரணம் அடைந்ததால் நாடெங்கும் உண்டான எதிர்ப்பை நினைவுக்கூர்ந்தார். ஜம்மு காஷ்மீரில் உள்ள கதுவாவில் எட்டு வயது சிறுமி ஆசிபா கற்பழிக்கப்பட்டு தலையை மோதி சிதைத்துக் கொல்லப்பட்ட போது பெரிதாக சத்தம் இல்லை. ஆனால் இது இனவாத அம்சமான எதிர்ப்பாக நிகழ்ந்தது.

உண்மையில் *#Me too* என்ற பெயரை வடிவமைத்தது தரனா பூர்கே எனும் ஒரு கருப்பு பெண், அவர் 1997ஆம் ஆண்டு, பாலியல் அவதூறுக்கு உட்பட்ட ஒரு 13 வயதான சிறுமிக்கு ஒரு அந்தரங்கமான நம்பகத்தன்மையை தந்தவர். அவர் தனது இயக்கத்தை நானும்தான் என்று அழைத்தார். அது மட்டுமல்ல, ஏப்ரல் 2016ல், இரண்டு எழுத்தாளர்கள், ஒருவர் கொலம்பியா நாட்டவர், மற்றொருவர் மெக்ஸிகோ நாட்டை சேர்ந்தவர், இவர்கள் ட்விட்டரில் பெண்களை பாலியல் பலாத்காரம் பற்றி போடும்படி அழைத்தனர்.

பாலினம் சார்ந்த வன்முறையை எதிர்த்து நாடு சார்ந்த போராட்டங்கள் நடந்தது என்பதையும் சொஹைலா நினைவுக் கூர்ந்தார். ஆனாலும் அந்த எல்லைக்கு வடக்கில் உள்ள நமக்கு, இந்த *#Me too* இயக்கம் அதன் வகையான ஒன்றின் முதல் நிகழ்வாகும். அந்த எதிர்ப்பு பிரமிவெரா வயலட் (வயலட் ஸ்பிரிங்) என்று அழைக்கப்பட்டது.

இந்த புத்தகத்தை படிப்பதால் சிறுவர்கள் சிறுவர்களாக இருப்பார்கள் என்ற வாதம் சட்டப்பூர்வ அல்லது




ஒழுக்க நாணயமாக இருக்க முடியாது என்பதை புரிந்துக்கொள்ள உதவும். நாம் எல்லைகளை அமைக்க வேண்டும், துன்புறுத்தப்பட்டேன் என யாராவது சொன்னால் அவர்களை நாம் நம்ப வேண்டும், அவர்களை நாம் ஆதரிக்க வேண்டும் மற்றும் அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். கற்பழிப்பு இனச்சேர்க்கை அல்ல, அது பாலியல் வன்முறை, என்பதை சொஹைலா நமக்கு நினைவுப்படுத்துக்கிறார்.

நான் தோர்டிஸ் எல்வா மற்றும் டாம் ஸ்ட்ரேன்ஜர் பங்கேற்ற ஒரு TED கலந்துரையாடல் வீடியோவைப் பார்த்தேன், அதில் அவர்கள் ஒன்று சேர்ந்து எழுதிய சௌத் ஆப் பர்கிவ்நெஸ் என்ற புத்தகத்தின் வரிகள் பற்றி பேசினார்கள். பல வருடங்களுக்கு முன், 18 வயதான டாம் என்பவர் ஐஸ்லாந்தில் படிக்கும் போது, தனது 16 வயது காதலியான தோர்டிஸை பலவந்தம் செய்தார். அவர் செய்தது கற்பழிப்பு என்று அவர் ஒப்புக்கொள்ள பல வருடங்கள் ஆனது. தோர்டிஸின் ஒரு தனிப்பட்ட முயற்சியால், அந்த நடவடிக்கையை எதிர்கொள்ள சந்திக்க வேண்டும் என்று முடிவு எடுத்தார்கள், தோர்டிஸ் கற்பழிப்பு என்பது ஒரு பெண்ணின் கஷ்டம், கேட்டு பார்வையாளர்கள் கை தட்டுவதற்காக அல்ல. அது சக்தி வாய்ந்த பகிர்வு.

அகெய்ன்ஸ்ட் அவர் வில்ஸ் என்ற சூசன் பிரவுண்மில்லரின் புத்தகம் முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறையை எடுக்கும் ஒரு கருத்தரங்க படைப்பு. சஸ்பா கோஹென் புத்தகத்தைப் பற்றிய தனது விமர்சனத்தை டைம் (அக்டோபர் 2015) பத்திரிக்கையில் கூறும் போது, பிரௌன்மில்லரின் அறிவிக்கப்பட்ட நோக்கம்... “கற்பழிப்புக்கு அதன் வரலாற்றை” தருவதாகும் மற்றும் பழங்கால பாபிலோனியர்களிடமிருந்த பாலியல் வன்முறை பற்றிய விவரங்களையும், நவீன யுகத்தின் போர்க்கால கற்பழிப்பு மரபியல்களையும் பற்றிய விவரங்களையும் அவர் கூறுகிறார். கற்பழிப்பு பற்றிய அவரது முக்கியத்துவம் யுத்தத்தில் மற்றும் பிற அரசியல் மோதல்களில் தந்திரோபாயமாக இருப்பதால் பாலியல் வன்முறை என்பது ஒரு கூட்டு சமூக பிரச்சனை மற்றும் பாதிக்கப்பட்டவர்களை சிதைக்கும் பொருட்டு வேண்டுமென்றே நிகழ்த்தப்பட்ட ஒரு கணக்கிடப்பட்ட செயல். அவர் மேலும் சொல்வதாவது: இன்றைய பெண்ணியவாதிகள் “கற்பழிப்பு கலாச்சாரம்” என விவரிப்பது என்னவென்றால், ப்ரொன்மில்லரின் கற்பழிப்பு கோட்பாடு சமூக கட்டுப்பாட்டின் ஒரு கருவியாகும், சமூகத்தில் பாலின பாத்திரத்திற்கு அவர் தரும் முக்கியத்துவம் மற்றும் ஊடகங்களில் பாலியல் வன்முறையை மகிமைப் படுத்தும் அவரது விமர்சனம் ஆகும்.

தோர்டிஸ் மற்றும் டாம் லண்டன் ராயல் விழா ஹாலில் பேசிய போது, கட்டிடத்தில் பாலியல் பலாத்காரம் செய்தவன் இருப்பதை எதிர்த்து மக்கள் வெளியே கூடி எதிர்ப்பு தெரிவித்தனர். கற்பழிப்பு செய்தவன் மனிதகுலத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் கூச்சலிட்டனர். மனிதர்களுக்கு தேர்வு செய்ய பல விஷயங்கள் உள்ளது, ஆனால் கற்பழிப்பு என்பது பயங்கரமான ஒன்று.

அதனால்தான் சூசன் பிரெண்ட்மில்லரின் என்னுடைய நோக்கம்... கற்பழிப்புக்கு அதன் வரலாற்றை கொடுப்பது தான். இப்போது நாம் அதன் எதிர்காலத்தை மறுக்க வேண்டும் என்ற கடைசி வார்த்தைகள் தகுதியானவை ஆகின்றன.■



**RC கும்பகோணம் சக்தி** — D 2981
சுமார் 2,000 கல்லூரி மாணவர்களும், சங்க உறுப்பினர்களும், இன்னபிற தரப்பினர்களும் கைகோர்த்து, சுவச் பாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக சாலைகளைத் துப்புரவு செய்தனர். சேவை செய்தவர்களுக்கு கையுறைகள், துணிப்பைகள், சிறு பலகாரங்கள் போன்றவற்றை ரொட்டேரியன்கள் தங்கள் செலவில் வழங்கினர்.

D 2982
RISAO ஏற்பாடு செய்த ஒரு CSR சந்திப்பைத் தொடர்ந்து, DG நிர்மல் பிரகாஷ் ரோட்டரி - CSR கூட்டுறவு சேவை பற்றி ஒரு பாசறை நடத்தினார். ஏறக்குறைய 100 பங்கேற்பாளர்கள் அதில் கலந்துகொண்டு, சங்கத்தின் திட்டப்பணிகள் பற்றி தங்கள் ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டனர். DGE Dr A K நடேசன், DGN வெங்கடேசன், PDG R வாசு ஆகியோரும் பாசறைக்கு வருகை தந்தனர்.






**RC வால்டயர்** — D 3020
ஆலிவர் பள்ளியில் DG விஸ்வநாத் ஒரு பல் மருத்துவ முகாமை திறந்துவைத்தார். அங்கே மூன்று மருத்துவர்கள், மாணவர்களுக்கு வாய்ச் சுகாதாரத்தைப் பரிசோதித்தார்கள். பற்பசைகளும், பல்துலக்கிகளும் அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

**RC மதுரை இன்னவேட்டர்ஸ்** — D 3000
'குயிஸ்ஸர்தண்டா' என்ற நிதித் திரட்டும் நிகழ்வில் 350க்கும் மேற்பட்ட பள்ளி அணிகள் கலந்துகொண்டன. TN சேம்பர் ஆஃப் காமர்ஸ் கட்டிடத்தில் நடந்த அந்நிகழ்ச்சிக்கு DGE டாக்டர் ஜமீர் பாஷாவும், மாநகர ஆணையர் அனீஷ் சேகரும் கௌரவ விருந்தினர்களாகப் பங்குபெற்றனர்.



# சங்க சேவைகள்

**RC சூரத் ரவுன்டு டவுன்** — D 3060
இந்தச் சங்கம் சுமார் ரூ.13 லட்சம் மதிப்புள்ள இரண்டு டயாலிசிஸ் எந்திரங்களை ஜீவன் ஜோத் ஹெல்த் சென்டருக்கு வழங்கியது. நன்கொடை வழங்கும் நிகழ்ச்சியில் PDGகள் ருச்சிர் ஜானி, பரத் சோலாங்கி ஆகியோர் கலந்துகொண்டனர்.



**RC ஜலந்தர்** — D 3070
16 விசேஷப் பள்ளிகளின் மாணவர்களுக்கு சீருடைகளும், பைகளும் வழங்கப்பட்டன. இந்தத் திட்டம், அந்நகரத்தின் மக்கள் மத்தியில் ரோட்டரிக்கு நற்பெயர் சேர்த்தது.



**RC கார்னல் மிட் டவுன்** — D 3080
கேரளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வெள்ள நிவாரணப் பொருட்கள் அடங்கிய வேனை DG பிரவீன் கோயல் கொடியசைத்து அனுப்பி வைத்தார். இதில் 50 நிவாரணப் பொதிகள் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு ஜோடி பாய்கள், போர்வை, ஒரு பேன்ட், சட்டை, ஒரு சல்வார் சூட், குழந்தைகளுக்காக இரு ஜோடி ஆடைத் துணிகள், பிறந்த பச்சிளங் குழந்தைக்கு ஒரு உடை, நான்கு ஜோடி ஷூக்கள் ஆகியவை அதில் அடக்கம்.

**RC முராதாபாத் வெஸ்ட் சோனாக்பூர்** — D 3100
பரிசோதனை முகாமில் மாதவிடாய்ச் சுகாதாரம், கருப்பைவாய் புற்றுநோய், இரத்தச்சோகை ஆகியவை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது, அதில் சங்க பிரசிடென்ட் பபிதா குப்தா உரையாற்றினார். PAC பெட்டாலியனில் 500 பெண் சிப்பாய்களுக்கு ஹீமோகுளோபின் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.




**RC பரேலி** — D 3110
பரேலியில் பொது மக்களுக்காக ஒரு பூரண மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. சிறியவர்களுக்கு மருந்துகளும், விட்டமின் மாத்திரைகளும் வழங்கப்பட்டன.





**RC பூனா ஸ்போர்ட்ஸ் சிட்டி** — D 3131
உலகளாவிய மானியத் திட்டப்பணியின் கீழ், RC அனுத், D 3131, RC ஃபோர்ட் காலின்ஸ் பிரேக் ஃபாஸ்ட், D 5440 உடன் சேர்ந்து, வறட்சியால் பாதிக்கப் பட்ட பிங்கோரி கிராமத்தை வளமான வயல்வெளியாக மாற்றிவிட்டது. குளத்தைத் தோண்டி தூர்வாரிய பிறகு, 50 ஏக்கர் நிலப்பரப்புக்கு ஒரு தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பு நிறுவப்பட்டது. ரூ.24 லட்சம் செலவில் 2,500க்கும் மேற்பட்ட கிராமவாசிகள் பயனடைந்தனர்.



**RC கல்யாண் டைகர்ஸ்** — D 3142
23 பள்ளிகளைச் சேர்ந்த 2,500க்கும் மேற்பட்ட மாணவர் களுக்கு புத்தகங்களும், ஏடுகளும் வழங்கப்பட்டன. தங்கள் ஹேப்பி ஸ்கூல் திட்டத்தின் ஒரு பகுதியாக, ரொட்டேரியன்கள் அவர்களுக்கு நல்ல வாசிப்புப் பழக்கங்கள் பற்றி ஆலோசனைகள் அளித்தனர்.



**RC குண்டக்கல்** — D 3160
ஒரு சிறுநீரக நல முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது, அதில் அனந்தபூரைச் சேர்ந்த டாக்டர் M வெங்கட ஹரீஷ் நோயாளிகளைப் பரிசோதித்தார். அவர்களில் சிலர், சிகிச்சைக்காக உள்ளூர் மருத்துவமனைக்கு பரிந்துரைத்து அனுப்பி வைக்கப்பட்டனர்.




**RC திருப்பதி** — D 3190
கேரளத்தின் மன்னார், சங்கனாச்சேரி போன்ற இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ எலக்ட்ரிஷன்களும் பிளம்பர்களும் அடங்கிய ஒரு குழு அனுப்பப்பட்டது, இதற்கு RC சேர்தலா, D 3211 ஆதரவு அளித்தது.



**RC இரிஞ்சாலக்குடா** — D 3201
தான்யதான் என்ற டிஸ்ட்ரிக்ட் திட்டப்பணியின் கீழ், அங்குள்ள சங்கத்தினர், கேரளத்தைப் பாதித்த வெள்ளத்தின் போது ஒரு பள்ளியில் தஞ்சம்புகுந்த 35 குடும்பங்களுக்கு அரிசியும், இதர மளிகைச் சாமான்களும் வழங்கினர்.



# சங்க சேவைகள்

**RC கடையநல்லூர்** — D 3212
குறைந்த வருவாயை ஈடுகட்டி தங்கள் குடும்பங்களை கவனித்துக் கொள்ளும் வகையில் வறியவர்கள் சிலருக்கு ஆடுகள் வழங்கப்பட்டன.



**RC வாணியம்பாடி மிட் டவுன்** — D 3231
Dr அகர்வால் கண் மருத்துவமனையுடன் சேர்ந்து பிரிட் மெட்ரிக் பள்ளியில் கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ், கான்கார்டியா ஏகு பள்ளியில் ஒரு டிஸ்ட்ரிக்ட் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.





**RC பாட்னா** — D 3250
பவள விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, சங்கத்தினர் சஹாரா விருதா ஆசிரமம் என்ற முதியோர் இல்லத்துக்கு ஆதரவு அளித்தனர். இதற்கென்று மருத்துவப் பரிசோதனைகள், சமையல் பாத்திரங்கள், புதிய துணிமணிகள், துப்புரவுப் பொருட்கள் போன்றவற்றை வழங்கினர்.




**RC சுந்தர்கர் டவுன்** — D 3261
ஸ்போர்ட்ஸ் காம்ப்ளெக்ஸில் மரம் நடுவோம் இயக்கம் நடைபெற்றது. அதில் விடுதி மாணவர்களும், ரொட்டேரியன்களும், ஆசிரியர்களும் அந்த வளாகத்தில் 100க்கும் மேற்பட்ட வகையான செடிகளை நட்டனர்.




**RC கொல்கத்தா கன்குர்காச்சி** — D 3291
சங்க உறுப்பினர்கள் டெக்னோ இந்தியா ரோட்டராக்டர்களுடன் இணைந்து நியு டவுன் ரஜர்ஹாட் இடத்தில் 30 மரக்கன்றுகளை நட்டனர். PDG சியாமஸ்ரீ சென் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# கையடக்க கையேடு

சந்தியா ராவ்

இந்த புத்தகத்தின் அட்டை இன்றைய நாகரீகத்தில் இல்லாத பழைய பாணியில் இருந்தாலும்-இந்தியாவின் எந்தப் பகுதியையும் சாராத ஒரு இளைஞர் குழுவை பற்றி சொல்வதைத் தவிர - தலைப்பு இது பதின்ம வயதினருக்கு மற்றும் பதின்ம வயதினரோடு பழகுபவர்களுக்கான புத்தகம் என்று தெளிவுபடுத்துகிறது. ‘நடைபழகும் குழந்தைகளை’ நாம் மிகவும் கவனமாக கையாளுவது போல பதின்மவயதினரையும் அணுகவேண்டும். சரி, ஒரு வழியாக, ஒருவரின் வாழ்வில் சிக்கலான வயதில் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளைக் கையாள ஏதுவாக ஒரு புத்தகம் வந்துள்ளது. அது மட்டுமல்ல, இந்தியாவில் இளைஞர்கள் மற்றும் முதியவர்களிடையே பொது மற்றும் நடைமுறைக்கு ஏற்ற கல்வி குறைவாக இருப்பதையும், பாலியல் கல்வி மற்றும் அது பற்றிய தகவல்களைப் பற்றி பேச ாமல் இருப்பதைப் பற்றி நிறைய பேர் கவலை கொள்வதையும் கவனத்தில் கொண்டு, ஒரு கருணையுடன் எழுதப்பட்ட, அனைத்து வயதினருக்குமான ஒரு அறிவுப்பூர்வமான கையேடு.

ஆசிரியர், கிராடியன் வாஸ், ஒரு பெண் மற்றும் ஆண் வளரும்போது ஏற்படும் உடல்மாற்றங்களைப் பற்றி முதலில் சொல்லி நேரடியாக களத்தில் இறங்குகிறார். இந்த சிக்கலான மற்றும் பயனுள்ள தகவல் எளிமையாகவும் நேரடியாகவும், வரைபடங்களுடன் சொல்லப் படுகிறது. ஹார்மோன்கள், உடலில் ஏற்படும் மாற்றங்கள், மாதவிடாய் காலம், விறைப்பு மற்றும் விந்து வெளியேற்றம், சுயஇன்பம் போன்ற பல விஷயங்களைப் படிப்பவர்களால் புரிந்து கொள்ள முடிகிறது, இந்த விஷயங்களை சில பெற்றோர்கள் மற்றும் குறைவான ஆசிரியர்களே அவர்களின் குழந்தைகளுக்கு விளக்கமளிக்கத் தேவையான பக்குவத்தையும் கொண்டவர்கள்.

தகவல் நோக்கில் இருந்தாலும் கூட, எளிமையாக படிக்க ஏதுவாக இருக்கிறது. நன்றாகவும் ஆரோக்கியமாகவும் சாப்பிடுவது, ஆரோக்கியமாக இருப்பது, உங்கள் உணர்வுகளை அறிந்துணர்தல், தனிமை, மற்றும் கூச்சத்தை கையாள்வது, மன அழுத்தம், தோற்றம் மற்றும் சுய மரியாதை, தற்கொலை எண்ணங்கள், வன்முறை, போதை, துஷ்பிரயோகம், நண்பர்கள், உடல் ஈர்ப்பு, காதல், பாலியலால் பரவும் நோய்கள், ஒரே பாலின உறவுகள் போன்ற சிக்கல்கள் அனைத்தையும் தெளி வாகவும், நடுநிலையாகவும், முக்கிய மாக எந்த தீர்ப்பும் இல்லாமல் கையாள் கிறார் ஆழ்ந்த பார்வை மற்றும் பயனுள்ள புத்தகத்திற்கு இது தான் அனுகூலம்.

உதாரணமாக, துன்புறுத்தலை எடுத்துக்கொண்டால், உடல் ரீதியாகவும் வார்த்தை, சமூக மற்றும் இணைய ரீதியாகவும் துன்புறுத்தல் உள்ளன. புத்தக ஆசிரியர், துன்புறுத்தல் எங்கே எப்போது நடக்கிறது மற்றும் ஒருவன் ஏன் அதை செய்கிறார் என்பதை விவாதிக்கிறார். மிரட்டுபவர்களை எதிர்த்து நிற்க சில வழிகளானது அவர்கள் சொல்வதைக் கேட்பதோ, பலவீனமாகவோ அல்லது பயத்தோடும் செயல்படுவது இல்லை, ஒரே குத்தில் தூக்கிப் போட கற்றுக்கொள்வது, தனியாக இல்லாமல் இருப்பது, ஆத்திர மூட்டலுக்கு பதில் அளிக்காமல் இருப்பது, ஆன்லைன் மிரட்டல்காரர்களைப் புறக்கணிப்பது, நீங்கள் நம்புவோருடன் அனுபவத் தைப் பகிர்வது. அனைத்தும் நியாய மான மற்றும் சாத்தியமான தீர்வுகள்.




**டீன் டைம்ஸ்:** *ஆன்ஸர்ஸ் எவ்வரி டீன் கொஸ்டீன் ஃபிராங்ளி அண்ட் எக்ஸ்ப்ளிசி ட்டிலி பட் வித் சென்ஸிடிவிட்டி,* **ஆசிரியர்:** *கிராடியன் வாஸ், ப்ளூஸம்ஸ் புக்ஸ், 2017, பக்கங்கள் 221, ரூ.299*

ஒரே பாலின உறவுகளைப் பற்றிய அத்தியாயம் பாலியல் நோக்கு தொடர்பான தகவல்களை வழங்குகிறது. இது மிகவும் சுருக்கமானதாக இருந்தாலும், ஹோமோஃபோபிக்கான (ஓரினச் சேர்க்கை பற்றி பயந்த) சமுதாயத் தின் ஒரு சூழலில், மிகவும் குறைவாக இருக்கும், இந்த சிறிய தகவல் கூட வாசகர்கள் மனதை விரிவுபடுத்த உதவும். உச்சநீதி மன்றத்தின் வயதுவந்தவர்கள் ஓரினச் சேர்க்கை ஒரு குற்றம் அல்ல, பாலியல் சார்பு இயல்பானது என்ற சமீபத்திய வரலாற்றுத் தீர்ப்பைப் புரிந்துகொள்வதற்கு இது உதவும்.

இந்த புத்தகத்தில் உள்ள இடைவெளி, நிறைய தகவல் வெளிநாடுகளில் மேற்கொள்ளப் படும் ஆராய்ச்சிகள், குறிப்பாக மேற்கு நாடுகளில் உள்ள தகவல் களின் அடிப்படையில்தான் உள்ளது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குத் தேவையான ஆய்வுகள் மற்றும் கலாச்சார அனுப வங்களைப் பற்றிய குறிப்புக்கள் இந்த புத்தகத்திற்கு அதிக பங்களிப்பு செய்திருக்க வேண்டும். மீண்டும், இந்த புத்தகம் இன்னும் சமகால பாணியில் தொகுக்கப்பட வேண்டும். ஆனால், நீங்கள் ஒரு புத்தகத்தை அதன் அட்டையால் எடை போட விரும்பவில்லை என்றால், பிறகு அதை ஆலோசிக்க வயது ஒரு பொருட்டல்ல.■

Rotary PEOPLE OF ACTION

# குதூகலமான சவாரி

ரோட்டரி செய்திக்குழு



மெட்ராஸ் டெம்பிள் சிட்டி ரோட்டரி சங்கம் 2018-19ம் ஆண்டுக்காக ‘சின்னஞ்சிறு இதயங்களுக்கோர் அருமருந்து’ என்ற முன்னோடித் திட்டத்தைத் துவக்கி வைத்தது. பிறவியிலேயே இதய நோயுள்ள குழந்தைகளின் நலனுக்காக இந்தத் திட்டப்பணி துவக்கப்பட்டது. இதன் மூலம், இத்தகு உயிருக்கு அச்சுறுத்தலான நிலைமைகளுக்குக் குனமளிக்கத் தேவைப்படும் விலையுயர்ந்த மருத்துவத்துக்கும் அறுவைசிகிச்சைகளுக்கும் செலவுசெய்ய வசதியில்லா தோரின் குழந்தைகளுக்கு சிறப்புக் கவனம் அளிக்கப்படுகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் பிறக்கும் 2 கோடி 80 லட்சம் குழந்தைகளில் சுமார் 1,80,000 பேர் பிறவியிலேயே இதய நோய்கள் கொண்டிருக்கிறார்கள் என்று நம் சங்கம் நடத்திய ஆராய்ச்சி ஒன்று மதிப்பிடுகிறது. இக்குழந்தைகள் இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமானால், ஆரம்ப கட்டத்திலேயே நோயைக் கண்டறிவதும், உரிய நேரத்தில் பொருத்தமான சிகிச்சை அளிப்பதும் அவசியம்.

இந்நிலையில், ரோட்டரி சங்கம், சென்னையிலுள்ள இத்தகு குழந்தைகளுக்கு அறுவைசிகிச்சை செய்ய முன்வரும் மருத்துவர்களுடன் கைகோர்த்துள்ளது. “நாங்கள் இதுவரை ஏற்கனவே ஏழு இதயச் சிகிச்சை களுக்கு நிதியுதவி அளித்திருக்கிறோம், அதில் இரண்டு பெரிய ஓபன் ஹார்ட் சர்ஜரிகளும் அடங்கும்’’ என்று சங்கத்தின் முன்னாள் பிரசிடென்ட் டாக்டர் பிரித்திகா சாரி கூறினார்.



*RC மெட்ராஸ் டெம்பிள் சிட்டி உதவியுடன் இதய அறுவை சிகிச்சை பெற்ற குழந்தைகள்.*

இச்சங்கத்தினர், ஆகஸ்ட் மாத இறுதி வாரத்தில் மெட்ராஸ் வீக் என்ற விழாவை கொண்டாடினர், அதில் சென்னை யிலுள்ள ஓர் அரசி னர் பஞ்சாயத்துப் பள்ளியைச் சே ர்ந்த 63 குழந்தைகளுக்கு மெட்ரோ கொண்டாட்ட சவாரியை ஏற்பாடு செய்திருந்தனர். சவாரிக்குப் பிறகு, அவர்கள் தங்கள் ஆண்டுவிழாச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக கிண்டி குழந்தைகள் பூங்காவிற்கும், மெரினா கடற்கரைக்கும் அழைத்துச் செல்லப்பட்டு சிறுபலகார விருந்து அளிக்கப்பட்டனர்.■

# நாற்பதுக்கு பிறகும் ஆரோக்கியம்

ஷீலா நம்பியார்

வயதாக வயதாக நமது உடலும் மாறிவிடுகிறது. நல்ல தரமான வாழ்க்கை வாழ்வதற்கு நாமும் அதற்கேற்ப மாற வேண்டியுள்ளது. இந்த மாற்றங்கள் எல்லாமே முக்கியமாக ஹார்மோன்களால்தான் ஏற்படுகின்றன. பெண்களின் உடலில் ஈஸ்ட்ரோஜன் (Estrogen) எனப்படும் ஹார்மோன் குறைவதால் மாதவிடாய்க் காலம் நின்றுவிடுகிறது. அதைப் போல் ஆண்களிடம் டெஸ்டோஸ்டெரான் எனப்படும் ஹார்மோன் குறைவதால், வயதாவதற்கான அறிகுறிகள் உடலில் தோன்ற ஆரம்பித்துவிடும். மன நிலையில் மாற்றம் ஏற்படும். தசைகள் தளர்ந்துவிடும். நினைவாற்றல் குறைந்துவிடும்.

ஆரோக்கியமாக இருப்பது என்றால் உடல் மட்டுமல்ல. உணர்வு, சமூகம், ஆன்மிகம், அறிவு, நிதி நிலை ஆகியவற்றிலும் ஆரோக்கியமாக இருப்பதாகும். மிக முக்கியமானது எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பது; அர்த்தமுள்ள செயல்களில் ஈடுபடுவது ஆகும்.

அப்படி வாழ்க்கை வாழ்வதற்கு இதோ சில யோசனைகள்:

### உங்களது எடை

உடல் எடையைச் சீராக வைத்திருப்பது ஆரோக்கியமாக வாழ்வதற்கு முக்கியமாகும். எடை அதிகரித்தால், இதயத்துக்குப் பாதிப்பு. ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், பக்கவாதம், தூக்கமின்மை ஆகிய பிரச்சினைகள்.

எடைக் குறைப்பு என்பது கூட கொழுப்பைக் குறைப்பதாகத்தான் இருக்க வேண்டும். தசைக் குறைப்பாக இருக்கக் கூடாது.

வயதானால் உடலின் வளர்சிதை மாற்ற வேகம் குறையும். எடைப் பயிற்சி மூலம் தசையின் திசுக்கள் சீராக இயங்காவிட்டால் இது நிச்சயம். வயதாகும்போது எடை கூடுவதைத் தவிர்க்க வேண்டுமானால், முறையான உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவுப் பழக்கம் தேவை.

ஆண்களுக்கு இடுப்புச் சுற்றளவு 78-90 சென்டிமீட்டராக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். பெண்களுக்கு 72-80 செமீ இருக்கலாம்.

### உடற்பயிற்சி, வலிமை, தசைத் திரட்சி

வலிமைக்கான பயிற்சி தசையின் வலிமைக்கும் திரட்சிக்கும் குறிப்பாக வயதாகும்போது மிகவும் முக்கியானது. வயதானால், தசை குறைந்து, கொழுப்பு அதிகரிக்கும். குறிப்பாக எந்தப் பயிற்சியும் செய்யாமல் இருந்தால் அப்படி நேரும். இந்தியர்களின் உடலில் குறைவான தசைத் திரட்சி இருப்பதால், இது பாதிப்புக்கு வழிவகுக்கும். தசை நமது உடலுக்குத் தேவை. பாதுகாப்பும் கூட, வயதானால், காயப்படுவதால் பாதிப்பைக் குறைக்கும். போதிய தசை இல்லாதது பலவீனமாகும்.

எல்லோருக்கும் எவ்வளவு எடை இருந்தாலும்,உடற்பயிற்சி அனைவருக்கும் வலுவூட்டும். அப்பயிற்சியில் இதயத்துக்கு உரிய நடை, நீச்சல், சைக்கிள் போன்ற பயிற்சிகள் தேவை. வலிமைக்கான பயிற்சி, யோகா போன்ற சில வகை பயிற்சிகளும் வாடிக்கையாக இருக்க வேண்டும்.

### வழக்கமான உடற்பயிற்சி

- மனநிலையில் முன்னேற்றம் ஏற்படுத்தும். உடலுக்குத் தேவையான என்டோர்ஃபின் சுரப்பதற்குப் பெரிதும் உதவும்.
- நினைவாற்றலைக் காத்து மேம்படுத்தும்
- கொழுப்பு அதிகரிப்பதைத் தவிர்க்கும்
- உடல் பாங்கை மேம்படுத்தும்
- வலிகளைக் குறைக்கும்
- முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தும்
- ஆயுளை அதிகரிக்கும்
- மூப்பையும் சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், உடற்பருமன், இதய நோய்கள் ஆகியவற்றைத் தவிர்க்கும்.

  சிலருக்கு உடல்நலம் குறையும்போது, வயதுக்கு ஏற்ற உடற்பயிற்சி மிக முக்கியமாகும். உடற்பயிற்சி, உணவு, வாழ்க்கை முறை ஆகியவற்றால் எதையும் கட்டுப்படுத்தலாம்.

### உங்கள் உணவுப் பழக்கம்

உணவே மருந்து, மருந்தே உணவு என்பது முதுமொழி.

என்ன சாப்பிடுகிறீர்களோ, அது உங்களது நோயைத் தவிர்க்கும்.

எடைக் குறைப்புக்காக ஒரேயடியாக பட்டினி கிடப்பது சரியல்ல. உங்களது எடையைப் பராமரிப்பதுடன் போதிய சத்து அளிக்கும் வகையிலான உணவைச் சாப்பிட வேண்டும்.

நீங்கள் சாப்பிடும் பிரெட், தானியம் போன்றவற்றில் கார்ப்போஹைட்ரேட் சத்து அளவில் கவனமாக இருக்கவேண்டும். இந்திய உணவில் இது அதிகமாகவே இருக்கும். அதிகமான காய்கறிகள், சில பழங்கள், புரதம் நிறைந்த பருப்புகள், தானியங்களைச் சாப்பிட வேண்டும். அளவோடு உண்டு, நிறைவோடு வாழப் பழகுங்கள்.

துரித உணவு வகைகள், பதனிடப் பட்ட உணவு, சர்க்கரை ஆகியவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.



**இயங்குங்கள்**

தினமும் ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்தால் போதும், உழைக்க வேண்டாம் என்று இருந்துவிடக் கூடாது. உடற்பயிற்சியுடன் உழைப்பும் தேவை. நாள் முழுவதும் ஓரிடத்தில் உட்கார்ந்தபடியே இருப்பதால், ஒரு மணி நேரம் செய்யும் உடற்பயிற்சிக்குப் பலன் கிடைக்காது.

**இயங்கியபடி இருங்கள்**

- எப்போதும் உடலை இயக்கத்தில் வைத்திருங்கள்.
- உடலுழைப்புத் தேவைப்படாத வேலையில் இருந்தால், நாற்காலியை விட்டு எழுந்து 20, 30 நிமிடமாவது நடந்து செல்லுங்கள்.
- குனிந்து நிமிர்தல், உட்கார்ந்து எழுதல் போன்ற சில உடற்பயிற்சியைச் செய்யுங்கள்.
- லிப்டுக்குப் பதில் படிக்கட்டில் ஏறி, இறங்குங்கள்.
- நின்றபடியே தொலைக்காட்சி பாருங்கள்
- நடந்தபடியே பேசுங்கள்
- டி.வி. நிகழ்ச்சியில் விளம்பரம் வரும்போது, சிறிது நடந்து பாருங்கள்.
- அதிகம் இயங்கும் வழியைக் கண்டறியுங்கள்.

**எனக்கான நேரம் என்று நேரத்தை ஒதுக்குங்கள்**

வயதாகும் போது, நமக்குக் கிடைக்கும் பெரிய வசதி போதிய நேரம் கிடைப்பதுதான். இப்போது நம் வளர்ச்சியில் கவனம் செலுத்தலாமே. நேரம் கிடைப்பதால், வாழ்க்கை நன்றாக அமையும். நம்மை நாமே புரிந்துகொள்ளுதல், ஆர்வங்களை வளர்த்துக் கொள்ளுதல், இயற்கையோடு வாழ்தல், பயணம், எளிய உடற்பயிற்சி, தியானம் ஆகியவை நல்லது.

நாற்பது வயதுகளில்தான் பணியில் தீவிரமாக இருப்போம். குறிப்பாக வேலையில் விரும்பி ஈடுபடும்போது, மூளை வேறுவிதமாகச் செயல்படும். சவால்களும் இருக்கும். அதே சமயம் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கையுடன் முரண்படும்போது, மன அழுத்தத்துக்குக் காரணமாகி விடும். உங்களுக்கான நேரத்தை உருவாக்கிக் கொள்வது மன அழுத்தத்தைச் சமாளிக்கலாம்.

**உங்களது மீது வாழ்க்கையில் கவனம் செலுத்துங்கள்.**

உங்கள் வாழ்க்கையின் இதர அம்சங்களும் மிகவும் முக்கியம். முன்பு நேரம் கிடைக்காததால் செய்ய இயலாதனவற்றைச் செய்து அறிவாற்றல், படைப்பாற்றலுடன் கூடிய வளர்ச்சி அடையுங்கள்.

**அறிவாற்றல் நலம் - மூளையைக் காப்போம்:** உடலின் இதர தசைகளைப் போல் மூளையும் தசைதான். வயதாகும்போது தளர்வதுண்டு. மூளையின் நலத்தைப் பாதுகாப்பதற்கு முயற்சி தேவை. அதில், இயற்கைச் சூழலில் நேரத்தைச் செலுத்துவது சிறந்த வழியாகும். பதற்றத்தைத் தணிக்கும், மனஅழுத்தத்தைக் குறைக்கும். கோபத்தைக் கூடக் கட்டுப்படுத்தும். தினந்தோறும் ஒரே மாதிரியான வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, மனத்தை மாற்று வழியில் செலுத்துவதும் அதன் நலத்துக்கு நலன்.

மூளைக்கு வேலை கொடுங்கள். ஆண்டுதோறும் புதிய மொழி, புதிய இசைக் கருவி பயிற்சி, புதிய உடற்பயிற்சி என்று ஏதாவது புதிதாக அறிந்துகொள்வது என்று இலக்கு நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

சிறப்பு மற்றும் உணர்வுரீதியான நலம் மற்றவர்களுடனான உங்களது தொடர்பு குறித்தது. யாருடனாவது நீங்கள் ஆத்மார்த்தமான நட்பு உறவு கொண்டிருக்கிறீர்களா? தனிமை ஆயுளைக் குறைக்கும். மனித உறவுகள் வலுப்படுத்தும். அதிலும் இந்தக் கால அவசர உலகில் அது அவசியமாகும். உங்களது குடும்பத்தையும் வேலையையும் கவனிப்பதிலேயே இருந்துவிட்டதால், இதையெல்லாம் விட்டிருப்பீர்கள். இப்போது, உறவுகளையும் நட்புகளையும் மீட்டெடுக்கும் காலம் வந்துவிட்டது. வலுவான உறவு மிக மதிப்புக்குரியது.

**யோசனை:** உறவுகளைப் பேணுவதற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். தினமும் வாழ்க்கையின் முக்கியமான உறவுக்காக நேரத்தை ஒதுக்குங்கள். சில உண்மையான ஆத்மார்த்தமான உறவுக்காக உறுதி கொள்ளுங்கள்.

அழுத்தத்தைச் சமாளிப்பீர். அழுத்தம் தவிர்க்க இயலாதது. அதை எப்படிக் கையாள்கிறீர்கள் என்பதுதான் உடல் நலத்துக்கு மிகவும் முக்கியம். அளவுக்கு அதிகமான, தவறாகக் கையாளப்பட்ட அழுத்தம் காலப் போக்கில் அறிவுத் திறன் குறையவும் வழிவகுக்கும். மன அழுத்தத்தைக் கையாள்வது ஒரு திறனாகும். பிராணாயாமம், தியானம், இசை, மசாஜ், பேசுவது எனப் பல வழிகள் உள்ளன. அவற்றில் ஈடுபடலாம். வாழ்க்கையின் முக்கியமான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளுங்கள். நல்ல காரியத்துக்கு உதவுவது முதல் தத்துவத் தேடல், ஆன்மிக வழிமுறைகள் என எதுவாகவும் இருக்கலாம்.

40 வயதுக்குப் பின் உடல் ஆரோக்கியமாக இருப்பது என்பது உடற்பயிற்சியை விட சிறந்தது. அதை உங்கள் வாழ்வில் மிகப் பெரிய அளவில் ஏற்றுக் கொள்ளுங்கள். மேலே கூறியவை உங்கள் வாழ்வு அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் வயதாகும்போது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதற்கும் தேவையான எளிமையான உத்திகள் ஆகும்.



டாக்டர் ஷீலா நம்பியார்,
வாழ்வியல் மருத்துவ நிபுணர்,
உடற்பயிற்சி ஆலோசகர், 40க்குப் பிறகும் உடல் நலம் என்ற நூலின் ஆசிரியர்.

# தியாகிகளுக்கு ரோட்டரியின் வீர வணக்கம்

V முத்துக்குமரன்

ராணுவத்தின் ஆயுதப்படையில் பணியாற்றி நாட்டுக்காகத் தங்களது இன்னுயிரைத் துறந்த வீரத்தியாகிகளுக்கு அனைத்து மத வழிபாட்டுடன் கூடிய அஞ்சலி சென்னை, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சென்னை விரிகுடா ரோட்டரி சங்கம் (RC Madras Bay City, D 3232) ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்ச்சியில் ரோட்டரி மாவட்ட ஆளுநர் பாபு பேரம் உள்ளிட்ட ரோட்டரியினர், சீருடை அதிகாரிகள், தேசிய மாணவர் படையினர் (NCC cadets), மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய பாபு பேரம், அமைதி, மோதல் தவிர்ப்பு ஆகியவை ரோட்டரியின் பிரதான கோட்பாடுகளில் ஒன்று என்றார். அனைவரும் சாதி, மத, எல்லை போன்ற குறுகிய பேதங்களைக் கைவிட்டு சிறந்த உலகம் அமையப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு புதுச்சேரி கடற்படைப் பகுதியின் ஃபிளாக் ஆபீசர் கமாண்டிங் ரியர் அட்மிரல் அலோக் பட்நாகர் பேசுகையில், சமுதாயம் மத ரீதியில் பிளவுபட்டுள்ளது. இதுபோன்ற அனைத்து சமய நிகழ்ச்சிகள் மதச் சார்பின்மை என்ற பண்பைக் கட்டிக் காக்கிறது என்றார்.

எல்லைகளைக் காக்கும் பணியில் ஈடுபடும்போது, தங்களது இன்னுயிரைத் துறக்கும் தியாகிகளை மதிக்காமல், போற்றாமல் போனால், ஒரு தேசம் சிதைந்துவிடும் என்று NCC இயக்ககத்தின் துணை இயக்குநர் கமோடர் விஜேஷ் கர்க் கூறினார். ஆயுதப் படையில் பணியாற்றியபோது உயிரிழந்த தியாகிகளின் நினைவைப் போற்றும் வகையில் அனைத்து மத வழிபாட்டு அஞ்சலி நிகழ்ச்சிக்கு அரும்பாடுபட்டு இச்சங்கம் ஆண்டு தோறும் ஏற்பாடு செய்து வருவது பாராட்டத் தக்கது என்றார். இச்சங்கம் கடந்த ஏழு ஆண்டுகளாக இத்தகைய நிகழ்ச்சியை நடத்தி வருகிறது.



*DG பாபு பேரம் மற்றும் சீருடை அதிகாரிகள் வீரதியாகிகளுக்கு நினைவஞ்சலி செலுத்துகின்றனர்.*

புகைப்படம்: V முத்துக்குமரன்

நமது வீரர்கள், கடற்படையினர், விமானப் படையினர் இடைவிடாது கண்காணித்து எல்லையைப் பாதுகாத்து வருகின்றனர். அதை உண்மையிலேயே அறிந்துகொள்ளாமல் பாதுகாப்பாக நாம் இருக்கிறோம் என்று ஆயுதப் படை தீர்ப்பாயத்தின் சென்னை பெஞ்ச் உறுப்பினர் லெப்டினன்ட் ஜெனரல் CA கிருஷ்ணன் குறிப்பிட்டார்.


கொதிக்கும் ராஜஸ்தான் எல்லைப் பகுதியோ, குளிர் வாட்டும் சியாச்சின் எல்லையோ ராணுவத்தினர் தங்களது கடமையிலிருந்து பின் வாங்குவதில்லை. நாட்டைப் பாதுகாப்பதில் உயிர் கொடுக்கும் அத்தகைய தியாகிகளின் குடும்பத்தினரின் நலனைக் காப்பது குடிமக்களின் சமுதாயத்தின் தார்மீகக் கடமையாகும்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற எத்திராஜ் கல்லூரியின் தலைவர் VM முரளீதரன் பேசுகையில், எந்தக் குழந்தையும் பிறக்கும்போது ஹிந்துவாகவோ, முஸ்லிமாகவோ, கிறிஸ்தவராகவோ பிறப்பதில்லை வளரும்போது, அக்குழந்தையிடம் மதத்தை ஊட்டுகிறோம். அது மதம் போன்றவற்றின் அடிப்படையில் மனத்தளவில் பிரிவினையை ஏற்படுத்துகிறது. ஆனால், இன்றைய இளைஞர்களிடம் பண்பு மாறுபட்டது. 2015ம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின்போது சாதி, மத எல்லைகளை மறந்துவிட்டு தொண்டாற்றியதிலிருந்து அறிந்துகொண்டேன் என்றார்.

சங்கத் தலைவர் கமோடர் KP ராமச்சந்திரன், மாவட்ட ஆளுநர் பாபு பேரம், மாவட்ட முன்னாள் ஆளுநர் ISAK நாஸர், ராணுவ அதிகாரிகள் ஆகியோர் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மலர்வளையங்களை வைத்தனர்.

அனைத்து மதங்களின் புனித நூல்களிலிருந்து சுலோகங்கள், வாசகங்கள் ஓதப்பட்டன. மத்திய சென்னை ஆதித்யா, அண்ணா நகர் ஆதித்யா, கிழக்கு RA புரம், சென்னை IT நகரம், சென்னை நுங்கம்பாக்கம், சென்னை செரினிட்டி ரோட்டரி சங்கங்கள் இந்நிகழ்ச்சியை நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தன.■

# புத்தக அலமாரி




### டைட்டன், இந்தியாவின் மிக வெற்றிகரமான நுகர்வாளர் பிராண்ட்

**எழுதியவர்:** *வினய் காமத்*
**வெளியீடு:** *ஹேச்சட் இந்தியா*
**பக்கங்கள்:** *187; ரூ.599*

நிறுவனத்தின் மேற்குழுச் சபையிலிருந்து தயாரிப்புப் பட்டறை வரையில், எப்படி டாடாவின் முழுக்க, முழுக்க இந்திய பிரான்டான டைட்டன் நம் நாட்டின் நுகர்பொருள் சந்தையில் முகவரியில்லாமல் தொடங்கி பிறகு சிகரத்தை எட்டியது என்ற கதையை டைட்டன், இந்தியாவின் மிக வெற்றிகரமான நுகர்வாளர் பிராண்டின் உள்ளே (ஆங்.) என்ற நூல் வெளிச் சத்துக்குக் கொண்டுவருகிறது. அது, புதுமை மற்றும் நிலைகுலையாத உறுதியின் கதை; மாற்று யோசனையும், விடா முயற்சியும் அடங்கிய கதை; நுணுக்கமும், துணிவும் கதாபாத்திரங்களாக உலாவரும் கதை. இது, ஒவ்வொரு வாசகருக்கும் உத்வேகமூட்டும் கதை; டைட்டன் தொடர்ந்து நகர்ந்து கொண்டிருப்பது எதனால் என்பதை அந்நிறுவனத்துக் குள் இருந்தே சொல்லப்படும் கதை.


டாடா சன்ஸ் தலைவர் N சந்திர சேகரன் முகவுரையில் சுட்டிக் காட்டுவது போல, டைட்டன் என்பது “அதன் மக்களால், அவர்களின் துடிப்புணர்வால், ஈடுபாட்டால், அசைக்கமுடியாத நம்பிக்கையால் உருவான ஒரு நிறுவனம்.’’ மேலும், இந்தப் பயணம் எப்படி 30 வருடங்களுக்கு முன்னால் கைக்கடிகாரத் தயாரிப்பில் தொடங்கி, பிறகு 1995ல் தானிஷ்க் என்ற பிரான்ட் பெயரில் நகை ஆபரணங்களுக்கும், பின்னர் கண்ணாடிகள், நறுமணப் பொருள்கள், இப்போது புடவைகள் போன்ற பிற ஆடை அணிகலன்களுக்கும் கிளைவிட்டுப் பரவி, தமது தயாரிப்புப் பொருள் இலாகாவில் மொத்தம் 15 பிரான்ட்களை உட்படுத்தியுள்ளது என்பதை விவரிக்கிறார் காமத்.

### அதிர்ஷ்டச் சிப்பாய் (ஆங்.)


**எழுதியவர்:** *அலெக்ஸ் ரூதர்போர்டு*
**வெளியீடு:** *ஹேச்சட் இந்தியா*
**பக்கங்கள்:** *429; ரூ 599*

1744ம் ஆண்டு, நிக்கோலஸ் பாலன்டைன் என்றதொரு ஸ்காட்லாந்து இளைஞன் தன் வம்சா வழிப் பண்ணைக்கு ஜமீனாகும் கனவில் மிதக்கிறான். ஆனால் விதி அவனை எதிர்பாராத விதமாக வின்செஸ்டர் என்ற ஹிந்துஸ்தானத்துக்குப் புறப்படும் கப்பலில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அவன் அங்கே கிழக்கிந்திய கம்பனியின் பணியிலமர்ந்து ‘எழுத்தாளராக’ தன் புதிய வாழ்வை தொடங்க நாடுகிறான். கப்பலில் அவன் ஆர்வத்துடிப்பான ஆனால் நிலையற்ற ராபர்ட் கிளைவை சந்திக்க நேர்கிறது. அவர், எது எப்படியோ, இந்தியா எனும் வளமான வாய்ப்புள்ள பூமிக்குப் போய் வளம் கொழித்திட வேண்டும் என்பதில் வைராக்கியமாக இருக்கிறார்.

கலைநுட்பத்துடன் கட்டமைக்கப் பட்டு, இந்தியாவை பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உலுக்கிய பாரதூரமான நிகழ்வுகளுக்கு உயிர்த்துடிப்பு கொடுத்துள்ள ஒரு வசீகரமான யுகத்தின் புராணக் கதை.




### குரு, பண்டைய ஞானத்துக்கு பத்து கதவுகள் (ஆங்.)




**எழுதியவர்:** H S *சிவபிரகாஷ்*
**வெளியீடு:** *ஹேச்சட் இந்தியா*
**பக்கங்கள்:** *186; ரூ.399*

நீங்கள் ஆன்மீக வாழ்வைத் தொடங்குவதாக இருந்தாலும் சரி அல்லது இந்திய ஆன்மீக மரபின் அடிப்படைத் தத்துவங்களை புரிந்துகொள்ள விரும்பினாலும் சரி, பெயர்பெற்ற நாடகாசிரியரும் ஆன்மீக வழிகாட்டியுமான H S சிவாபிரகாஷின் புத்தகம் நிச்சயம் உங்கள் பாதைக்கு வெளிச்சமூட்டும். அதில், வாயில்களின் உவமையைப் பயன்படுத்தி வாசகர்களுக்கு வெவ்வேறு ‘அறைகள்’ திறந்துவிடப் படுகிறது, அவை ஒவ்வொன்றும் அதனுள் இருக்கும் ஆன்மீக உண்மைகளை ஆராய்ந்து அனுபவிக்க வாய்ப்பளிக்கிறது. மேலும், எப்படி ஆன்மீகத் தத்துவங்கள் மட்டுமே பக்தனை இறுதி இலக்கான இறைச் சங்கமத்துக்கு வழிவகுக்கிறது என்பதையும் கற்றுக்கொள்ள முடிகிறது.■

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

# RC ஜாம்ஷெட்பூர் இதய ஆரோக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது

ரோட்டரி செய்திக் குழு




இந்தியாவில் இருக்கும் பழமையான சங்கங்களில் ஒன்றான, ஜாம்ஷெட்பூர் ரோட்டரி சங்கம், D 3250, இந்தியாவில் மாரடைப்பு அதிகரித்து வருவதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த, செப்டம்பர் மாதம் உலக இதய தினத்தன்று, ஒரு பேரணி நடத்தி எஃகு நகரத்துக்குச் சிகப்பு வண்ணம் பூசினார்கள்.

ஜம்ஷெட்பூரில் உள்ள ஏழு ரோட்டரி சங்கமும் இந்தப் பேரணியில் பங்கேற்றது, ப்ரெசிடென்ட் கெட்டி பத்தெனனாவிற்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. சிகப்பு ஆடை அணிந்திருந்த ரோட்டரி உறுப்பினர்கள்,' உலக இதய தினம், உங்கள் இதயத்தைக் கவனித்துக்கொள்ள வாக்குறுதி எடுத்துக் கொள்ளுங்கள்' என்று விளம்பரப் பலகைகளை ஏந்திச் சென்றார்கள்.

இந்த பொதுமக்கள் விழிப்புணர்வு பேரணியில், ஆரோக்கியமான உணவை உட்கொள்வது சுறுசுறுப்பாக இருப்பது மற்றும் புகையிலையை தவிர்ப்பது போன்றவற்றின் மூலம் தங்களின் இதயங்களை பாதுகாக்கத் தேவையானவற்றில் கவனம் செலுத்த கோஷங்கள் எழுப்பப்பட்டது என்று கிளப்பின் உறுப்பினர் மற்றும் இதய மருத்துவரான விஜய பாரத் கூறினார்.




உலக இதய தினமான, செப்டம்பர் 29 அன்று, உலகம் முழுவதுமுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டிடங்கள், சிகப்பு நிறத்தால் ஒளி ஏற்றப்பட்டதை முன்னிட்டு, இந்நிகழ்வின் அடையாளமாக, பிஸ்டுபூர் நகர மையத்தில் ரோட்டரி கடிகாரக் கோபுரம் சிவப்பு நிறத்தில் ஒளி ஏற்றப்பட்டது.

# ட்விட்டர் பாடங்கள்

TCA ஸ்ரீனிவாச ராகவன்

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நான் டிவிட்டரில் பின் தொடர்பவர்களுக்காகக் காத்திருந்தேன். சில மாதங்களுக்குப் பிறகு தெளிவாகப் புரிந்தது, அங்கே என்னைப் பற்றி யாருக்கும் சரியாய் தெரியவில்லை, மேலும் என்னைப் பற்றி நன்றாகத் தெரிந்த சிலரும், ஏன் மேல் அக்கறை காட்டவில்லை. நான் என் கணக்கை விட்டுவெளியேறி இரண்டு மூன்று வருடங்களுக்கு அமைதியாக இருந்தேன். பிறகு ஒரு நாள் விமான நிலையத்தில், ஒரு தோழியைச் சந்தித்தேன், என் புத்திசாலித்தனத்தை பற்றி மோசமான அபிப்பிராயம் கொண்டவர். அவர் 'ட்வீட்' செய்வதைப் பார்த்து, அவரிடம், நான் மூக்கறுக்கப்பட்டதை சொன்னேன். அவர், என் போனை வாங்கி, மீண்டும் கணக்கில் நுழைந்து, என்னிடம், முட்டாளே, நீ ட்வீட் செய்யாவிட்டால், எப்படி உன்னைப் பின்தொடர்வார்கள் என்று கேட்டாள்? எப்படி ட்வீட் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார், பிறகு நான் சுறுசுறுப்பானேன். 140 எழுத்துகளில் இப்போது 280, நீங்கள் சொல்ல விரும்புவதைச் சொல்ல வேண்டும், ஒரு ஹைக்குவை விடப் பரவாயில்லை. பள்ளி மற்றும் கல்லூரியில், சுருக்கமாகப் பதில் எழுதுவதில், மிகக் குறைந்த மதிப்பெண் தான் எடுப்பேன், எனவே, இது என் திறமைக்கு ஒரு சவாலாக அமைந்தது. ஆனாலும் சுய உணர்வு, ஒரு பிரச்சனையாக இருந்தது: புத்திசாலித்தனமாக எப்படி காண்பித்துக் கொள்வது? இரண்டு வருடங்களுக்கு மிகப் புத்திசாலித்தனமாக ட்வீட் செய்தேன். யாருமே என்னைக் கண்டுகொள்ளவுமில்லை, பின் தொடரவும் இல்லை. அப்புறம் என் மகன் சொன்னான், நம்மை யாராவது பின்தொடர வேண்டும் என்றால், நாம் யாரையாவது பின்தொடர வேண்டும் என்றும், அது எப்படி என்றும் சொல்லி கொடுத்தான்.

மீண்டும் முட்டாள்தனமாக, பொருளாதார நிபுணர்களைப் பின்பற்றினேன், ஆனால் விரைவில் அவர்கள் யாரும் என் மீது ஆர்வம் காட்டவில்லை, மாறாக நானும் அவர்கள் மீது ஆர்வம் காட்டவில்லை. அவர்களைப் 'பின்தொடருவதை' நிறுத்தி விட்டு, அரசியல்வாதிகளைப் பின்பற்ற ஆரம்பித்தேன், அவர்களும் பலனளிக்கவில்லை. செய்தியை சுருக்கமாகச் சொல்வதற்கு பல வழிகளை யோசித்துக் கொண்டிருந்தேன், நான் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைந்தது, அவர்களில் 15 பேர் உறவினர்கள் மற்றும் ஐந்து பேரும் நெருங்கிய நண்பர்கள். இது முற்றிலும் நேர்மறையான விளைவைக் கொடுத்தது. இப்போது இரண்டு நிமிடங்களுக்கு ஒரு முறை தொலைப்பேசியை எடுத்துப் பார்ப்பதை நிறுத்த முடிந்தது. என் மனைவி, குறிப்பாக மகிழ்ச்சியாக இருக்கிறாள், அவள் எனக்கு, எனது கவனம் சிதறாமல், நிறையப் போதனைகள் வழங்க முடிகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், நான் படிப்படியாக ட்வீட் செய்யும் கலையை நன்றாகக் கற்று கொண்டேன்: தைரியமாக மற்றவர்கள் புத்திசாலிகள் இல்லை எனச் சொல்ல முடியும். உதாரணத்திற்கு, விபர மறியாத கருத்துக்களை வரவேற்போம், ஏனென்றால் அது முட்டாள் தனங்களை அடையாளம் காண உதவும், ட்வீட் ஒன்றை, நிறைய நபர்களால் விரும்பப்பட்டது மற்றும் சிலரால் மறு ட்வீட் செய்யப்பட்டது, எல்லாவற்றிற்கும் மேலாக, புதிதாக என்னை சிலர் பின்பற்றத் தொடங்கினார்கள். இதே போல மற்றொரு ட்வீட், ஒரு கருத்தை வெளிப்படுத்த, பொருளாதாரம், அரசியல், சமூகவியல், சட்டம் போன்றவற்றை பற்றி அதிகம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது. மாற்றொரு ட்வீட்டில், நம்மைத் திருடர்கள் ஆள வேண்டுமா அல்லது, முட்டாள்களா என்று கேட்ட போதும் இப்படி தான் நடந்தது. என்னுடைய இன்னொரு ட்வீட், முட்டாள்கள் தான் ஜிடிபி பற்றி வாதிடுவார்கள், புத்திசாலிகள், அதைப் புறக்கணிப்பார்கள், என்ற ட்வீட் மிகவும் பிரபலம் அடைந்தது.

இந்திய ஆட்சித் துறைப்பணியில் இருக்கும் ஒவ்வொருவரும், அவர்களது பெயருக்குப் பின் அந்த மூன்று எழுத்துக்களைச் (IAS) சேர்க்க வேண்டியது அவசியம் தானா என்று நான் கேட்ட மற்றொரு ட்வீட், நிறையப் பேரை கவர்ந்தது. சமீபத்தில், ரிசர்வ் வங்கியும் அரசாங்கமும் சண்டையிட்டுக் கொண்டபோது, 1931 ஆம் ஆண்டில் வங்கி அப்போதைய இங்கிலாந்தின் கவர்னர், அரசாங்கத்திற்கும் ரிசர்வ் வங்கிக்கும் இடையேயான உறவு எப்படி இருக்க வேண்டும் அவரிடம் கேட்டபோது. அவரது குறுகிய, கூர்மையான அறிவுப்பூர்வமான பதில்: ஒரு 'இந்திய' மனைவியைப் போல், அவர் அறிவுறுத்துவார், ஆனால் அவரது வழியை வலியுறுத்துவதில்லை. இதைப் பற்றிய எனது ட்வீட், நல்ல வரவேற்பை பெற்றது.

நான் தெளிவாக அந்த வித்தையைக் கற்றுக்கொண்டேன்: சுருக்கமாகவும் புத்திசாலித்தனமாகவும் இருக்க வேண்டும். உண்மையிலேயே, பலர், ஏன் புத்தகங்கள் எழுதுகிறார்கள், அவர்களது அறிவாற்றலை ஒரு ட்வீட்டில் சொல்ல முடியுமே என்றால், என்பது இப்போது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. 3300-பேர் என்னை பின் தொடர்கிறார்கள் என்பது மகிழ்ச்சியான விஷயம்.■

Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on 1st of every month
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: `35

ADVT

